வடக்கின் முதல் நாளிதழ் – Estd 1959

Reg. No. : P. 1632

விலை ரூ. 30/=

# ஈழநாடு

Eelanadu வார மலர்

Email : news@eelanadu.lk | மலர் : 05 | 12.11.2023 ஞாயிற்றுக்கிழமை | இதழ் : 336 | பக்கங்கள் : 16






07 கைகூடாத 'இரு தேச' கொள்கை



08 சம்பந்தனின் அரசியல் எதிர்காலம்?



09 அரசியல் விளையாட்டில் 'அவுட்' ஆகப் போவது யார்?



11 வடக்கில் வல்லரசுகளின் போட்டியும் தமிழ் மக்களின் நிலைப்பாடும்!

# தலைவர் பதவியை எதிர்பார்த்து மீண்டும் சு.க.வுக்குள் சந்திரிகா?

## சிங்கள ஊடகம் பரபரப்பு தகவல்



கொழும்பு, நவம்பர் 12

தலைமைப் பதவியினை குறிவைத்து மீண்டும் சிறிலங்கா சுதந்திரக் கட்சிக்குள் நுழைய முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவுடன் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரணதுங்க பேச்சு நடத்தியுள்ளதாக சிங்கள வார ஏடு ஒன்று பரபரப்பு தகவலை வெளியிட்டுள்ளது.

இது தொடர்பாக நேற்று சனிக்கிழமை வெளியான அந்த வார ஏட்டின் அரசியல் பத்தியில் மேலும் கூறப்பட்டுள்ளதாவது:

சிறிலங்கா சுதந்திரக் கட்சியில் இருந்தும் சில விசித்திரமான செய்திகள் வெளிவர தொடங்கியுள்ளன. முன்னாள் ஜனாதிபதி திருமதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரணதுங்கவுக்கும் முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவுக்கும்

15



## சொகுசு பேருந்து-கூலர் கொடிகாமத்தில் விபத்து!

யாழ்ப்பாணம், நவ. 12

கொடிகாமம் பகுதியில் தனியார் பேருந்தும் கூலர் வாகனமொன்றும் மோதி விபத்துக்குள்ளானது.

நேற்று காலை குறித்த விபத்து கொடிகாமம் புத்தூர் சந்தி இடையே இடம்பெற்றுள்ளது.

கொழும்பில் இருந்து பருத்தித்துறை நோக்கி வந்த பேருந்தும் யாழ்ப்பாணத்தில் இருந்து

15

## 2024 இன் முற்பாதியில் பாராளுமன்ற தேர்தல்?

கொழும்பு, நவ. 12

2024ஆம் ஆண்டு முற்பகுதிக்குள் பொதுத்தேர்தல் நடத்தப்படுவதற்கான சாத்தியம் பிரகாசமாக தென்படுவதாக அரசியல் வட்டாரங்களில் இருந்து அறியமுடிகின்றது.

தற்போதைய பாராளுமன்றத்தின் பதவிகாலம் 2025ஆம் ஆண்டுவரை இருந்தாலும், ஜனாதிபதி

15

## பெற்றோல், டீசல் மீதும் வற் வரி!

கொழும்பு, நவ. 12

ஜனவரி 2024ஆம் ஆண்டுக்கான பட்ஜெட்டில் வற் வரியை அதிகரிக்க அரசாங்கம் திட்டமிட்டுள்ளதுடன், பெற்றோல், டீசல் மற்றும் நிலக்கரி மீது வற் வரி விதிக்கவும் முன்மொழியப்பட்டுள்ளது.

அரச வருமானத்தை அதிகரிக்கும் நோக்கில் அடுத் தாண்டுக்கான பட்ஜெட்டில் வற் வரியை

15

## துயிலும் இல்ல காணியை விடுவிக்கக் கோரி இராணுவ முகாமுக்கு முன்பாக போராட்டம்

### தேராவில் மக்கள் நேற்று நடத்தினர்



முல்லைத்தீவு, நவ. 12

முல்லைத்தீவு மாவட்டத்தின் தேராவில் மாவீரர் துயிலுமில்ல காணியை இராணுவத்தினரிடமிருந்து விடுவிக்கக் கோரி நேற்று காலை 9.30 மணியளவில் இராணுவ முகாம் அமைக்கப்பட்டுள்ள துயிலும் இல்லம் முன்பாக போராட்டம் ஒன்று முன்னெடுக்கப்பட்டது.

முல்லைத்தீவு மாவட்டத்தில் தேராவில் மாவீரர் துயிலும்

15

## மண்மேடு சரிந்து இருவர் மரணம்!

### பதுளையில் சம்பவம்

கொழும்பு, நவ. 12

பதுளை - ஹாலிஎல, ரொக்கதென்ன தோட்ட பகுதியில் அமைந்துள்ள வீடுகள் மீது மண்மேடு சரிந்து வீழ்ந்ததில் இருவர் உயிரிழந்துள்ளதாக ஹாலிஎல பொலிஸார் தெரிவித்தனர்.

இந்த சம்பவம் நேற்று சனிக்கிழமை காலை இடம்பெற்றுள்ளது.

காயமடைந்தவர்கள் பதுளை

15




## இலங்கையில் 35 வீத ஆண்கள் 'குடிமக்கள்'!

கொழும்பு, நவ. 12

இலங்கையில் 18 வயதுக்கு மேற்பட்ட ஆண்களில் முப்பத்தைந்து சதவீதம் பேர் மதுவை பயன்படுத்துகின்றனர் என்று இலங்கை மது மற்றும் போதைப் பொருள் தகவல் மையம் தெரிவித்துள்ளது.

இலங்கையில் தனிநபர் மது பாவனை 4.3 லீற்றர் எனவும், மதுபானம் அருந்துபவர்களின் தனிநபர் மது பாவனை 18.9 லீற்றராகவும்

15

## ஜனாதிபதி-மருத்துவர்கள் கலந்துரையாடல் வெற்றி!

### சுகாதார துறை பிரச்னைகளுக்கு விரைவில் தீர்வு

கொழும்பு, நவ. 12

சுகாதார துறையினர் எதிர்கொண்டுள்ள பிரச்சினைகளுக்கு எதிர்வரும் ஒருமாத காலத்திற்குள் அரசாங்கம் தீர்வை வழங்கும் என அரச வைத்திய அதிகாரிகள் சங்கத்தின் செயலாளர் வைத்தியர் ஹரித அளுத்கே தெரிவித்தார்.

ஜனாதிபதி ரணில் விக்கரமசிங்க மற்றும் அரச வைத்திய அதிகாரிகள் சங்கம் இடையில் நேற்று விசேட கலந்துரையாடல் ஒன்று இடம்பெற்றது.

சுகாதாரத்துறையினர் எதிர்கொண்டுள்ள

15

## எனக்கு உயிர் அச்சுறுத்தல்!

### ரொஷான் ரணசிங்க பரபரப்பு குற்றச்சாட்டு



கொழும்பு, நவ. 12

இலங்கை கிரிக்கெட்டின் உறுப்புரிமையை இடைநிறுத்துவதற்கு எடுக்கப்பட்டுள்ள தீர்மானத்துக்கு எதிராக சர்வதேச கிரிக்கெட் பேரவையில் மேன்முறையீடு செய்யப்படும் என விளையாட்டுத்துறை அமைச்சர் ரொஷான் ரணசிங்க தெரிவித்தார்.

இதேவேளை, ஜனாதிபதி மீது எனக்கு நம்பிக்கை இருக்கிறது. ஆனால் ஜனாதிபதி

15

# இப்படியும் நடக்கிறது

கடந்த இரண்டு தினங்களாக இந்தப் பத்தியில் அந்த விசயத்தைத்தான் பேசிக்கொண்டிருக்கின்றோம்.

அது டான் ரிவியின் 'சொற்சமர்' நிகழ்ச்சி தொடர்பானது என்பது நீங்கள் அறிந்ததுதான்.

அந்த நிகழ்ச்சிக்கு அல்ல, அந்த நிகழ்ச்சியில் விவாதிக்கப்பட்ட விடயத்தைத்தான் நாங்கள் விமர்சிக்கின்றோம் என்கின்றனர் சிலர். சிலரோ மாணவர்களுக்கு சினிமா தொடர்பாக தலைப்புக் கொடுக்கவேண்டுமா என்கின்றனர்.

ஏன் அவர்கள் இப்படி இப்போது மட்டும் கேட்கிறார்கள்? நான்கு ஆண்டுகளாக நடக்கும் இந்த நிகழ்ச்சியில் இரண்டு ஆண்டுகளுக்கு முன்னரே பல தலைப்புக்களில் சினிமா தொடர்பாக விவாதித்தபோது ஏன் யாரும் கண்டுகொள்ளவில்லை என்பது தெரியவில்லை. அப்போதே அதனை சுட்டிக்காட்டியிருக்கலாமே என்ற அந்த நிகழ்ச்சித் தயாரிப்பாளரின் ஆதங்கம் சரியானதுதான்.

இப்போது தலையா தளபதியா என்ற தலைப்பை மட்டும் கண்டு ஏன் இப்படி கொதித்தெழுந்தார்கள் என்பது தான் புரியவில்லை. தலைப்பு தொடர்பாக இந்த ஊர்க்குருவிக்கும் விமர்சனம் உண்டு. ஆனால் உண்மையிலேயே இவர்களுக்கு அவர்கள் சொல்வதுபோல சமூக அக்கறை இருந்திருக்குமானால் அப்படி சினிமா தலைப்புக்களில் விவாதிக்கத் தொடங்கியபோதே அல்லவா கொதித்திருக்க வேண்டும்.

அது முடிந்த கதை. ஆனாலும் அந்த நிகழ்ச்சியின் நோக்கமும் அதனை வழிநடத்திய லலீசன் போன்றவர்களின் நாநூறு வாரத்துக்கும் அதிகமான உழைப்பிற்கும் இப்போது பலன்கிடைத்திருக்கின்றது என்று அவர்கள் சந்தோசப்படலாம்.

'போலித்தனங்களிலிருந்து நிதர்சனத்திற்கு' என்ற தலைப்பில் நேற்று முன்தினம் யாழ்ப்பாணம் இந்துக்கல்லுரியில் மாணவர்களுக்கான தெளிவூட்டல் கருந்தரங்கு ஒன்று நடைபெற்றிருக்கின்றது.

"சினிமாவில் கட்டமைக்கப்படும் போலித்தனம், கற்பனாவாதம் மற்றும் சமூகச் சீர்கேடுகளிலிருந்து விலத்தி மாணவர்கள் தங்களுடைய இயல்பான தன்னுணர்வில் செயலாற்றவும் ஆரோக்கியமான, நிதர்சனமான உளக்கட்டமைப்பை பேணுவதனுடாக சமூக நோக்கும் மெய்மைத் தலைமைப்பண்பும் கொண்ட நற்பிரஜைகளாக மாணவர் சமூகத்தைக் கட்டமைத்துக் கொள்வதற்கான செயல்திட்டம்" என்ற பெயரில் இந்த திட்டம் ஆரம்பிக்கப்பட்டிருப்பதாகவும் யாழ்ப்பாணம் இந்துக்கல்லூாரி தனது அந்த கருத்தரங்கு பற்றிய அறிவித்தலில் தெரிவித்திருக்கின்றது.

முதலாவது கருத்தமர்வு நேற்றுமுன்தினம் நடைபெற்றிருந்தது. அதன் வளவாளராக ஆறு திருமுருகன் கலந்துகொண்டார். நல்ல விடயம்தான். இப்போதாவது அதுபற்றி அவர்கள் சிந்தித்திருப்பது.

சினிமா மோகம் என்பது நம்மவர்களுக்கு இன்று நேற்று வந்ததல்ல. அது அறுபதுகளிலேயே வந்துவிட்டது. அதிகம் ஏன் சைவக் கோவில் திருவிழாக்களில் பாடுவதையே பிரதான தொழிலாகக்கொண்டு அந்த நாட்களில் பல இசைக்குழுக்கள் இயங்கியிருக்கின்றன. கண்ணன் கோஷ்டியும், அருணா கோஷ்டியும் பாடுகின்ற சினிமா பாடல்களைக் கேட்பதற்காகவே கோவில்களுக்கு வந்த 'பக்தர்கள்' உண்டு.

இன்று அதிகம் பேசப்படும் தலையும் தளபதியும் நடித்த படங்கள் திரையரங்குகளில் வெளியாகின்றபோது முதல் நாளே பார்த்துவிடவேண்டும் என்பதற்காக திரையரங்குகளில் கூடும் மாணவர்களை சினிமா மோகத்திலிருந்து மீட்டெடுக்க இந்துக் கல்லுாரி நினைத்திருப்பது ஆறுதல் தருகின்றது.

அதுவல்ல இன்று நாம் சொல்ல வருவது.

இன்றைய பத்திரிகைகளில், வானொலி, தொலைக்காட்சிகளில் செய்திகளை படிக்கின்ற, கேட்கின்றவர்கள் கவனித்திருப்பார்கள். அதிலும் அறுபது வயதைக் கடந்தவர்கள் கவனிக்காமல் விட்டிருக்கமாட்டார்கள்.

"ஆயிரக்கணக்கான விண்ணப்பங்கள் கிடைத்திருக்கிறது.." என்பார்கள். ஆயிரக்கணக்கான என்றால் அது கிடைத்திருக்கின்றன என்று வந்திருக்கவேண்டும். "மின்கட்டணம் அதிகரிக்கப்படுகின்றது என்று மின்சாரசபை தெரிவித்துள்ளார்..." என்பார்கள். "வீட்டிலிருந்தவர்கள் தூங்கிக்கொண்டிருந்தபோது, யன்னலை உடைத்து உள்ளே புகுந்தவர்கள் அங்கிருந்த பத்து பவுண் நகைகளை கொள்ளையடித்துச் சென்றனர்..." என்பார்கள். அதாவது அது கொள்ளை அல்ல, திருட்டு.

இவை எல்லாம் பல்கலைக் கழகங்களில் படிக்கின்ற விடயம் அல்ல. அறுபதுகளைக் கடந்தவர்கள் மூன்றாம் வகுப்பில் நான்காம் வகுப்பில் படித்திருப்பார்கள். ஆனால் இன்றைய இளைஞர்கள் இவ்வாறு தவறு செய்வது எதனால் என்பது தெரியவில்லை.

அது இப்போதைய கல்விப் பாடத் திட்டத்திலேயே இல்லையா அல்லது வகுப்பில் ஆசிரியர்கள் படிப்பிக்கின்ற போதிலும் மாணவர்கள் அதில் கவனம் செலுத்தவில்லையா? இது ஏன் நடக்கின்றது என்பதும் ஆராயப்படவேண்டியது. இந்துக் கல்லூரி போன்ற பாடசாலைகள் அது குறித்தும் ஆராயவேண்டும். சைவத்தை மாத்திரமல்ல தமிழையும் நாம் காப்பாற்றவேண்டாமா?

**- ஊர்க்குருவி.**





# முல்லைத்தீவில் மாவீரர் பெற்றோர் கௌரவிப்பு

முல்லைத்தீவு, நவ. 12

முல்லைத்தீவு பிரதேசத்திற்குட்பட்ட மாவீரர்களின் பெற்றோர்களை கௌரவிக்கும் நிகழ்வு நேற்று காலை 11 மணியளவில் தாயக மற்றும் புலம்பெயர் நினைவேந்தல் குழுவின் ஏற்பாட்டில் இடம்பெற்றது.

மாவீரர்களது பெற்றோர்கள் மங்கள வாத்தியத்துடன் அழைத்து வரப்பட்டு முதல் நிகழ்வாக உயிர்த் தியாகம் செய்த 2 மாவீரர்களின் தாயார் சதாசிவம் கமலேஸ்வரி ,முன்னாள் போராளி சி.கர்த்தகன் ஆகியோரினால் பொதுச் சுடர் ஏற்றப்பட்டு நிகழ்வு ஆரம்பித்து வைக்கப்பட்டது.

அகவணக்கம் செலுத்தப்பட்டு மலர் அஞ்சலியும் செலுத்தப்பட்டது. நிகழ்வின் இறுதியில் மாவீரர்கள் இந்த மண்ணிற்கு ஆற்றிய உயிர்த் தியாகம் தொடர்பான நினைவுரைகள் இடம்பெற்றதுடன் பெற்றோர்கள் கௌரவிக்கப்பட்டு அவர்களுக்கான தென்னங்கன்றுகளும் வழங்கப்பட்டன.

இந் நிகழ்வில் வடமாகாண சபை முன்னாள் உறுப்பினர் துரைராசா ரவிகரன், ஜனநாயக போராளிகள் கட்சியின் செயலாளர் இ.கதிர் , கரைதுறைப்பற்று பிரதேச சபையின் முன்னாள் தபிசாளர்களான க.விஜிந்தன், க.தவராசா, பிரதேச சபையின் உறுப்பினர்கள், முன்னாள் போராளிகள், மாவீரர்களின் பெற்றோர்கள், சமூக செயற்பாட்டாளர்கள் என பலரும் கலந்து கொண்டனர்.

# தேவிபுரம் மாவீரர் துயிலும் இல்லத்தில் மாவீரர்களுக்கு அஞ்சலி செலுத்தப்பட்டு சிரமதான பணிகள் ஆரம்பம்

முல்லைத்தீவு, நவ. 12

முல்லைத்தீவு மாவட்டத்திலுள்ள மாவீரர் துயிலும் இல்லத்திலும் நினைவேந்தலுக்கான முன்னேற்பாடுகள் இடம்பெற்று வருகின்றன.

இதற்கமைய முல்லைத்தீவு மாவட்டத்தில் தேவிபுரம் மாவீரர் துயிலும் இல்லத்தில் மாவீரர் நினைவேந்தலை நடத்துவதற்கான சிரமதான பணிகள் தேவிபுரம் மாவீரர் துயிலும் இல்ல பணிக்குழுவினரால் நேற்று சனிக்கிழமை ஆரம்பிக்கப்பட்டது.

முன்னதாக மாவீரர்களுக்கு ஈகச்சுடர் ஏற்றி அகவணக்கம் செலுத்தி மலர்வணக்கம் செலுத்



தப்பட்டதை தொடர்ந்தே சிரமதான பணிகள் முன்னெடுக்கப்பட்டன. (அ)

# நிலாவெளியில் போதைப்பொருளுடன் உப பொலிஸ் பரிசோதகர் சிக்கினார்!

திருமலை, நவ. 12

போதைப்பொருளை வைத்திருந்ததாக கூறப்படும் உப பொலிஸ் பரிசோதகர் ஒருவர் போதைப்பொருள் தடுப்புப் பிரிவின் அதிகாரிகள் குழுவொன்றினால் நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை கைது செய்யப்பட்டார்.

திருகோணமலை நிலாவெளி பொலிஸ் குற்றப் புலனாய்வுப் பிரிவின் உப பொலிஸ் பரிசோதகரே இவ்வாறு கைதுசெய்யப்பட்டுள்ளதுடன் அவரிடமிருந்து 25 கிராம் ஐஸ் போதைப் பொருள் மீட்கப்பட்டுள்ளது.

கைதுசெய்யப்பட்ட உப பொலிஸ் பரிசோதகரிடம் மேலதிக விசாரணைகளை போதைப்பொருள் தடுப்புப் பிரிவின் அதிகாரிகள் மேற்கொண்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (அ)

# மோட்டார் சைக்கிள் மோதி பெண் பலி!

கொழும்பு, நவ. 12

புத்தளம் - சிலாபம் பிரதேசத்தில் அம்மன் கோயில் வீதியில் மோட்டார் சைக்கிள் மோதி பெண் ஒருவர் உயிரிழந்துள்ளதாக சிலாபம் பொலிஸார் தெரிவித்தனர்.

உயிரிழந்தவர் சுமார் 75 வயதுடைய பெண் ஆவார்.

குறித்த விபத்தானது குருநாகல் பிரதேசத்தில் இருந்து சிலாபம் நோக்கி பயணித்த மோட்டார் சைக்கிள் ஒன்று வீதியில் பயணித்த பெண் மீது மோதியதில் இடம்பெற்றுள்ளது.

விபத்தில் காயமடைந்த மோட்டார் சைக்கிளை செலுத்தியவர் மற்றும் பெண் ஆகியோர் சிலாபம் ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட நிலையில் குறித்த பெண் சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார்.

உயிரிழந்த பெண் தொடர்பில் எந்த தகவலும் கிடைக்காத நிலையில் அவரது சடலம் சிலாபம் ஆதார வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளது.

இந்த விபத்து தொடர்பில் சிலாபம் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (அ)

# பயணிகள் பஸ்களில் சி.சி.ரி.வி. கமெரா!

கொழும்பு, நவ. 12

பயணிகள் பஸ்களில் சி.சி.ரிர.வி. கமெராக்கள் பொருத்துவதை கட்டாயமாக்க பாராளுமன்றக்குழு தீர்மானித்துள்ளது.

அண்மையில் பாராளுமன்றத்தில் கூடிய எரிசக்தி மற்றும் போக்குவரத்து துறைசார் மேற்பார்வைக் குழுவே இந்த தீர்மானத்தை எடுத்துள்ளது.

பயணிகள் பஸ்களுக்கான வீதி அனுமதிப்பத்திரம் வழங்கும்போது ஜி.பி.எஸ் தொழில்நுட்பத்தை கட்டாயமாக்குமாறும் எரிசக்தி மற்றும் போக்குவரத்து துறைசார் மேற்பார்வைக் குழுவின் தலைவர் நாலக பண்டார கொட்டேகொட அதிகாரிகளுக்கு பணிப்புரை விடுத்துள்ளார்.

பயணிகள் பஸ்களில் சி.சி.ரி.வி. கமெராக்கள் பொருத்தப்படவேண்டியதன் அவசியத்தை வலியுறுத்துமாறும் அதன்படி பஸ்களில் சி.சி.ரி.வி. கமெராக்கள் பொருத்த நடவடிக்கை எடுக்குமாறும் கூட்டத்தில் கலந்துகொண்ட பொலிஸ் அதிகாரிகளுக்கு குழுவின் தலைவர் உத்தரவிட்டார்.

தற்போது நாட்டில் உள்ள பெரும்பாலான அதிவேக நெடுஞ்சாலைகள் நஷ்டத்தில் இயங்குவதாகவும், இலாபம் ஈட்டும் அதிவேக நெடுஞ்சாலைகளின் இலாபத்தில் தான் நஷ்டத்தில் இயங்கும் அதிவேக நெடுஞ்சாலைகள் பராமரிக்கப்பட்டு வருவதாகவும் இந்த நுட்டத்தின் போது தெரியவந்துள்ளது.

இதேவேளை, அனைத்து அதிவேக வீதிகளிலும் கி.யூ குறியீட்டைப் பயன்படுத்தி கட்டங்களை அறவிடுவதற்கான நடைமுறைகளை ஆரம்பிக்குமாறும் இதன்போது குழுவின் தலைவர் அதிகாரிகளுக்கு அறிவுறுத்தினார்.

# காங்கேசன்துறை போன்ற வெறும் அகழிகளே பொன்னாவெளியில் உள்ள மக்களுக்கு மிஞ்சும்

## சுற்றுச்சூழலியலாளர் ஐங்கரநேசன் எச்சரிக்கை

கிளிநொச்சி, நவ. 12

**காங்கேசன்துறை சீமெந்து தொழிற்சாலைக்காக சுண்ணக்கல் அகழப்பட்ட பகுதிகள் தற்போது எவ்வாறு உள்ள தென்பதை அனைவரும் அறியவேண்டும்.அத்தகைய சூழலே கிளிநொச்சி பொன்னாவெளியிலும் ஏற்படுமென சுற்றுச்சூழலியலாளரும் வடமாகாண முன்னாள் விவசாய அமைச்சருமான ஐங்கரநேசன் எச்சரித்துள்ளார்.**

பூநகரி பிரதேச சபையினால் தேசிய வாசிப்பு மாதத்தை முன்னிட்டு இரணைமாதா நகரில் முன்னெடுக்கப்பட்ட நிகழ்வில் பிரதம விருந்தினராக கலந்து கொண்டு உரையாற்றும்போதே அவர் இதனை தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

காங்கேசன்துறையில் சுண்ணக்கல் அகழப்பட்ட பகுதிகள் தற்போது அநாதரவாக கைவிடப்பட்டுள்ளது. அங்கு கடல் நீர் உட்புகுந்து எந்தவொரு பயன்பாடுமற்றதாக அப்பகுதிகள் உள்ளன.

இனிவருங்காலங்களில் சுண்ணக்கல் அகழ முடியாதென்ற வகையில் காங்கேசன்துறை சீமெந்து தொழிற்சாலையை கைவிட்டு பொன்னாவெளியில் கவனத்தை செலுத்துகின்றனர்.

அங்கும் சீமெந்து தொழிற்சாலை ஆரம்பிக்கப்பட்டு சுண்ணக்கல் அகழப்பட்டால் காங்கேசன்துறை போன்றே வெறும் அகழிகளே மக்களிற்கு மிஞ்சும். யாரோ சிலர் உழைத்துவிட்டு செல்ல எம்மக்களிற்கு வனந்தரமான மண்ணே மிஞ்சும் எனவும் எச்சரித்துள்ளார்.

ஏற்கனவே நாம் உண்ணாத கடலட்டை பண்ணைகளிற்கென எமது கடற்கரைகள் ஆக்கிரமிக்கப்பட்டுள்ளன. எதிர்வரும் ஐந்து ஆண்டுகளில் மீன் பிடிபடாத கடலாக எமது கடல் இருக்க போகின்றது.

ஒரு சில நூறு பேரது வருமானத்திற்காக அடுத்து வரும் காலங்களில் எமது பிரதான உணவாக இருக்கப்போகின்ற மீனை நாம் தொலைத்துக் கொண்டிருக்கின்றோம் என்பதை அனைவரும் புரிந்து கொள்ளவேண்டும்-என்றார். (அ)

# போலி காணி உறுதிப்பத்திரம் தயாரித்து பண மோசடியில் ஈடுபட்டவர் கைது!

கொழும்பு, நவ. 12

கொழும்பு - பொரளை பகுதியில் போலி காணி உறுதிப் பத்திரமொன்றை தயாரித்து பண மோசடியில் ஈடுபட்ட குற்றச்சாட்டில் நபர் ஒருவர் குற்றப் புலனாய்வுப் பிரிவினரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

இவ்வாறு கைது செய்யப்பட்டவர் இராஜகிரிய பிரதேசத்தை சேர்ந்த 55 வயதுடைய நபர் ஆவார்.

கைதுசெய்யப்பட்ட நபர் 87.5 பரப்பு காணியை போலி உறுதிப்பத்திரம் தயாரித்து 136 மில்லியன் ரூபாய்க்கு விற்பனை செய்து பண மோசடியில் ஈடுபட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இந்த சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகள் பொரள்ளை பொலிஸாரால் மேற்கொள்ளப்பட்டதையடுத்து சந்தேக நபர் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்டார். (அ)

# வெள்ளத்தில் மூழ்கி 2 யானைகள் பலி!

கொழும்பு, நவ. 12

கிரிந்தி ஓயாவில் ஏற்பட்ட வெள்ள அனர்த்தம் காரணமாக இரண்டு யானைகள் வெள்ளத்தில் அடித்துச் செல்லப்பட்டு உயிரிழந்துள்ளன.

குடாஓயா, துலுல்ல பிரதேசத்தில் உள்ள கிராம மக்களினால் வனஜீவராசிகள் திணைக்களத்திற்கு அறிவிக்கப்பட்ட நிலையில், உயிரிழந்த இரு யானைகளும் மீட்கப்பட்டுள்ளன.

குறித்த யானைகளில் ஒன்று ஆறடி உயரமும் சுமார் 30 வயதுடையது எனவும் மற்றைய யானை ஆறடி உயரமும் சுமார் 25 வயதுடையது எனவும் வனஜீவராசிகள் திணைக்கள அதிகாரிகள் தெரிவித்தனர் .

இது தொடர்பிலான விசாரணைகளை வனஜீவ ராசிகள் திணைக்கள அதிகாரிகள் மேற்கொண்டு வருகின்றனர்.அ)

# தேசத்துரோகிகள்!

## கிரிக்கெட் சபை மீது சஜித் பாய்ச்சல்

கொழும்பு, நவ. 12

" சர்வதேச கிரிக்கெட் பேரவை நமது நாட்டில் கிரிக்கெட்டை தடை செய்துள்ளது, இது தொடர்பாக இ.எஸ்.பி. என்.அலைவரிசைக்கு சொந்தமான கிறிக் இன்போ இணைய தளத்தில் குறிப்பிடப்பட்டுள்ளதன் பிரகாரம், ஸ்ரீலங்கா கிரிக்கட் பேரவையே இந்தத் தடைக்கான கோரிக்கையை முன்வைத்துள்ளது என்பது தெரிகின்றது." - என்று எதிர்க்கட்சி தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்தார்.

நாட்டில் ஒரு நிறுவனம் நாட்டிற்கு சேவை செய்ய உருவாக்கப்பட்டாலும், இலங்கை கிரிக்கெட் நிர்வாகத்தில் தேசதுரோகிகளே உள்ளனர் என்றும், அவர்கள் சகல பிரஜைகளுக்குமே துரோகமிழைத்துள்ளனர் எனவும் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ விமர்சித்தார்.

கொழும்பு மெரைன் கிரேண்ட் வரவேற்பு மண்டபத்தில் நேரற்று இடம்பெற்ற சமூக ஊடக ஆர்வலர்கள் பிரதிநிதிகள் குழுவினருடனான சந்திப்பில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே எதிர்க்கட்சித் தலைவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இந்தியன் பிரீமியர் லீக் போட்டிக்கான பங்கேற்பும் இழக்கப்படலாம் என தகவல்கள் தெரிவிக்கப்படுவதாகவும், தங்கள் மோசடி பரிவர்த்தனைகள் ,ஊழல் பண பரிவர்த்தனைகள் மற்றும் செயல்முறைகளை ஜனநாயகத்தை முன்னிலைப் படுத்தி பாதுகாத்துக்கொள்ள முற்படுகின்றனர் என்றும், ஜனநாயக முறையில் உருவாக்கப்பட்ட கிரிக்கெட் நிர்வாகத்திற்கு பல்வேறு தடைகள் வருவதாகவே சர்வதேச கிரிக்கெட் பேரவைக்கு அறிவித்துள்ளனர் என்றும் தெரிவித்தார்.(அ)

# பருத்தித்துறை பிரதேச சபையின் புத்தகக் கண்காட்சி





வடமராட்சி நவ. 12

தேசிய வாசிப்பு மாதத்தை முன்னிட்டு பருத்தித்துறை பிரதேச சபையின் புத்தகக் கண்காட்சி பருத்தித்துறையில் கடந்த வெள்ளிகிழமை நடைபெற்து.

பருத்தித்துறை பிரதேச சபை செயலாளர் கே.கம்ஸநாதன் தலைமையில் புலோலி பொது நூலக மாநாட்டு மண்டபத்தில் நடைபெற்ற இந் நிகழ்வில் பிரதம விருந்தினராக இ.து.குலசிங்கம், சிறப்பு விருந்தினர்களாக எங்கட புத்தகங்கள் நிறுவன இயக்குனர்களான பால கிருஷ்ணன் இரகுவரன் மற்றும் குலசிங்கம் வசீகரன் ஆகியோர் கலந்து சிறப்பித்தனர். (அ-2)

# டெங்கு அபாய வலயங்கள் 44ஆக அதிகரிப்பு

கொழும்பு, நவ. 12

நாட்டில் தற்போது டெங்கு அபாய வலயங்களின் எண்ணிக்கை 44ஆக அதிகரித்துள்ளதாக தேசிய டெங்கு கட்டுப்பாட்டுப் பிரிவு தெரிவித்துள்ளது.

இதன்படி வீடுகள் மட்டுமின்றி பொது இடங்களிலும், அரசு மற்றும் தனியார் நிறுவனங்களிலும் டெங்கு பரவும் இடங்களை சுத்தமாக வைத்திருக்குமாறு டெங்கு கட்டுப்பாட்டுப் பிரிவின் பணிப்பாளர் வைத்தியர் நளின் ஆரியரத்ன தெரிவித்துள்ளார்.

நுளம்புகள் உற்பத்தியாகும் இடங்கள் தொடர்பில் பொது மக்கள் விழிப்புடன் இருக்க வேண்டும் எனவும் அவர் மேலும் கூறினார். (அ)

# டக்ளஸ் சொல்வதெல்லாம் பொய்!

## நா.வர்ணகுலசிங்கம் குற்றச்சாட்டு

வடமராட்சி, நவ. 12

டக்ளஸ் சொல்வதெல்லாம் பொய் பொய்யைத்தவிர வேறொன்றும் இல்லை என வடமராட்சி வடக்கு கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கங்களின் சமாச உப தலைவர் நாகராசா வர்ணகுலசிங்கம் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

புதிய கடற்றொழில் சட்டத்தை கடற்றொழில் அமைச்சர் கடந்த 7ஆம் திகதி பாராளுமன்றத்தில் முன்வைத்திருந்தார்.

இதன்போது, எமது பகுதியில் தென்னிலங்கை மீனவர்களால் அச்சுறுத்தப்பட்டு எமது மீனவர்கள் தொழில் செய்ய முடியாத நிலை ஏற்பட்டுள்ளது. இந்திய மீனவர்களின் இழுவைப் படகுகளால் எமது மீனவர்கள் தினம் தினம் பாதிப்படைந்து வருவது தொடர்பிலும் மட்டக்களப்பு பாராளுமன்ற உறுப்பினர் கோவிந்தன் கருணாகரன் கேள்வியொன்றை எழுப்பியபோது அதற்கு பதிலளித்த அமைச்சர், தென்னிலங்கை மீனவர்களால் ஏற்படும் அச்சுறுத்தல் குறித்து தனக்குத் தெரியாது என்றும், அப்படி இடம்பெற்றால் அது தொடர்பாக அறியத் தாருங்கள் என தெரிவித்துள்ளார்.

பூனை கண்ணை மூடிக்கொண்டு பால் குடிப்பதை போன்று அமைச்சரும் கண்ணை மூடிக்கொண்டே பால் குடிக்கிறார். அவர் பேசுவதெல்லாம் பொய் பொய்யைத் தவிர வேறு ஒன்றும் இல்லை. நான் சொல்லுறதைத்தான் செய்வேன். செய்வதைத் தான் சொல்லுவேன் என சொல்லும் அமைச்சர் தென்னிலங்கை மீனவர்களது விவகாரம் தொடர்பில் எதுவும் தெரியாது என கூறுவது வேடிக்கையாக உள்ளது.

குடாரப்பு, மாமுனை போன்ற இடங்களில் போய்ப் பார்த்தால் தெரியும். அங்கு புத்தளம், கற்பிட்டி மன்னாரை சேர்ந்த 500 இற்கு மேற்பட்ட படகுகளில் அட்டை தொழில் செய்து வருகின்றனர். இவ்வளவு பாரிய செயற்பாடு இடம்பெற்று வருகையில் அது தொடர்பில் எதுவுமே நடக்காது போன்று அமைச்சர் பதிலளித்திருப்பது ஏமாற்று நாடகமே.

கடற்றொழில் அமைச்சரோ, கடற்றொழில் நீரியல் வளத்துறை பணிப்பாளரோ அனுமதி குடுக்காமல் தென்னிலங்கையில் இருந்து இங்கு வந்து அவர்களால் எவ்வாறு தொழிலில் ஈடுபட முடியும்..? தென்னிலங்கை மீனவர்களுக்கு அனுமதியை குடுத்து அனுப்பி விட்டு தங்களுக்கு எதுவும் தெரியாது என்பதாக கூறுவது மக்களை ஏமாற்றும் செயற்பாடாகும்.

அத்துடன், புதிய சட்டம் தொடர்பில் மீனவ அமைப்புக்களுடன் கலந்துரையாடவில்லை. கலந்துரையாடாமலே இச் சட்டம் கொண்டுவரப்பட்டவுள்ளது என பாராளுமன்ற உறுப்பினர் செல்வராசா கஜேந்திரன் சுட்டிக்காட்டிய போது, இது முற்றிலும் பொய் என மறுத்துரைத்த அமைச்சர், யாழ் மாவட்டத்தில் மூன்று முறை மீனவ அமைப்புகளுடன் கலந்துரையாடியே பாராளுமன்றத்திற்கு கொண்டு வந்திருப்பதாக கூறியுள்ளார்.

அப்படி எதுவும் நடைபெறவில்லை. கடந்த செப்ரெம்பர் 21ஆம் திகதி யாழ்ப்பாணத்தில் உள்ள தனியார் விடுதி ஒன்றில் தான் இந்த கூட்டம் நடத்தப்பட்டது. அந்த கூட்டத்தில் அமைச்சர் சார்பான கட்சி வேட்பாளர்கள், ஆதரவாளர்கள் உள்ளிட்ட சுமார் 18 பேர் தான் கலந்து கொண்டவர்கள். அதுவும் முற்றிலும் சிங்கள மொழியில்தான் கூட்டம் நடத்தப்பட்டது. அந்த புதிய சட்ட மாதிரி ஆவணத்தில் 70ஆம் பக்கம் முதல் 85ஆம் பக்கம் வரை வெற்றுத் தாள்களாகவே காணப்பட்டது. அது தொடர்பில் சிலர் ஆட்சேபனை தெரிவித்தபோது திருத்தம் செய்யப்பட்ட பின் தமிழில் மொழிபெயர்க்கப்பட்ட பிரதியுடன் ஒன்றரை மாதத்திற்கு பின்னர் மீண்டும் ஒரு கலந்துரையாடல் மேற்கொள்வதாக கூறிச் சென்றிருந்தனர்.

அன்று போனவர்கள் போனதுதான் இன்றுவரை திரும்பி வரவில்லை. ஆனால் அமைச்சர் சொல்கிறார் மூன்று முறை கடற்றொழில் சமூகம் சார்ந்த சம்பந்தப்பட்டவர்களுடன் கதைத்துத் தான் முடிவெடுத்ததாக. இது அப்பட்டமான பொய். வேண்டுமென்றால் யாழ் மாவட்டத்தில் இருக்கும் ஒவ்வொரு சங்கத்திடமும் சென்று கேட்டுப்பார்த்தால் உண்மை தெரியவரும் - என்றார். (அ-2)

# மொட்டு கட்சியை அழிப்பதற்கு எந்த கொம்பனாலும் முடியாது!

**எஸ்.எம். சந்திரசேன சூளுரை**

கொழும்பு, நவ. 12

**"அழிவில் இருந்து மீண்டெழுந்து பொதுஜன பெரமுன கட்சி வெற்றிகரமாக பயணித்துக்கொண்டிருக் கின்றது. எந்த கொம்பனாலும் கட்சியை அழிக்க முடியாது. அடுத்த ஜனாதிபதி தேர்தலிலும் எமது கட்சியே தீர்மானிக்கும் சக்தியாக இருக்கும்."**

இவ்வாறு மொட்டு கட்சியின் சிரேஷ்ட உறுப்பினரான எஸ்.எம். சந்திரசேன தெரிவித்தார்.

மொட்டு கட்சி தலைமையகத்தில் நடைபெற்ற ஊடக சந்திப்பின்போதே அவர் இவ்வாறு கூறினார். இது தொடர்பில் அவர் மேலும் கூறியவை வருமாறு,

"பொதுஜன பெரமுன கட்சியை அழிப்பதற்கு முற்பட்டனர். கட்சியின் ஆதரவாளர்கள் பேர வாவிக்குள் தள்ளப்பட்டனர். அரசியல் பிரமுகர்களின் வீடுகள் எரிக்கப்பட்டன. பாராளுமன்ற உறுப்பினர் ஒருவர் கொல்லப்பட்டார். சாம்பல் மேட்டில் இருந்து மீண்டெழுந்து பயணத்தை மேற்கொண்டுவருகின்றோம். எமது கருத்துகளுக்கு சமூகவலைத்தளங்களில் 'ஆழ்ந்த அனுதாபம் தெரிவிக்கும் (ஆர்ஐபி) நபர்கள் உள்ளனர். யார் என்ன செய்தாலும் கட்சியை அழிக்க முடியாது. அடுத்த ஜனாதிபதி தேர்தலில் வெற்றியை தீர்மானிக்கும் பிரதான சக்தி எமது கட்சிதான், அதேபோல்தான் பாராளுமன்ற மற்றும் மாகாணசபைத் தேர்தல்களிலும் பிரதான தரப்பு எமது கட்சிதான்." - என்றார். (அ)

# சொந்த நலனுக்காக இரந்து மண்டியிட்டவர்கள் நாமல்லர்

**ஈ.பி.டி.பியின் ஊடகப் பேச்சாளர் சிறிரங்கேஸ்வரன்**

வடமராட்சி, நவ. 12

சொந்த நலனுக்காக இரந்து மண்டியிட்டவர்கள் நாமல்ல. நாடாளுமன்றத்துக்குள் சிறப்புரிமையை பயன்படுத்தி அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா மீது அவதூறு சுமத்துபவர்கள் பொது வெளியில் வந்து அவற்றை கூறுவார்களா? என ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியின் ஊடகப் பேச்சாளர் ஐயாத்துரை ஸ்ரீரங்கேஸ்வரன் சவால் விடுத்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

தென்னிலங்கையை சேர்ந்த பேராசிரியர் ரொஹான் குணவர்த்தனவை மலேசியாவில் சந்தித்து தமிழ் தேசியக் கூட்டமைப்பை நான் பிளவுபடுத்துவேன் எனவும் ராஜபக்ஷக்கள் கொடுக்கும் நிகழ்ச்சி நிரலை முழுமையாக செயற்படுத்துவதாகவும் கூறி தனது சொந்த நலன்களை நிறைவேற்றி தர வேண்டும் என்றும் இரந்து மண்டியிட்டு நின்றவர்களை பற்றி எம்மால் பொதுவெளியில் பகிரங்கப்படுத்த முடியும்.

ஆனால் அவ்வாறான தரங்குன்றிய இழிவான அரசியலை செய்பவர்கள் நாம் அல்ல. பாராளுமன்றத்தில் அநாகரீகமாகவும் சிறப்புரிமையை பயன்படுத்தியும் அவதூறுகளையும் இழிசொற்களை பயன்படுத்தும் இவ்வாறான உறுப்பினர் தேர்தலை இலக்குவைத்து பாராளுமன்றத்தினுள் கூச்சலிவதை மாற்றிக்கொள்ள வேண்டும்- என்றார். (அ-2)

# பாகிஸ்தானிலிருந்து இறக்குமதி செய்த செத்தல் மிளகாயில் நச்சு இரசாயனம்!

கொழும்பு, நவ. 12

பாகிஸ்தானில் இருந்து இறக்குமதி செய்யப்பட்ட செத்தல் மிளகாயில் அஃப்லாடாக்சின் கலந்துள்ளமையினால், அதை மீள் ஏற்றுமதி செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

ஏற்றுமதி செய்யப்பட்ட பொருட்களில் 25 மிளகாய் கொள்கலன்களும் உள்ளடங்குவதாக சுகாதார அமைச்சின் உணவுக் கட்டுப்பாட்டுப் பிரிவின் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

இலங்கையைச் சேர்ந்த வர்த்தகர்கள் குழுவொன்று இந்த மிளகாயை இறக்குமதி செய்துள்ளதாக அவர் மேலும் தெரிவித்தார்.

இதேவேளை, உணவின் தரம் தொடர்பான பிரச்சினைகளைத் தெரிவிப்பதற்கு சுகாதார அமைச்சின் உணவுக் கட்டுப்பாட்டுப் பிரிவு தொலைபேசி இலக்கமொன்றை அறிமுகப் படுத்தியுள்ளது.

அந்த வகையில் 0112 112 718 என்ற எண்ணுக்கு அழைத்து உணவின் தரம் தொடர்பான முறைப்பாடுகளை தெரிவிக்க முடியும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

அஃப்லாடாக்சின் என்பது ஒரு நச்சு இரசாயனமாகும். அதிக அளவு அஃப்லாடாக்சின்கள் கடுமையான விஷத்திற்கு (அஃப்லாடாக்சிகோசிஸ்) வழிவகுக்கும், இது பொதுவாக கல்லீரலுக்கு சேதம் ஏற்படுவதால் உயிருக்கு ஆபத்தானதாக அமையும். பொதுவாக அசுத்தமான உணவுகளில் இந்த அஃப்லாடாக்சின் காணப்படும் என்பது குறிப்பிடத்தக்கது. (அ)

# ஷம்மி சில்வாவிடம் பணம் பெற்றதை முடிந்தால் நிரூபித்துக் காட்டுங்கள்!

**அர்ஜுனவுக்கு ஜே.வி.பி. சவால்**

கொழும்பு, நவ. 12

இலங்கை கிரிக்கெட் சபைத் தலைவர் ஷம்மி சில்வாவிடமிருந்து ஜே.வி.பி. பணம் பெற்றுக் கொண்டுள்ளதாக கூறப்படுவதை முடிந்தால் நிரூபித்துக் காண்பிக்குமாறு மக்கள் விடுதலை முன்னணியின் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான அநுரகுமார திஸாநாயக்க சவால் விடுத்துள்ளார்.

கிரிக்கெட் சபையின் தலைவர் ஷம்மி சில்வா ஜே.வி.பிக்கு நிதி வழங்கியுள்ளதாக பிரசன்ன ரணதுங்க ஒரு கருத்தை வெளியிட்டிருந்தார்.

இது குறித்து அனுரகுமார மேலும் தெரிவிக்கையில்-

பிரசன்ன ரணதுங்க யார்? உயர்நீதிமன்றில் தண்டனைக்கு உட்படுத்தப்பட்டவர். கப்பம் பெறும் நபர்தான் இவர்.

அண்மையில் இடம்பெற்ற வழங்கொன்றில் கப்பம் கோரிய குற்றத்திற்காக 20 இலட்சம் ரூபாய் நட்ட ஈட்டை வழங்க வேண்டும் என நீதிமன்றம் தெரிவித்துள்ளது.இரண்டரைக்கோடி தண்டப்பணம் செலுத்த வேண்டும் எனவும் உயர் நீதிமன்றம் குறிப்பிட்டுள்ளது. 4 வருட சரீரப் பிணையில்தான் பிரசன்ன ரணதுங்க உள்ளார்.

இந்த நிலையில், ஷம்மி சில்வாவின் பணம் எமக்கு வந்ததாக இவர் கூறுகிறார். நாம் அவரைக் கண்டதுகூட கிடையாது.

பிரசன்ன ரணதுங்க இதுதொடர்பாக பாராளுமன்றில் உரிய விளக்கத்தை அளிக்க வேண்டும்.

இதுதொடர்பாக விசாரணை நடத்துங்கள்.

நேற்று எதிர்க்கட்சித் தலைவரினால் பாராளுமன்றுக்கு தீர்மானம் கொண்டுவரப்பட்டபோது, நாம் இருக்கவில்லை. இந்தத் தீர்மானம் கொண்டுவரப்பட்டாலும் வாக்கெடுப்பு இடம்பெறாது என்பது தெரியும். இது ஏகமனதாக கொண்டுவரப்பட்ட தீர்மானமாகும்.

எனவே, இல்லாத வாக்கெடுப்பில் கலந்து கொள்ள வேண்டியத் தேவையில்லை என்றே நாம் சபையில் இருக்கவில்லை. விளையாட்டுத் துறை அமைச்சரிடம் நான் தனிப்பட்ட ரீதியாகவே கிரிக்கெட் சபைக்கு எதிராக நடவடிக்கை எடுக்குமாறு வலியுறுத்தியிருந்தோம் - என்றார். (அ)

# விளையாட்டு பல்கலைக்கழகத்திற்கான முன்னெடுப்புகளை மேற்கொள்ள திட்டம்

கொழும்பு, நவ. 12

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் வழிகாட்டலின் கீழ் 2024 ஆம் ஆண்டில் விளையாட்டுப் பல்கலைக்கழகத்தை ஆரம்பிப்பதற்கான முன்னெடுப்புகள் மேற்கொள்ளப்படும் என விளையாட்டு மற்றும் இளைஞர் விவகார இராஜாங்க அமைச்சர் ரோஹன திசாநாயக்க தெரிவித்தார்.

சம்மேளனங்கள் எதிர்கொள்ளும் பிரச்னைகளுக்கு முன்கூட்டியே தீர்வுகளை வழங்கும் நோக்கில் விளையாட்டுத்துறை அமைச்சு தொடர்பிலான பாராளுமன்ற தெரிவுக் குழுவிற்கு விளையாட்டுச் சம்மேளனங்களின் அதிகாரிகளை அழைக்கத் தீர்மானிக்கப்பட்டிருப்பதாகவும் இராஜாங்க அமைச்சர் தெரிவித்தார்.

ஜனாதிபதி ஊடக மையத்தில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு கருத்து தெரிவிக்கும் போதே விளையாட்டு மற்றும் இளைஞர் விவகார இராஜாங்க அமைச்சர் ரோஹன திசாநாயக்க மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அங்கு மேலும் கருத்து தெரிவித்த அவர்,

"இந்நாட்டிலிருக்கும் 77 கிரிக்கெட் சங்கங்களில் 68 சங்கங்கள் மாத்திரமே செயற்பாட்டில் உள்ளன. அந்த சம்மேளங்களுடன் ஏற்கனவே பேச்சுவார்த்தைகளை முன்னெடுத்திருந்தாலும் 2024இற்கு முன்னதாக மீண்டும் ஒரு முறை அவர்களை சந்தித்து அவர்களின் பொறுப்புக்கள் தொடர்பில் வலியுறுத்த விருக்கிறோம்.

விளையாட்டுத்துறை அமைச்சு தொடர்பிலான பாராளுமன்ற தெரிவுக் குழுவிற்கு மேற்படி சம்மேளனங்களின் பிரதானிகளை அழைக்கவும் தீர்மானிக் கப்பட்டுள்ளது. அதனூடாக பேச்சு வார்த்தை ரீதியான இணக்கப்பாட்டுடன் அந்தப் பிரச்சினைகளை நிவர்த்தி செய்ய எதிர்பார்த்துள்ளோம்.

இதன்போது, 72 சம்மேளனங்களுக்கும் அழைப்பு விடுக்கப்படவுள்ளதோடு, அதனூடாக விளையாட்டுத் துறை தொடர்பிலான பிரச்னைகளை ஓரளவிற்கு மட்டுப்படுத்திக்கொள்ள முடியும் என நம்புகிறோம்.

சம்மேளனங்கள் எதிர்கொள்ளும் பிரச்னைகளுக்கு முன்கூட்டியே தீர்வுகளை வழங்குவதே இதன் நோக்கமாகும். அதேபோல் விளையாட்டுத்துறை அபிவிருத்தியின் போது ஆவணங்களுக்கு மாத்திரம் மட்டுப்பட்டு கிடக்கும் விளையாட்டுச் சம்மேளனங்களை செயற்பாட்டு நிலைமைக்கு கொண்டு வரவும் எதிர்பார்க்கப்படுகிறது.

அதன்படி 2024 ஆம் ஆண்டில் கிராமங்களுக்கும் விளையாட்டுக்களை கொண்டுச் செல்லும் வகையிலான அபிவிருத்தியை ஏற்படுத்துவதே அதன் நோக்கமாகும். அதேபோல் உத்தேச வேலைத்திட்டங்களுக்காக விளையாட்டு அபிவிருத்தி திணைக்களத்திற்கு 125 மில்லியன் ரூபா மாத்திரமே ஒதுக்கப்பட்டுள்ளது. குறைந்தபட்ச நிதித் தொகையைக் கொண்டே அந்த செயற்பாடுகளை முன்னெடுக்க வேண்டிய நிலைமை உருவாகியுள்ளது.

அதேபோல், 2024 ஆம் ஆண்டளவில் விளையாட்டுப் பல்கலைக்கழகத்தின் ஆரம்பப் பணிகளை முன்னெடுக்க தீர்மானிக்கப்பட்டுள்ளது. அதற்கு ஒரு பில்லியன் அமெரிக்க டொலர்கள் அவசியப்படுமென எதிர்பார்க்கப்படுகிறது. ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவின் வழிகாட்டலின் கீழ் அந்தப் பணிகள் முன்னெடுக்கப்படவுள்ளன.

அந்தப் பல்கலைக்கழகத்தில் கல்விமானி பட்டம், விஞ்ஞானமானி பட்டம் வழங்கல் மற்றும் ஒருங்கிணைந்த அபிவிருத்தி வீதம் மற்றும் சுற்றாடல் தாக்கங்களை அளவிடுதல் தொடர்பிலான ஆய்வுப் பணிகள் என்பன முன்னெடுக்கப்படும்.

அது தொடர்பிலான தொழில்நுட்ப நிறுவனத்தை, 2024 ஆம் ஆண்டின் முதற் காலாண்டில் மொறட்டுவை பல்கலைக்கழகம் மற்றும் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் அனுமதியின் பின்னர் மேற்கொள்ள தீர்மானிக்கப்பட்டுள்ளது.

அதேபோல் இந்தியா, நேபாளம் மற்றும் இலங்கை ஒன்றிணைத்து இராணுவங்களின் சேர்ணல் நிலைக்கு மேற்பட்ட அதிகாரிகளின் பங்கேற்புடன் 15 மோட்டார் சைக்கிள்கள் கொண்ட போட்டியொன்றை நடத்த திட்டமிடப்பட்டுள்ளது. டிசெம்பர் 29 நேபாளத்தில் ஆரம்பித்து ஜனவரி 14 இந்தியாவின் ஊடாக இலங்கையை வந்தடைய தீர்மானிக்கப்பட்டுள்ளது.

அதன் பின்னர் தைப்பொங்கல் தினத்தில் யாழ். காங்கேசன்துறையில் ஆரம்பிக்கப்படவிருக்கும் போட்டி, காலி முகத்திடன் கலாசார கண்காட்சியுடன் நிறைவடையவுள்ளது.

அதேபோல், கீழ் மட்ட ஒழுங்குமுறைகள் மற்றும் பணிகள் தொடர்பிலான தெரிவுகளை பெற்றுக்கொடுக்கும் நோக்கில், பாராளுமன்றத்திலிருக்கும் இளம் எம்.பிக்களுக்கு பிரதேச அபிவிருத்திக் குழு கூட்டங்களில் பங்கேற்க வாய்ப்பளிக்கவும் ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. அதன் பின்னர் மாவட்ட அபிவிருத்திக் குழுவில் பங்கேற்கவும் வாய்ப்பளிக்கப்படவுள்ளது. அதனூடாக இளைஞர்களின் பிரச்சினைகளுக்குத் தீர்வு கிட்டும் என எதிர்பார்க்கப்படுகிறது-என்றார்.

ஈழநாடு
Eelanadu
12.11.2023 ஞாயிற்றுக்கிழமை
பிலவ வருடம், ஐப்பசி 26

**"ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்"**
- யோகர் சுவாமிகள்.

E-mail: eelanaduweekly@gmail.com
தொலைபேசி : 021 205 2300

# வெறும் பேச்சுக்கு அப்பால்

காலத்தை இழுத்தடிப்பதுதான், ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் நோக்கம் என தமிழரசு கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறிதரன் தெரிவித்திருக்கின்றார். ரணிலின் நோக்கம் அதுதான் - என்று தெரிந்தால், ரணிலை கட்டுப்படுத்துவதற்கு தமிழர் தரப்பிடமுள்ள பொறிமுறை என்ன? இந்த அடிப்படையில் அல்லவா அரசியலை நோக்க வேண்டும்.

ரணில் விக்கிரமசிங்க 13ஆவது திருத்தச்சட்டத்தை அமுல்படுத்தப் போவதாக குறிப்பிட்டார் - நடைபெறவில்லை. மாகாண சபைத் தேர்தல் இடம்பெறும் வரையில், ஆலோசனை சபையொன்றை உருவாக்கப் போவதாக குறிப்பிட்டார். அதனை நம்பி அறிக்கைகளை தயாரிப்பதில் நேரத்தை செலவிட்டார் சி.வி.விக்னேஸ்வரன் - அதுவும் நடக்கவில்லை. தென்னாபிரிக்க மாதிரியை அடிப்படையாகக் கொண்டு, உண்மை மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவொன்றை நியமிக்கப் போவதாக கூறினார். பணிகள் பெருமளவில் முடிந்துவிட்டதாக கூறப்பட்டது. எதுவும் நடக்கவில்லை.

ஆனாலும் தமிழர் தரப்பால் ரணிலை குற்றம்சாட்டுவதற்கு அப்பால் எதனையும் செய்ய முடியவில்லை. இந்த விடயத்தில் மட்டுமல்ல - எந்தவொரு விடயத்திலும் தமிழர் தரப்பால் முன்னோக்கி பயணிக்க முடியவில்லை. ஏன்? இந்தக் கேள்விக்கான பதிலை தேடும் முயற்சியில் ஈடுபடுவதுதான் முதல் பணியாக இருக்க வேண்டும்.

நாங்கள் ஐம்பது வருட அரசியல் அனுபமுள்ளவர்கள் - எங்களுக்கு எவரும் அறிவுரை கூறவேண்டியதில்லை என்னும் அடிப்படையில் சிந்திப்பதால், எந்தவொரு பிரச்னையையும் தீர்க்க முடியாது. இலங்கை தமிழரசு கட்சி உருவாக்கப்பட்டு 74 வருடங்கள் முடிவடையப் போகின்றது. இந்த 74 வருட கால அரசியலில் சிங்கள ஆட்சியாளரை நோக்கி, இந்தியாவை நோக்கி, அமெரிக்காவை நோக்கி, சர்வதேசத்தை நோக்கி ஏராளமான குற்றச்சாட்டுக்கள் முன்வைக்கப்பட்டிருக்கின்றது. அதனை மீண்டும் செய்வதில் என்ன பயன்?

பழைய அணுகுமுறைகளில் பயணம் செய்வதன் ஊடாக, நாங்கள் எதனை அடையப் போகின்றோம்? - தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் தமிழ் தேசியவாத அரசியல் கட்சிகளின் தலைவர்கள் என்போர், தங்களுக்குள் கேட்டுக் கொள்ள வேண்டிய கேள்வி இதுதான். அவ்வாறில்லாது ரணிலை குற்றஞ்சாட்டிக் கொண்டு பின்னர் பேச்சுவார்த்தைக்கு வருமாறு ரணில் அழைத்தவுடன் அங்கு சென்று பேசுவதில் பயனில்லை.

ரணில், தமிழ் கட்சிகளை நோக்கி வரக் கூடிய நிர்ப்பந்தத்தை ஏற்படுத்தவேண்டும். அதனை எவ்வாறு ஏற்படுத்தலாம் - அதற்கான வாய்ப்புக்கள் என்ன? அதனை கையாளுவதற்கான தந்திரோபாயம் என்ன? இவ்வாறான கேள்விகளின் வழியாகத்தான் அரசியலை அணுக வேண்டும். வெறும் குற்றச்சாட்டுக்கள், தமிழ் அரசியல்வாதிகளை அப்பாவித்தனமாக நம்பிக் கொண்டிருக்கும் மக்களை ஏமாற்றுவதற்கு பயன்படலாம் - ஆனால் அந்த மக்களை முன்னேற்றுவதற்கு பயன்படாது.

## வடமாகாண மரநடுகை மாதம்

**கார்த்திகை - 2023**

"பொருட்களின் உண்மையான இயல்புகளை நாம் சரியாகக் கருத்திற் கொண்டால் ஒவ்வொரு மரமும் தங்கத்தினாலோ வெள்ளியினாலோ ஆக்கப்பட்டிருப்பதை விட அது பச்சையாக இருப்பதே அதி உன் னதமானது."

**- மார்ட்டின் லூதர் (ஜேர்மனிய கத்தோலிக்க மதகுரு)**



# கொக்குத்தொடுவாய் மனிதப் புதைகுழி ராடர் மூலம் ஆய்வு!

முல்லைத்தீவு, நவ. 12

முல்லைத்தீவு மாவட்டம், கொக்குத்தொடுவாய் மனிதப் புதைகுழியில் எது வரை உடல்கள் புதைக்கப்பட்டுள்ளன என்பதனைக் கண்டறிய ராடரைப் பயன்படுத்த நீதிமன்றத்திடம் விண்ணப்பம் செய்யப்பட்டுள்ளது.

கொக்குத்தொடுவாயில் அடையாளம் காணப்பட்ட மனிதப் புதைகுழி அகழ்வுப் பணிகள் இடம்பெற்ற நிலையில் தற்காலிகமாக இடைநிறுத்தப்பட்டிருந்தன. மீண்டும் எதிர்வரும் 20 ஆம் திகதி அகழ்வும் பணிகள் ஆரம்பிக்கப்படவுள்ளன.

தொல்லியல் அதிகாரிகள், சட்ட வைத்திய அதிகாரிகள் உள்ளிட்ட அனைத்து அதிகாரிகளும் இதற்கான ஏற்பாடுகளை முன்னெடுக்கின்றனர்.

இம்முறை இடம்பெறும் அகழ்வில் துறைசார் நிபுணர்களை மேலதிகமாகப் பயன்படுத்தி அகழ்வைத் துரிதப்படுத்த நடவடிக்கைகள் எடுக்கப்படும். அதே நேரம் நிலத்தின் கீழ் எது வரை மனித உடல்கள் புதைக்கப்பட்டுள்ளன என்பதனைக் கண்டறியும் ராடரைப் பயன்படுத்த நீதிமன்றிடம் அனுமதி கோரப்பட்டுள்ளது. (அ)

# சீனாவிடமிருந்து பொலிஸ் திணைக்களத்திற்கு 26 மோட்டார் சைக்கிள்கள், 100 கணினிகள்

கொழும்பு, நவ. 12

சீன மக்கள் குடியரசினால் இலங்கை பொலிஸ் திணைக்களத்திற்கு 26 ரனொமொடோ வகை மோட்டார் சைக்கிள்கள் மற்றும் 100 டெஸ்க்டொப் கணனிகள் ஆகியவற்றை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவிடம் உத்தியோக பூர்வமாக கையளிக்கும் நிகழ்வு நேற்று முன்தினம் ஜனாதிபதி அலுவலகத்தில் இடம்பெற்றது.



தேசிய பாதுகாப்பு தொடர்பான ஜனாதிபதியின் சிரேஷ்ட ஆலோசகரும் ஜனாதிபதி பணிக்குழாம் பிரதானியுமான சாகல ரத்நாயக்க ஆகியோரின் ஒருங்கிணைப்புடன், பொலிஸ் மா அதிபர் சி.டி. விக்ரமரத்ன இலங்கைக்கான சீனத் தூதுவர் சீ ஷென் ஹொங்விடம் விடுத்த வேண்டுகோளுக்கு இணங்க, இலங்கை பொலிஸ் திணைக்களத்தின் பணிகளை இலகுவாக்க இந்த நன்கொடையை வழங்கப்பட்டுள்ளது.

இது தொடர்பான ஆவணங்கள், இலங்கைக்கான சீன தூதுவர் சீ ஷென் ஹொங்வினால் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவிடம் கையளிக்கப்பட்டதுடன், சீன தூதரக அலுவலகத்தின் சிரேஷ்ட அதிகாரிகள் குழு மற்றும் பொலிஸ் மா அதிபர் சி.டி. விக்கிரமரத்ன, சிரேஷ்ட பிரதிப் பொலிஸ் மா அதிபர் (நிர்வாகம்) நிலந்த ஜயவர்தன உட்பட பொலிஸ் திணைக்களத்தின் சிரேஷ்ட அதிகாரிகளும் இந்நிகழ்வில் கலந்து கொண்டனர். (அ)

# டிசெம்பர் 15 மொட்டு கட்சிக்கு புதிய தலைவர்?

கொழும்பு, நவ. 12

பொதுஜன பெரமுன கட்சியின் 2ஆவது தேசிய சம்மேளனம் டிசெம்பர் 15 ஆம் திகதி கொழும்பு, சுகததாச உள்ளக அரங்கில் மிகவும் பிரமாண்டமான முறையில் நடைபெறவுள்ளது.

கட்சியின் அமைச்சர்கள், பாராளுமன்ற உறுப்பினர்கள், தலைவர்கள் மற்றும் உள்ளாட்சிமன்ற உறுப்பினர்கள் இதில் பங்கேற்கவுள்ளனர்.

பொதுஜன பெரமுன கட்சியுடன் கூட்டணி வைத்துள்ள கட்சிகள் மற்றும் அமைப்புகளுடன் கரம்கோர்த்து இந்த சம்மேளனத்தை நடத்த ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது என மொட்டு கட்சி அறிவித்துள்ளது.

மொட்டு கட்சிக்கு புதிய தலைவர் இதன்போது நியமிக்கப்படலாம் என எதிர்பார்க்கப்படுகின்றது. (அ)

## அப்புக்குட்டி அண்ணையின் 'டவுட்'



பகிர்வு -103

# ‘துரை’ ஒரு தலைசிறந்த கல்விமான்

**கணபதி சர்வானந்தா**

இவரின் மறைவால் இலங்கை ஒரு அதிசிறந்த உலகப் புகழ் பெற்ற புவிசார் தொழில்நுட்ப பொறியியலாளரையும் (Geotechnical Engineer) தலைசிறந்த கல்விமானையும் இழந்துவிட்டது. யாழ் பல்கலைக்கழகம் அதன் முன்னாள் உபவேந்தரை இழந்துவிட்டது. இலங்கை பொறியியல் நிறுவனம் அதன் முன்னாள் தலைவரை பறிகொடுத்துவிட்டது. பூகற்பவியல் தொழில்நுட்ப இயக்கம் அதன் தலைவரை இழந்து விட்டது. மாணவர்கள் ஒரு ஆதியுயர் நல்லா சானை இறந்துவிட்டனர். இவ்வுலக மக்களோ ஒரு நன்நண்பரை இழந்து விட்டனர். இவ்வுலகம் ஒரு முன்னோடி விஞ்ஞானியை இழந்து விட்டது. என அவர் மரணத்தின்போது குறிப்பிட்டனர்.

இத்துணை பெருமைக்குரியவர் “துரை” என்று பிரபலமாக அழைக்கப்பட்டு மண்ணை நேசித்த மாமனிதர் என்ற கௌரவ பெருமையை பெற்றுக்கொண்ட தலைசிறந்த பூகற்ப தொழில்நுட்ப பொறியியலாளர் கல்விமான் பேராசிரியர் அழகையா துரைராசா அவர்கள் 1994 ஆம் ஆண்டு ஜூன் மாதம் 11ஆம் திகதி கொழும்பில் காலமாகி இன்றுடன் 27 ஆண்டுகள் கடந்துவிட்ட நிலையில் அவர் பிறந்த நாளான 10.11.1934 இனை சிறகுகள் அமையம் இவ்வாறு அவரை நினைவேந்துகிறது.

“சான்றோரைப் போற்றுவதும், கற்றோரை கௌரவிப்பதும் தமிழர்களாகிய எமது மரபு, எமது சீரிய பண்பாடு! இந்தப் பண்புக் கமைய பேராசியர் அழகையா துரைராசா அவர்களைப் போற்றுவதும், இளம் தலைமுறையினருக்கு சிறந்த முன் உதாரணமானவராக அறிமுகம் செய்வதும் எமது தலையாய கடமையாகும்.

பேராசிரியர் துரைராசா அவர்கள் ஒரு தலை சிறந்த கல்விமான், உலகப்புகழ் ஈட்டிய அறிஞர், ஆறு ஆண்டுகளாக யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் துணைவேந்தராக அவர் ஆற்றிய சேவை மகத்தானது.

இவர் ஒரு தேசப்பற்றாளர். மண்ணையும் மக்களையும் ஆழமாக நேசித்தார். இவரது வாழ்க்கை இந்த மண்ணோடு பிணைந்தது. இந்த மண்ணினதும் மக்களதும் போராட்ட வாழ்வின் பளுக்களை சுமந்துகொண்டார்.

எத்தனையோ அவலங்கள், துன்பங்கள் மத்தியிலும், எதற்கும் அஞ்சாத துணிவுடன் இந்த மண்ணைப்பற்றி நின்ற மக்களுக்கு பேராசிரியர் துரைராசா அவர்கள் ஓர் ஊக்க சக்தியாக விளங்கினார். தளர்ந்து போகாத உறுதிப்பாட்டிற்கும் ஒரு உன்னத உதாரணமானவராக விளங்கினார்.




தன்னலமும், தற்பெருமையும் அகன்று நற்பண்பாக எளிமை தோன்றுகின்றது, இந்த எளிமை ஒருவரை அழகான மனிதராக, பண்பான மனிதராக ஆக்கிவிடுகின்றது. இந்த வகையில் பேராசிரியர் துரைராசா அவர்கள் ஓர் அழகான மனிதர். அவரிடமுள்ள இந்த அகத்தின் அழகுதான் மக்களை கவரும் மாண்பாக விளங்குகின்றது.

இளம் தலைமுறையினருக்கு முன்மாதிரியானவர்களை அறிமுகம் செய்ய வேண்டியது அனைவரினதும் பொறுப்பு மிக்க கடமையாகும். பேராசிரியர் அவர்களின் பிறந்த தினத்தில் நினைவு கூர்வதுடன், அவர்தம் சிறப்பினை முன்னுதாரணமாகக் கொண்டு பயணிக்கும் தலைமுறையினை உருவாக்க செயற்படுவோம்

அறிஞர் தம் இதய ஓடை ஆழநீர், தன்னை மொண்டு நெறி தரும் மக்கள்

எண்ணம் செழித்திட ஊற்றி ஊற்றி, புதிய தோர் உலகம் செய்வோம்! - சிறகுகள் அமையம் (2023.11.10)

அமரர் பேராசிரியர் அழகையா துரைராசா அவர்கள் “ஒரு பொதுவானவர்” என்பதற்கு இதுவே சான்று.

1980 இல் ஊற்று என்ற அமைப்பை உருவாக்கிய இவர், அதன் தலைவராக செயல்பட்டு தனது முயற்சியால் பல அபிவிருத்தி திட்டங்களை அரச சார்பற்ற நிறுவனங்கள் மூலம் உருவாக்கி கிராம மக்களை முன்னேறினார். யாழ் குடாநாட்டின் தரைக்கீழ் நீர் சேமிப்பை ஊக்குவிக்கும் முகமாக 200 குளங்களின் வண்டல் மண் அகற்றும் திட்டம் ‘நோராட்’ நிறுவனத்தின் உதவியுடன் மேற்கொண்டார். இதன் பின்னர் ஐக்கிய அமெரிக்காவின் சர்வதேச அபிவிருத்தி திட்ட நிதி உதவியோடு பின்தங்கிய கிராமங்களின் வறுமை ஒழிப்புத் திட்டத்திற்கு, இந்நிறுவனமும் ‘கெயர்’ நிறுவனமும் இணைந்து அமுலாக்கிய உணவு உற்பத்தி திட்டத்தினையும், ‘போரூட்’ இன் உதவியுடன் காடு வளர்ப்பு திட்ட அறிக்கை தயாரிப்பு வேலைகளும் அவரின் முயற்சியால் மேற்கொள்ளப்பட்டன. 1990 ஆம் ஆண்டின் பின் வடபகுதியின் தன்னிச்சை பொருளாதார வளங்களின் அபிவிருத்தித் திட்டங்கள் தயாரிக்கும் நிபுணர் குழுவிற்கு தலைமை தாங்கி அதனை வழிநடத்திச் செல்ல பல திட்டங்கள் இவரால் தயாரிக்கப்பட்டன. என உடுவையூரான் அவர் பற்றி எழுதிய இணையக் குறிப்பிலே குறிப்பிட்டிருக்கிறார்.

பேராதனைப் பல்கலைக்கழகத்தில் காணப்படும் ‘அக்பர் பாலம்’ பேராசிரியரினால் நிர்மாணிக்கப்பட்டது. சிங்களப் பேராசிரியர் ஒருவரின் சவாலை ஏற்று மகாவலி ஆற்றில் ஒரேயொரு தூணை மட்டும் நிறுவி இப்பாலம் கட்டப்பட்டது. ‘துரைராசா பாலம்’ என அழைக்கப்பட வேண்டிய அந்தப் பாலம் இன்று ‘அக்பர் பாலம்’ என்றே அழைக்கப்படுகிறது. தமிழர்களாகிய எங்கள் பலருக்கே இந்த விடயம் தெரியாது.நாங்களாவது அந்தப் பாலத்தின் பெயரை ‘துரைராசா பாலம்’ என அழைப்பதன் மூலம் பேராசிரியரின் திறமைகளை மறைக்காமல் நினைவு கூறப்பட வேண்டியவரை நினைவு கூர்ந்து உண்மைகளை அடுத்த சந்ததியினருக்கு கடத்துவோம். யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்தில் கடமையாற்றிய போது உடுப்பிட்டியிலிருந்து ஏறக்குறைய முப்பது கிலோ மீற்றர்கள் தூரமுள்ள யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்திற்கு துவிச்சக்கர வண்டியிலேயே சென்று வந்தார்.போர் மேகங்கள் வடமராட்சிப் பகுதியை அதிகமாகச் சூழ்ந்திருந்த அந்தக் காலப்பகுதியிலும் வல்லை வெளியினூடாகப் பயணம் செய்து தன்னுடைய பணியைத் தவறாது செய்தார். மிகவும் எளிமையான வாழ்க்கை வாழ்ந்தார். எல்லோரிடமும் மிகவும் அன்பாகவும் பண்பாகவும் பழகும் ஒழுக்க சீலர். அதனால் எல்லோருக்குமே பேராசிரியர் துரைராசாவை மிகவும் பிடிக்கும். என்பதால் தான் ஈழ வரலாற்றிலே முதன் முதலாய் அவருக்கு மாமனிதர் பட்டத்தை வழங்கிக் கௌரவித்தனர்.

# இந்தவார ராசிபலன் 12.11.2023 - 18.11.2023

ஞாயிற்றுக்கிழமை
சோபகிருது வருடம் - ஐப்பசி 26
நல்ல நேரம்: 7.30 - 9.00
ராகு காலம் : 4.30 - 06.00
திதி : சதுர்த்தசி

### மேஷம்
[ அசுவினி, பரணி, கார்த்திகை 1 பாதம் ]

குழந்தைகளால் மகிழ்ச்சியான சூழ்நிலை உண்டாகும். வழக்குகளில் இருந்த அலைச்சல்கள் குறையும். உத்தியோகஸ்தர்கள் எதிர்பார்த்த பதவி உயர்வை பெறுவார்கள். வியாபாரிகள் வியாபாரத்தில் புதிய உத்திகளை புகுத்துவார்கள். விவசாயிகள் கால்நடைகளின் மீது தனிக் கவனம் செலுத்துவார்கள். அரசியல்வாதிகள் மக்கள் சேவையில் பாராட்டை பெறுவார்கள். கலைத்துறையினர் கிடைக்கும் வாய்ப்பை பயன்படுத்திக் கொள்வார்கள்.

### ரிஷபம்
[ கார்த்திகை 2,3,4, ரோகிணி, மிருகசீரிஷம் 1,2 ]

நல்லவர்களின் நட்பும் உதவியும் கிடைக்கும். செய்தொழிலில் எதிர்பார்த்த வளர்ச்சியை காண்பார்கள். உத்தியோகஸ்தர்கள் அலுவலகத்தில் முக்கியத்துவம் பெறுவார்கள். வியாபாரிகளுக்கு வாராக் கடன்கள் வசூல் ஆகும். விவசாயிகளுக்கு வயல் வரப்பு பிரச்னைகளில் நல்ல முடிவு ஏற்படும். அரசியல்வாதிகள் மறைமுக எதிர்ப்புகளால் சில பிரச்னைகளை சந்திக்க நேரிடும். கலைத்துறையினருக்கு புதிய ஒப்பந்தங்கள் தேடி வரும். மாணவமணிகளுக்கு பெற்றோரின் ஆதரவால் கோரிக்கைகள் நிறைவேறும்.

### மிதுனம்
[ மிருகசீரிடம் 3,4, திருவாதிரை, புனர்பூசம் 1,2,3 ]

குடும்பத்தில் உள்ளவர்களையும், நண்பர்களையும் நன்கு புரிந்து கொள்வீர்கள். செய்தொழிலில் சிக்கல்கள் குறையும். உத்தி யோகஸ்தர்களுக்கு பயணங்களால் புதிய அனுபவங்கள் உண்டாகும். வியாபாரிகள் வியாபாரத்தில் புதிய இலக்குகளை எட்டுவார்கள். விவசாயிகளுக்கு நண்பர்கள் உதவ முன்வருவார்கள். அரசியல்வாதிகளுக்கு இருந்த பிரச்னைகள் குறையும். கலைத்துறையினர் வீண் வதந்திகளால் சரிவைக் காண்பீர்கள். பெண்மணிகள் உறவினர்களை மகிழ்ச்சியுடன் நடத்துவீர்கள்.

### கடகம்
[ புனர்பூசம் 4, பூசம், ஆயில்யம் ]

சாதுரியமான பேச்சினால் அனைவரையும் கவருவீர்கள். இல்லத்தில் திருமணம் போன்ற சுப நிகழ்ச்சிகள் நடக்கும். உத்தியோகஸ்தர்களுக்கு எடுத்த வேலைகள் அனைத்தும் சுமுகமாக முடியும்.வியாபாரிகள் கடையை சிறப்பாக சீரமைப்பார்கள். விவசாயிகள் புதிய குத்தகைகளை எடுப்பீர்கள். அரசியல்வாதிகளுக்கு வெளியூர் பயணங்களால் அனுகூலம் உண்டாகும். கலைத்துறையினருக்கு எதிர்பார்த்த வாய்ப்புகள் அமையும்.

### சிம்மம்
[ மகம், பூரம், உத்திரம் 1 ]

நெருங்கிய உறவினர்களுக்கு தக்க நேரத்தில் உதவி செய்வீர்கள். பெற்றோருடன் இணக்கமாகப் பழகுவீர்கள். உத்தியோகஸ்தர்கள் திறமைக்கேற்ற வேலை கிடைத்து மகிழ்ச்சி அடைவீர்கள். வியாபாரிகளுக்கு கூட்டாளிகளின் ஆலோசனைகளால் தெளிவு பிறக்கும். விவசாயிகளுக்கு, கலைத்துறையினருக்கு அந்தஸ்து உயரும். பெண்மணிகள் ஆடம்பரச் செலவுகளை குறைத்துக் கொள்வீர்கள்.

### கன்னி
[ உத்திரம் 2,3,4, அஸ்தம், சித்திரை 1,2 ]

வழக்குகள் வெற்றி பெறும். உடல் உபாதைகள் மறையும். வருமானம் படிப்படியாக உயரும். உத்தியோகஸ்தர்கள் மேலதிகாரிகளின் மனம் கோணாமல் நடந்து கொள்வீர்கள். வியாபாரிகள் கூட்டாளிகளிடம் ரகசியங்களை பகிர்ந்து கொள்ள வேண்டாம். விவசாயிகள் நீர்வரத்து பிரச்னைகளில் கவனம் செலுத்துவீர்கள். அரசியல்வாதிகள் கட்சிப் பணிகளை தடையின்றி நடத்துவீர்கள். கலைத்துறையினர் சக கலைஞர்களிடம் வாக்குவாதம் செய்யாதீர்கள். பெண்மணிகள் குலதெய்வ பிரார்த்தனைகளை நிறைவேற்றுவீர்கள்.

### துலாம்
[ சித்திரை 3,4, சுவாதி, விசாகம் 1,2,3 ]

குடும்பத்தில் நிம்மதி பூத்துக் குலுங்கும். நினைத்த காரியங்களை சரியான நேரத்தில் முடிப்பீர்கள். உத்தியோகஸ்தர்கள் சக ஊழியர்களிடம் அநாவசிய பேச்சைத் தவிர்க்கவும். வியாபாரிகளுக்கு கொடுக்கல், வாங்கலில் லாபம் உண்டாகும். விவசாயிகளுக்கு விளைச்சல் பெருகி லாபம் அதிகரிக்கும். கலைத்துறையினர் சக கலைஞர்களுக்கு உதவி செய்து மகிழ்வீர்கள். பெண்மணிகள் குடும்பப் பிரச்னைகளை சாதுரியமாக சமாளிப்பீர்கள்.

### விருச்சிகம்
[ விசாகம் 4, அனுஷம், கேட்டை ]

போட்டி பந்தயங்களில் வெற்றி பெறுவீர்கள். உத்தியோகஸ்தர்கள் அலுவலக வேலைகளை சுலபமாக செய்து முடிப்பீர்கள். வியாபாரிகள் கடையை விரிவுபடுத்த எடுக்கும் முயற்சிகளில் வெற்றி பெறுவீர்கள். விவசாயிகள் சுறுசுறுப்புடன் செயல்பட்டு விளைச்சலை பெருக்கு வீர்கள். அரசியல்வாதிகள் தீட்டும் திட்டங்களில் வெற்றி பெறு வீர்கள். கலைத்துறையினர் வெளியூர் பயணங்களின் போது எச்சரிக்கையாக இருக்கவும்.

### தனுசு
[ மூலம், பூராடம், உத்திராடம் 1 ]

உத்தியோகஸ்தர்கள் மேலதிகாரிகளின் மனம் மகிழும்படி நடந்து கொள்வீர்கள். வியாபாரிகள் முன்னேற்றப் பாதையில் செல்வீர்கள். விவசாயிகளின் முயற்சிகள் தடைகளை மீறி வெற்றி பெறும். அரசியல்வாதிகள் ரகசிய திட்டங்களை எவரிடமும் பகிர்ந்து கொள்ள வேண்டாம். கலைத்துறையினர் புதிய ஒப்பந்தங்களில் கையொப்படுவீர்கள். பெண்மணிகள் உறவினர் வருகையால் குடும்பத்தில் மகிழ்ச்சியை காண்பீர்கள்.

### மகரம்
[ உத்திராடம் 2,3,4, திருவோணம், அவிட்டம் 1,2 ]

இதுவரை நடக்குமா, நடக்காதா என்று இருந்த காரியங்கள் நல்லபடியாக நடந்தேறும். பூர்விக சொத்து விஷயத்தில் இருந்த பிரச்னைகள் தீரும். உத்தியோகஸ்தர்களுக்கு பதவி உயர்வு தேடி வரும். வியாபாரிகளுக்கு கொடுக்கல், வாங்கலில் இருந்த சிரமங்கள் குறையும் விவசாயிகளுக்கு கால்நடைகளால் லாபம் உண்டாகும். அரசியல்வாதிகளுக்கு புதிய பொறுப்புகள் தேடி வரும். கலைத்துறையினருக்கு பாராட்டுகள் கிடைக்கும். பெண்மணிகளுக்கு குழந்தைகளால் மகிழ்ச்சி உண்டாகும்.

### கும்பம்
[ அவிட்டம் 3,4, சதயம், பூரட்டாதி 1,2,3 ]

உத்தியோகஸ்தர்களுக்கு வேலைப்பளு அதிகரித்தாலும் சாதுரியமாக சமாளிப்பீர்கள். வியாபாரிகள் எதிலும் அகலக்கால் வைக்க வேண்டாம். விவசாயிகள் புதிய சந்தைகளில் லாபம் காண்பீர்கள். அரசியல்வாதிகளுக்கு மறைமுக எதிரிகளால் சிறு தொல்லைகள் உருவாகும். கலைத்துறையினருக்கு எதிர்பாராத இடங்களில் இருந்து வருமானம் வந்து சேரும். பெண்மணிகள் கடினமான சூழ்நிலைகளிலும் தைரியத்தை இழக்க மாட்டீர்கள். மாணவமணிகள் சாதனைகளை செய்து காட்டுவீர்கள்.

### மீனம்
[ பூரட்டாதி 4, உத்திரட்டாதி, ரேவதி ]

செய்தொழிலை விரிவுபடுத்துவீர்கள். எடுத்த காரியங்களை தள்ளிப் போடாமல் உடனுக்குடன் செய்து முடிப்பீர்கள். உத்தியோகஸ்தர்கள் வேலையில் அதிக கவனம் செலுத்துவீர்கள். வியாபாரிகள் கடன் வாங்கும் விஷயத்தில் கவனமாக இருக்கவும். விவசாயிகளுக்கு மகசூல் அதிகரிக்கும். அரசியல்வாதிகளுக்கு பேச்சு வார்த்தைகளில் நாவடக்கம் தேவை. கலைத்துறையினருக்கு புதிய வாய்ப்புகள் கிடைத்து வருமானம் பெருகும். பெண்மணிகளுக்கு குழந்தைகளால் மகிழ்ச்சி உண்டாகும். மாணவமணிகள் பெற்றோரின் ஆதரவினால் முன்னேற்றப் பாதையில் செல்வீர்கள்.

# கைகூடாத 'இரு தேச' கொள்கை






கடந்த இரண்டு ஞாயிறு விடியல் நேர உரையாடலைத் தவிர்க்க வேண்டிய சூழல். உடல் காய்ச்சலால் ஏற்பட்ட பாதிப்புடன் கூட, உங்களைச் சந்திக்க இயலவில்லையே என்ற தாக்கம்தான் எனக்கு மிகவும் வேதனை தந்தது. அடிக்கடி மழை மற்றும் திடீர் வெப்ப நிலைக் குறைவு போன்ற கால நிலை மாற்றத்தின் காரணமாக கடந்த சில வாரங்களாகவே சென்னையிலும் தமிழகத்தின் சில பகுதிகளிலும் இத்தகைய ப்ளூ காய்ச்சல் பரவலாக நிலவி வருகிறது. தங்கள் நோய் எதிர்ப்பு சக்தி குறைபாடு காரணமாக, குறிப்பாகக் குழந்தைகளும் முதியோரும் அதிகம் பாதிக்கப்பட்டு வருகின்றனர். நான் இதில் இரண்டாவது வகையில் வருகிறேன். கடும் இருமல் இன்னும் தொடர்ந்தாலும், இப்போது என் உடல் நிலை ஓரளவுக்குத் தேறியுள்ளது. சில நாட்கள் முன்னதாக, அமெரிக்காவின் கிளீவ்லண்டிலிருக்கும் எனது நெருங்கிய நண்பர், என் உடல் நிலை குறித்து விசாரிக்கத் தொலைபேசியில் அழைத்தார். எங்கள் உரையாடலின் இடையில், "நீங்கள் யாரை ஆதரிக்கிறீர்கள்- ஹமாஸா அல்லது இஸ்ரேலா?" என்று வினவினார்.

இருதய நோய் மருத்துவரான அந்த நண்பர், மூன்று தசாபதங்களுக்கு முன்னர், ஆசியர்களின் கனவு தேசமான அமெரிக்காவில் குடியேறி, அந்நாட்டின் குடியுரிமை பெற்றுவிட்ட இந்திய வம்சாவளியைச் சேர்ந்தவர். ஒரு விசுவாசமான அமெரிக்கப் பிரஜையாக, அவர் இஸ் ரேலை ஆதரிப்பது இயல்பானதுதான் என்று நான் கூறி னேன். காரணம், அமெரிக்கா நீண்ட காலமாகவே இஸ் ரேலுக்கு ஆதரவளித்துவரும் நாடு. இதைக் கூறி விட்டு, "சரிதானே?" என்று நான் அவரிடம் கேட்டேன். அதற்கு அவர் சிரித்து விட்டு, "நான்தான் முதலில் கேள்வி எழுப்பினேன். எனவே நீங்கள்தான் பதிலளிக்க வேண் டும். ஹமாஸா, இஸ்ரேலா" என்றார். எனது அழுத்தம் திருத்தமான உடனடி பதில், "இரண்டும் இல்லை" என்பதுதான். "உங்கள் பதில் பட்டும்படாமலும், நழுவும் விதமாகவும் உள்ளதே. 'இரண்டும் இல்லை' என்ற உங்கள் நிலைப்பாட்டை விளக்க முடியுமா?" என்று பிடிவாதமாகக் கேட்டார் நண்பர். எனது பதில் பட்டும்படாமலுமோ நழுவுவதுபோலோ இல்லை என்றும், தெளிவாகவே இரண்டு தரப்புக்கும் ஆதரவில்லை என்றும் உறுதியாக நான் கூறினேன். ஹமாஸ் என்பது, அப்பாவிப் பொதுமக்களையும் அவர்களுக்க ான உட்கட்டமைப்புகளையும் அழிக்க வேண்டியிருந்தாலும் பரவாயில்லை என்று, வன்முறை மூலமாகத் தனி பலஸ்தீன இலக்கை எட்டி விடலாம் என்று நம்பி, அதற் கேற்பச் செயல்படும் ஒரு தீவிரவாதக் குழு. ஆனால், எனது முந்தைய 'ஈழநாடு' கட்டுரைகளில் குறிப் பிட்டுள்ளதுபோல், இந்தப் பாலஸ்தீனத் தீவிரவாதம் என்பது, இஸ்ரேலின் பிடிவாதமான பாலஸ்தீன தேச எதிர்ப்புக் கொள்கையால் உருவாகி, உரம்பெற்ற சித்தாந்தம். இடம்பெயர்ந்த பாலஸ்தீனர்களை, காஸா என்னும் அந்தச் சிறிய நிலப்பரப்பில் அடைத்து வைத்துத் துன் புறுத்தி, அகதிகளாக ஆக்கி, அரபுலகம் மட்டுமல்லாமல் உலகத்தின் பல பகுதிகளிலும் தஞ்சம் புகும் நிலைக்குத் தள்ளுவதே இஸ்ரேலின் நிலைப்பாடாக இருக்கிறது. சுயநலம் மிகுந்த, தொலைநோக்கில்லாத புவிசார் அரசியலைக் கையிலெடுக்கும் வெள்ளையின மேற்குலகம் கண்ணை மூடிக்கொண்டு இஸ்ரேலை ஆதரிப்பது, இந்தக் கொடும் தீவிரவாத இயக்கமான ஹமாஸ், மேலும் வெறிகொண்டு வளரக் காரணமானது. நாகரிகம் மிக்கவர்கள் என்று மார்தட்டிக்கொள்பவர்கள், அந்தப் பிராந்தியத்தில் பாலஸ்தீனர்களும் யூதர்களும் இணக்கமாக ஒன்றாக வாழும் வகையில், இரு தேசக் கொள்கையை ஆதரித்திருந்தால், அப்பாவிகளைக் கொன்று குவிக்கும் ஒரு பேரழிவுச் சக்தியாக ஹமாஸ் உருவானதைத் தவிர்த்திருக்கலாம். எனது 'ஈழநாடு' நண்பர்களுக்கான ஒரு நினைவுகூரல் - 'இரு தேசக் கொள்கை' என்பது, பலஸ்தீனர்களுக்கும் இஸ்ரேலியர்களுக்குமான தனித்தனியான இரண்டு நிலப்பரப்புகளைத் தனித்தனித் தேசங்களாக அறிவிப்பது. **1947**இல் ஐநா பொதுச் சபையில், பலஸ்தீனத்தை இரண்டாகப் பிரித்து, ஒன்றை அரேபியர்களுக்கும் ஒன்றை யூதர்களுக்கும் வழங்கும் இரு தேசக் கொள்கை குறித்த தீர்மானம் (தீர்மானம் **181**(ii)) முதன்முறையாகக் கொண்டுவரப்பட்டது. கிறிஸ்தவர்கள், இஸ்லாமியர்கள், யூதர்கள் ஆகிய மூன்று பிரிவினருக்கும் புனிதத் தலமான ஜெருச லேம், சிறப்பு சர்வதேச ஆட்சியின்கீழ்க் கொண்டுவரப்பட்டது. ஆனால், இந்த இணக்கமான உடனிருக்கும் திட்டம் கைகூடவில்லை என்பதுதான் வேதனையான உண்மை. மாறாக, பரஸ்பர சந்தேகமும் வெறுப்பும்தான் தழைத்தோங்கி வளர்ந்தன. தற்போதைய போரானது, அக்டோபர் 7 அன்று, இஸ்ரேலின் தென் பகுதிகளில் ஹமாஸ் நடத்திய கொடூர தாக்குதலில் இருந்து தொடங்கியது. இதுவரையில், 4,500 குழந்தைகள் உட்பட, 11,000 பலஸ்தீனர்களையும் 1,400 இஸ்ரேலியர்களையும் பலி கொண்டதுடன், 240 யூதர்களைப் பிணைக் கைதிகளாகப் பிடித்து வைத்துள்ளது, ஹமாஸ். உலகிலேயே மிகத் திறமை வாய்ந்த உளவு அமைப்பு என்று பெயர்பெற்ற மொசாட்டின் கழுகுப் பார்வைக்குக்கூடச் சிக்காமல் தப்பியது, இஸ்ரேல் மீதான எதிர்பாராத ஹமாஸின் தாக்குதல். தெற்கு இஸ்ரேலின் பொது மக்களைக் குறிவைத்து, இப்படியொரு கொடூரத் தாக்குதலை ஹமாஸ் எதற்காகச் செய்தது? பாலஸ்தீன நாடு கோரிக்கை தனது மதிப்பை இழந்து வருவதாகவும், மிகப்பெரிய வன்முறை வெறியாட்டம் மூலமே அதை மீட்டெடுக்க முடியுமென்றும் தாங்கள் நம்புவதாகவும் ஹமாஸ் தலைவர்கள் கூறியதாகச் செய்திகள் வெளியாயின. இஸ்ரேலிய படையினரை எதிர்க்க ஹமாஸ் சுரங்கங்களை அமைத்திருந்தது. இதில் ஈடுபடுத்தப்பட்டவர்கள் பெரும்பாலும் பலஸ்தீனப் பொது மக்களே. ஈழப் போர் குறித்த செய்திகளை விரிவாக வழங்கிய ஒரு பத்திரிகையாளனாக, அதை ஒத்த இந்தச் செய்திகள் என் ரத்தத்தை உறைய வைத்தன. காஸா பகுதியைத் தன் கட்டுப்பாட்டில் வைத்திருக்கும் ஹமாஸ் இயக்கத்திற்கு, அப்பாவிப் பொது மக்கள் ஆயிரக்கணக்கில் உயிரிழப்பது குறித்த எந்தக் கவலையும் இல்லை. ஏனெனில், இஸ்ரேல் மற்றும் அதன் மேற்குலக நட்பு நாடுகள் பலஸ்தீன தனி நாட்டுப் போருக்கு இணங்க இதுதான் வழி என்று அது நம்பியது. ஈழ நாடு பிறக்க வேண்டுமானால், சிங்கள, தமிழ் அப்பாவிகளைப் பலிகொண்ட வன்முறை

## 'ஹமாஸ் - இஸ்ரேல்': நீங்கள் யார் பக்கம்?

தான் வழி என்று விடுதலைப் புலிகள் நம்பியது போல்தான் இது. அதன் பிறகு என்ன நடந்தது, ஈழப் போர் எப்படி முடிந்தது என்பதை நாமறிவோம்.

இன்றைய நமது உரையாடலின் தொடக்கப் பகுதிக்குச் செல்வோம் - எனது அமெரிக்க நண்பரின் கேள்வி. அந்த வினாவிற்கு என்னுடன் இணைந்து நீங்களும் விடையளியுங்கள். நமது ஆதரவு ஹமாஸுக்கா இஸ்ரேலுக்கா? இரண்டுக்கும் இல்லை என்று நான் சொல்கிறேன். நீங்கள் என்னுடன் உடன்படுகிறீர்களா, இல்லையா என்று சொல்லுங்கள். அமெரிக்க நண்பருக்கு முன் நான் எனது வாதத்தை வைத்ததுபோல, உங்கள் முன்னும் வைக்கிறேன். அப்பாவிப் பொதுமக்களைப் பலிவாங்கும் வன்முறையில்தான் பாலஸ்தீனத் தனி நாடு பிறக்கும் என்று ஹமாஸ் நம்புகிறது.

இதை ஒப்புக்கொண்டு ஹமாஸுக்கு எனது

### வாழக் கற்கும் விலங்குகள்!



ஆதரவை வழங்க வாய்ப்பே இல்லை. இஸ்ரேல் தனது மேற்குலக நட்பு நாடுகளின் ஆதரவோடு, **1947**இலேயே ஐ நா அங்கீகரித்த தனி பாலஸ்தீனம் என்பதை மறுத்தே வருகிறது. மருத்துவமனைகள், அகதி முகாம்கள், பள்ளிக் கட்டடங்கள் இருக்கும் காஸா பகுதியில் ஹமாஸ் தீவிரவாதிகள் பதுங்கியிருப்பதாகக் கூறி, அங்கெல்லாம் தாக்குதல் நடத்துகிறது. ஈழப்போரிலும் இப்படித்தானே சிங்கள ராணுவமும் செய்தது? நான் எப்படி இஸ்ரேலை ஆதரிக்க முடியும்?

இரண்டுக்கும் இடையில் சிக்கியுள்ள பலஸ்தீன மற்றும் இஸ்ரேலிய பொதுமக்களுக்காக என் இதயம் ரத்தம் சிந்துகிறது. என் கருத்து தவறா? வேதனை மிகுந்த என் இந்த கேள்விக்குப் பதிலளித்த அமெரிக்க நண்பர், "நீங்கள் சொல்வது மிகவும் சரி. நானும் அதையேதான் நினைக்கிறேன். இரு தரப்பிலும் பாதிக்கப்படுவது அப்பாவிப் பொது மக்களே. அவர்களைப் பற்றி நாம் கவலைகொள்ளவேண்டும்" என்றார்.

இஸ்ரேலிய தாங்கிகள் காஸா நகருக்குள் நுழைவதாகவும், ஹமாஸ் தலைவர் மறைந்திருக்கும் பதுங்கு குழியைக் கண்டுபிடித்துவிட்டதாக இஸ்ரேல் கூறுவதாகவும் அண்மைச் செய்திகள் தெரிவிக்கின்றன. காஸா பகுதியைச் சேர்ந்த பாலஸ்தீனர்கள், வாழ்வே நரகமாகி வருவதாக ஐ நா மனித உரிமைகள் ஆணையத் தலைவர் வோல்கர் டர்க்கை மேற்கோள் காட்டி, 'அல் ஜஸீரா' தெரிவிக்கிறது. ஒரு போர் நிறுத்தம் அறிவிக்கப்படவேண்டும் என்று அவர் கோரியிருக்கிறார், ஆனால், அது நடக்குமா என்பதை நாமே சிந்தித்துப் பார்க்கலாம்.

சென்னையில் இருக்கும் ஒரு பத்திரிகையாளன், உங்கள் பொன்னான ஞாயிறு காலைப் பொழுதை, யாழுக்கும் சென்னைக்கும் எட்டாத தூரத்தில் இருக்கும் இஸ்ரேல் - ஹமாஸ் போர் குறித்துப் பேசி ஏன் வீணடிக்கிறான் என்று நீங்கள் எண்ணக்கூடும். ஈழப் போரின் போது நடந்த நிகழ்வுகளுக்கும், தற்போது மேற்காசியாவில் நடக்கும் நிகழ்வுகளுக்கும் இடையில் இருக்கும் ஒத்த தன்மையை நாம் உணரமுடியும். அதோடு, மேலே குறிப்பிட்டிருந்த **1947** ஐ. நா. தீர்மானம் **181** (ii) இலங்கைக்கும் பொருந்தும். ஒரு கூட்டாட்சித் தத்துவத்தின் அடிப்படையில் தமிழர்களுக்கு மத்திய அரசாங்கத்தில் சம உரிமையும் தமிழ் மாகாணங்களில் சுயாட்சியும் வழங்கப்பட்டால், அது, இந்தத் தீவு தேசத்துக்கான நிரந்தர அமைதியையும் ஒட்டுமொத்த பெருவளர்ச்சியையும் பெற்றுத் தரும் என்று நான் திட்டவட்டமாக நம்புகிறேன். என் கனவும் இதுதான் இந்த என் கனவை நிசமாக்க, நம் கந்தனைப் பிரார்த்திக்கிறேன்.

மனித இனத்தின் இரத்த வெறியாட்டத்தை வரலாறு மீண்டும் மீண்டும் நிகழ்த்திக் காட்டினாலும், அமைதியின் மதிப்பை நாம் இன்னும் புரிந்துகொள்ளவில்லை என்பது மிகவும் வருந்தத்தக்க விஷயம். எனது மருத்துவ நண்பர் ஒருவர், ஒரு வீடியோவை எனக்கு அனுப்பியிருந்தார். ஒரு கம்பீரமான ஜெர்மன் ஷெபர்ட் நாயின் இதமான அணைப்பில் இருக்கும் ஒரு குரங்கின் மடியில், ஒரு அழகான பூனை அமைதியாக அமர்ந்திருக்கும் ஆனந்தமான காட்சி அது. அதில் இருந்த வாசகம்: "குரங்குகள், பூனைகள், நாய்கள் மற்றும் பிற விலங்குகள் இணக்கமாக ஒன்றாக வாழக் கற்றுக்கொண்டிருக்கும் நிலையில், மனிதர்கள், இன, மதப் போர்களினால் ஒருவரை ஒருவர் வெட்டி மடிகிறார்கள். இதில், உண்மையில் யார் மிருகம் என்றே புரியவில்லை."

பரஸ்பர நல்லெண்ணமும் நம்பிக்கையும் இல்லாதவர்கள், இந்த நாய், பூனை மற்றும் குரங்கு ஆகியவை இப்படி நட்புடன் பழகிப் படங்களுக்கு போஸ் கொடுக்கப் பயிற்சியளிக்கப்பட்டிருக்கும் என்று வாதம் செய்யலாம். அது உண்மையாகவும் இருக்கலாம். ஆனால், இயற்கையின் விதியின்படி, மரபு ரீதியாக ஒன்றுக்கொன்று எதிரியாக இருக்கக்கூடிய இவற்றுக்கு, அன்புடனும் நட்புடனும் அமைதியாக வாழப் பயிற்சியளித்தவர்கள் யார்? இவற்றின் சொந்தக்காரரான ஓர் ஆணோ பெண்ணோதானே அதைச் செய்திருக்க முடியும்? தன்னைவிடத் தாழ்ந்த அறிவு நிலை கொண்டதாகக் கருதப்படும் விலங்குகளுக்குக்கூட, மரபணுவில் கலந்த எதிர்ப்புணர்ச்சியை விடுத்து அமைதியாக இணங்கி வாழப் பயிற்சி கொடுக்க ஒரு மனிதனால் முடியுமென்றால், தனது சொந்த, அறிவார்ந்த இனமான சக மனிதனுக்கு வன்முறைகளின் பேரழிவுகளையும், அமைதியின் முக்கியத்துவத்தையும் எடுத்துக்கூறிப் பயிற்றுவிக்க முடியாதா? மனித இனத்தையும் இயற்கையையும் அழிக்கக்கூடிய அழிவு ஆயுதங்களைத் தயாரிக்கச் செலவு செய்யப்படும் பணத்தைக் கொண்டு, உணவு தயாரித்து, இம்மண்ணில் பசிப்பிணியைப் போக்க முடியாதா? மனிதனுக்கும் விலங்குக்கும் உள்ள மோதல் குறித்து மேலும் பார்க்கவேண்டுமானால், வன விலங்குகளின் வாழ்வு குறித்த காணொலிகளைப் பார்க்கலாம். வயிறுமுட்டத் தின்ற களைப்பில் சிங்கங்களும் சிறுத்தைகளும் சோம்பித் துயில்கொண்டிருக்கும் இடத்திலிருந்து அதிக தொலைவில்லாத இடத்தில் மான்களின் கூட்டம் அச்சமின்றி மேய்ந்து கொண்டிருக்கும். பிற விலங்குகளை அடித்து உண்ணும் கொடிய விலங்குகள்கூட, பசித்தாலோ அல்லது தற்காப்புக்காகவோ மட்டுமே கொல்கின்றன. ஆனால், ஆதியிலிருந்து இன்று வரை, மனிதன் மட்டும்தான் எந்த நியாயமான காரணமும் இன்றி, வெறும் பேராசையாலும் ஆணவத்தாலும் அழிவை ஏற்படுத்துகிறான். மனம் நோகச் செய்யும் இந்தச் சிந்தனைகளும் வார்த்தைகளும் இத்தோடு போதும். குடும்பத்துடன் இனிய ஞாயிறு காலை உணவைச் சுவைக்கும் சுகமான நேரமிது.

தீபாவளி நல்வாழ்த்துக்கள். வணக்கம்.

# சம்பந்தனின் அரசியல் எதிர்காலம்?



வீரகத்தி
தனபாலசிங்கம்



இந்த தலைப்பு பலருக்கு பெரும் நகைப்புக்குரியதாக தோன்றலாம். ஆனால், தமிழ் தேசிய கூட்டமைப்பின் தலைவர் இராஜவரோதயம் சம்பந்தன் அவர்கள் 90 வயதைக் கடந்து உடல் நலம் குன்றி வெளிநடமாட்டம் வெகுவாகக் குறைந்துவிட்ட போதிலும், பாராளுமன்ற உறுப்பினர் பதவியைத் துறப்பதற்கு மறுத்து வருவதாகக் கூறப்படுகின்ற நிலையில் அவர் இன்னமும் கூட தனக்கு தமிழர் அரசியலில் ஒரு வகிபாகம் இருக்கிறது என்று நம்புகிறார் என்று நினைக்கவேண்டியிருக்கிறது. அதனால் கேள்விக்குறியுடனான இந்த தலைப்பு.

சம்பந்தன் அவர்களின் மிகுந்த நம்பிக்கைக்குரியவரான தமிழ் தேசிய கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் தொலைக்காட்சி நிகழ்ச்சியொன்றில் தனது தலைவரின் அரசியல் குறித்து தெரிவித்த கருத்து ஊடகங்களிலும் அரசியல் பரப்பிலும் ஒரு விவாதத்தை மூளைவைத்திருக்கிறது.

சர்வதேச சமூகத்தின் கவனத்தை இலங்கையை நோக்கி திருப்பியிருக்கும் முக்கியமான பிரச்சினைகளில் ஒன்று அரசியலிலும் ஆட்சிமுறையிலும் தலைவிரித்தாடும் ஊழலும் முறைகேடுகளுமாகும். இது குறித்து சில தினங்களுக்கு முன்னர் உள்நாட்டு தொலைக்காட்சி அலைவரிசை ஒன்றில் அரசியல்வாதிகளின் கலந்துரையாடல் நிகழ்ச்சி ஒன்று இடம்பெற்றது.

ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் எரான் விக்கிரமரத்ன, தேசிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் ஹரினி அமரசூரிய, சுமந்திரன், சம்பிக்க ரணவக்கவின் ஐக்கிய குடியரசு முன்னணியின் உறுப்பினர் என்று அறிமுகப்படுத்தப்பட்ட ஷிரால் லக்திலக ஆகியோர் அதில் கலந்து கொண்டு கருத்துக்களை வெளியிட்டனர்.

கலந்துரையாடல் முடிவுற்றதும் தொலைக்காட்சி பார்வையாளர்கள் "வட்ஸ்அப்" மூலமாக இவர்களிடம் கேள்விகளைக் கேட்பதற்கு அனுமதிக்கப்பட்டது. அதன்போது பார்வையாளர் ஒருவரிடமிருந்து வந்த கேள்விக்கு சுமந்திரன் அளித்த பதிலே சர்ச்சையை தோற்று வித்திருக்கிறது.

இந்த கட்டுரையாளர் அந்த தொலைக்காட்சி நிகழ்ச்சியைப் பார்க்கவில்லை. அதில் பங்கேற்றவர்கள் வெளியிட்ட கருத்துக்கள் தொடர்பில் பத்திரிகைகளில் வெளியான செய்திகளை அடிப்படையாகக் கொண்டே அந்த சர்ச்சை குறித்து இங்கு ஆராயப்படுகிறது.

தகவல் பெறுவதற்கான உரிமையைப் பயன்படுத்தி பாராளுமன்ற அமர்வுகள் குறித்து விபரங்களைப் பெற்றுக் கொண்ட பார்வையாளர் சுமந்திரன் அவர்களிடம் கேள்வியை எழுப்பினார்.

தன்னால் பெறப்பட்ட விபரங்களின் பிரகாரம் தற்போதைய பாராளுமன்றத்தின் 228 நாள் அமர்வுகளில் தமிழ் தேசிய கூட்டமைப்பின் தலைவர் சம்பந்தன் 38 நாட்கள் மாத்திரமே கலந்துகொண்டார். எதிர்க்கட்சி தலைவராக இருந்தபோது உத்தியோகபூர்வ வாசஸ்தலமாக வழங்கப்பட்ட அரசாங்க பங்களாவிலேயே இன்னமும் அவர் வசித்து வருகிறார். பாராளுமன்ற அமர்வுகளில் 13 சதவீதமானவற்றில் மாத்திரம் கலந்து கொண்ட சம்பந்தனுக்காக நாற்பது இலட்சம் ரூபாவுக்கும் அதிகமான நிதி செலவாகியிருப்பதாக மதிப்பிடப்பட்டிருக்கிறது என்று கூறிய அந்த பார்வையாளர் இவ்வாறு செலவிடப்படுவது இன்னொரு வகையான ஊழல் இல்லையா என்று சுமந்திரனிடம் கேட்டார்.

இது விடயத்தில் ஊழல் என்பது பற்றி பதிலளிப்பதை தவிர்த்துக் கொண்ட சுமந்திரன் அத்துடன் நிறுத்தவில்லை. சம்பந்தன் அவர்கள் விடயத்தில் இலங்கை தமிழரசு கட்சிக்கும் தனிப்பட்ட முறையில் தனக்கும் அண்மைக்காலமாக இருந்துவரும் பெரும் மனக்குறையை வெளிப்படுத்துவதற்கு அந்த சந்தர்ப்பத்தைப் பயன்படுத்திக் கொண்டார்.

வயோதிபம் மற்றும் உடல்நலமின்மை காரணமாக சம்பந்தனால் சில சந்தர்ப்பங்களில் பாராளுமன்ற அமர்வுகளில் பங்கேற்க முடியாமல் இருக்கிறது என்று கூறிய சுமந்திரன் தானும் தமிழரசு கட்சியின் மூத்த உறுப்பினர்கள் சிலரும் கடந்த வருடம் சம்பந்தனைச் சந்தித்து தங்களது விசனத்தை வெளிப்டுத்தியதாகவும் உடல்நிலை நன்றாக இல்லை என்பதைத் தெரிந்துகொண்டுதான் திருகோணமலை மக்கள் தனக்கு 2020 ஆகஸ்ட் பாராளுமன்ற தேர்தலில் வாக்களித்ததாகக் கூறி பதவிதுறக்க மறுத்து விட்டதாகவும் குறிப்பிட்டார்.

சுமந்திரன் இவ்வாறு பகிரங்கமாக கூறுவார் என்று எவரும் எதிர்பார்க்கவில்லை. சம்பந்தனும் கூட எதிர்பார்த்திருக்கமாட்டார்.

**தமிழ் தேசிய கூட்டமைப்பின் சார்பிலான முதலமைச்சராக பதவி வகித்தபோதிலும், சம்பந்தனின் தலைமைத்துவத்தையோ அல்லது கட்சியின் கட்டுப்பாட்டையோ விக்னேஸ்வரன் மதித்துச் செயற்படவில்லை. ஆனால், இன்று சுமந்திரன் கூறிய கருத்துக்கு பிறகு சம்பந்தனே தமிழ் மக்களின் அடையாளம் என்றும் அவரது சேவை தேவை என்றும் நீதியரசர் ஊடகங்களுக்கு அறிக்கை வெளியிடுவதை காணக்கூடியதாக இருக்கிறது.**

தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் தலைவராக நீண்டகாலமாக இருந்து வந்த சம்பந்தன் அதன் பாராளுமன்ற உறுப்பினர்களில் சுமந்திரனையே மற்றவர்களுடன் ஒப்பிடும்போது கூடுதலான அளவுக்கு தனது நம்பிக்கைக் குரியவராக கருதினார் என்பது இரகசியம் அல்ல. சிறந்த ஒரு சட்டத்தரணியான அவரை 2010 பொதுத்தேர்தலில் கூட்டமைப்பின் தேசியப்பட்டில் மூலமாக பாராளுமன்ற உறுப்பினராக்கி அரசியலுக்குக் கொண்டுவந்தவரே சம்பந்தன் தான்.

முக்கியமான அரசியல் மற்றும் இராஜதந்திர சந்திப்புக்களின்போது சுமந்திரன் தன்னுடன் சேர்ந்து பங்கேற்பதை சம்பந்தன் எப்போதும் உறுதி செய்து கொள்வார். தமிழர் அரசியலைப் பொறுத்தவரை, சர்வதேச சமூகத்துடனான தீவிர ஊடாட்டம் முக்கியமானதாக இருக்கின்ற இன்றைய காலகட்டத்தில் தமிழரசு கட்சியின் அடுத்த தலைமைத்துவத்துக்கு சுமந்திரனை சம்பந்தன் வளர்க்கிறார் என்றும் நம்பப்பட்டது.

அத்தகைய ஒருவர் தன்னைப் பற்றி இவ்வாறு கூறியிருப்பது சம்பந்தனுக்கு நிச்சயம் மனவருத்தத்தை ஏற்படுத்தியிருக்கும் என்பதில் சந்தேகமில்லை. ஆனால், பகிரங்கமாக அதைப் பற்றி எதையும் இதுவரை அவர் கூறவில்லை. அதுதான் சம்பந்தன். உடனடியாக எதிர்வினையை ஆற்றாமல் அமைதியாக இருப்பது அவரின் சுபாவம்.

அதேவேளை, சுமந்திரனைப் பொறுத்தவரை, சம்பந்தனுக்கு எதிராக கிளம்பவேண்டிய தேவை எதுவும் இருப்பதாகவும் தெரியவில்லை. தொலைக்காட்சி நிகழ்ச்சியில் கேள்விக்கு பதிலளிக்கும்போது வயோதிபம் மற்றும் உடல் நலக்குறைவு காரணமாக ஒழுங்காக செயற்பட முடியாமல் இருக்கும் ஒரு அரசியல் தலைவரை நியாயப்படுத்தி கருத்து வெளியிடுவது அவருக்கு கஷ்டமானதாக இருந்திருக்கக்கூடும்.

தனது கருத்து குறித்து உருவான சர்ச்சையை அடுத்து கொழும்பு ஆங்கிலத் தினசரி ஒன்றின் செய்தியாளருடன் பேசிய சுமந்திரன் என்றென்றைக்குமே தீவிர அரசியலில் தொடர்ந்து இருக்கமுடியாது என்பதை சகல அரசியல்வாதிகளும் புரிந்துகொள்ள வேண்டும் என்றும் சம்பந்தன் விவகாரத்தில் விரைவில் தீர்மானம் ஒன்றை தாங்கள் எடுக்க வேண்டியிருக்கிறது. தமிழரசு கட்சிக்குள் குழப்பத்தை தோற்றுவிக்கும் நோக்கத்தைக் கொண்டிருக்கும் சக்திகள் இந்த விவகாரத்தை அனுகூலமாகப் பயன்படுத்துவதை தடுப்பதற்கு சாத்தியமானளவு விரைவாக தீர்வைக் காண்பதில் அக்கறை கொண்டிருப்பதாகவும் கூறினார்.

சம்பந்தன் பாராளுமன்ற உறுப் பினர் பதவியை துறக்கவேண்டும் என்று மாத்திரம் சுமந்திரன் விரும்புகிறாரா அல்லது அவர் முற்றாக அரசியலில் இருந்தே ஓய்வுபெறவேண்டும் என்று விரும்புகிறாரா என்று முதலில் ஒரு சந்தேகம் ஏற்பட்டது.

என்றென்றைக்கும் தீவிர அரசியலில் தொடர்ந்து இருக்கமுடியாது என்பதை அரசியல் வாதிகள் புரிந்து கொள்ள வேண்டும் என்ற கூற்றை சம்பந்தன் அரசியலில் இருந்தும் முற்றாக ஓய்வு பெற்றுவிட வேண்டும் என்று அவர் விரும்புவதாக வியாக்கியானம் செய்யக் கூடிய வாய்ப்பும் இருந்தது.

இந்த சந்தேகத்தை தெளிவுபடுத்திக் கொள்வதற்கு சுமந்திரனுடன் தொடர்பு கொண்டபோது அவர் சம்பந்தன் பாராளுமன்ற உறுப்பினர் பதவியில் இருந்து மாத்திரம் விலகவேண்டும் என்பதே தனது நிலைப்பாடு என்றும் அவரை அரசியலில் இருந்து ஓய்வு பெறவேண்டும் என்று தான் கேட்கவில்லை என்றும் கூறினார்.

சம்பந்தன் இப்போது கொழும்பு வாசஸ்தலத்தில் இருந்தவாறே அரசியல் வாதிகளுடனும் இராஜதந்திரிகளுடனும் சந்திப்புக்களை நடத்துகிறார். முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ச கூட ஒரு தடவை சம்பந்தனைத் தேடிச்சென்று சந்தித்தார்.

அரசியல் நிலைவரங்கள் குறித்து அவ்வப்போது ஊடக அறிக்கைளை வெளியிடும் அவர் திருகோணமலை பிரச்சினைகள் குறித்து அரசாங்க தலைவர்களுக்கும் அதிகாரிகளுக்கும் கடிதங்களை எழுதுகிறார். ஆனால் தனது மாவட்ட மக்களைச் சந்திக்கவோ அல்லது மாவட்ட அபிவிருத்தி கூட்டங்கள் போன்ற நிகழ்வுகளில் கலந்து கொள்வதற்கோ அவர் நேரடியாகச் செல்லக்கூடிய நிலையில் இல்லை.

சிங்கள அரசியல் தலைவர்களினதும் வெளிநாட்டு தலைவர்கள் மற்றும் இராஜதந்திரிகளினதும் மதிப்புக்குரியவராக சம்பந்தன் விளங்குகிறார். நீண்டகால அரசியல் அனுபவத்தைக் கொண்ட அவரின் உயர்த்திக்கு நிகரான வேறு ஒரு தமிழ் அரசியல்வாதி இன்று இல்லை என்பது அவருக்கு அனுகூலமானதாக இருக்கிறது. வீடுதேடி வந்து சந்திக்கும் இராஜதந்திரிகளிடம் தமிழ் மக்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகளை விளக்கிக் கூறி தேசிய இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வொன்றைக் காண்பதற்கு சர்வதேச சமூகத்தின் உதவியைக் கோருகிறார். இந்த அளவில் அவரின் செயற்பாடுகள் இருக்கின்றன.

தனித்தமிழ் நாட்டுக்கு தமிழ் மக்களின் ஆணையைக் கேட்டு 1977 ஜூலை பொதுத்தேர்தலில் போட்டியிட்டு காலஞ்சென்ற தலைவர் அப்பாப்பிள்ளை அமிர்தலிங்கம் - முருகேசு சிவசிதம்பரம் இரட்டையர் தலைமையில் பாராளுமன்றம் வந்த தமிழர் ஐக்கிய விடுதலை கூட்டணியின் 18 உறுப்பினர்களில் இன்று எம்மத்தியில் இருப்பவர்கள் சம்பந்தனும் வீரசிங்கம் ஆனந்தசங்கரியும்தான். அந்த தேர்தலில் தெரிவு செய்யப்பட்டவர்களில் தானும் சம்பந்தனுமே இன்றும் கூட சபையில் இருப்பதாக ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க பல தடவைகள் கூறியிருக்கிறார்.

தமிழ் தேசிய கூட்டமைப்பு உருவாக்கப்பட்ட நாள் தொடங்கி அதன் தலைவராக இருந்துவரும் சம்பந்தனுக்கு உள்நாட்டுப் போரின் முடிவுக்கு பின்னரான தமிழர் அரசியலின் தலைமைத்துவம் தானாக வந்துசேர்ந்தது. 1956 ஆம் ஆண்டு தமிழரசு கட்சியில் இணைந்து கொண்ட அவர் ஆறரை தசாப்தகால அரசியல் வாழ்வைக் கொண்டவர் என்றாலும் அவருடைய அரசியல் மரபு என்று அமையப்போவது கூட்டமைப்பின் தலைவராக முன்னெடுத்த

(14ஆம் பக்கம் பார்க்க)

பனங்காட்டான்

# அரசியல் விளையாட்டில் திண்டாடும் விளையாட்டு! ‘அவுட்’ ஆகப்போவது யார்?



இலங்கை நாளாந்தம் சந்திக்கும் பிரச்னைகளை ஒவ்வொன்றாகப் பதிந்து கூட்டினால் அரைச் சதத்தை (கிரிக்கெட் பாசையில்) தாண்டும். அடையாளம் காணப்பட்ட பிரச்சனைகளில் ஒன்று கூட இதுவரை தீர்க்கப்படவில்லை.

இந்த நிலையில் இவற்றுடன் இன்னொன்றாக விளையாட்டுப் பிரச்சனையும் சேர்க்கப்பட்டு சர்வதேச மட்டத்தில் பேசுபொருளாகியுள்ளது. இங்கு குறிப்பிடப்படும் விளையாட்டு கிரிக்கெட் என்று கூறப்படும் துடுப்பாட்டம். இது வெள்ளையர்களால் பொழுதுபோக்குக்காக உருவாக்கப்பட்ட மேல்மட்ட விளையாட்டு.

ஆரம்பத்தில் இது பிரித்தானிய சாம்ராஜ்யத்துக்கு உட்பட்ட நாடுகளில் பிரபல்யம் பெற்றது. ஒருநாள் ஆட்டம், இருபது ஓவர் ஆட்டம், ஐம்பது ஓவர் ஆட்டம், ஐந்து நாள் டெஸ்ட் ஆட்டம் என்று பல்வேறு வகைகளில் பரிமாணம் பெற்று இன்று அரசியல் அரங்கையே சிப்பிலி ஆட்டும் ஒன்றாக வளர்ந்துள்ளது.

கடந்த ஒரு வாரமாக இலங்கை அரசியலில் இதுவே உச்சாடன வார்த்தை. கிரிக்கெட்டுக்கான நிர்வாகசபை, இடைக்கால சபை, நீதிமன்ற தீர்ப்பு, நாடாளுமன்றத்தில் ஏகமனதான தீர்மானம் என்று பல கட்டங்களாக இது



நீட்சி பெற்றுச் செல்கின்றதாயினும், முடிவில் யார் அவுட் ஆகுவார் என்பதை இப்போது சொல்ல முடியாதுள்ளது. சொல்லப்போனால் இலங்கையின் இனப்பிரச்சனைத் தீர்வு முயற்சி குரங்கு வால்போல் நீண்டு செல்லும் பாதையில் கிரிக்கெட் பிரச்சனையும் சேர்ந்து விடும் போல் தெரிகிறது.


விளையாட்டுத் தானே என்று இதற்குத் தீர்வு காண முடியாவிடின், அரசியலில் சில தலைகள் உருட்டப்படும் (கிரிக்கெட் மைதானத்தில் பந்தை உருட்டுவது போன்று). ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கும் விளையாட்டுத்துறை அமைச்சர் றொசான் ரணசிங்கவுக்கும் இடையிலான ஆட்டம், மத்தியஸ்த ரின்றி ‘சிக்ஸர்’ வேகத்தில் ஓடிக்கொண்டிருக்கிறது.

ஜனாதிபதி என்ற பதவி வழியான ரணிலின் எதேச்சாதிகார உத்தரவுக்குப் பணிய மறுத்த அமைச்சர் றொசான் ரணசிங்கவை பதவி நீக்க வேண்டுமென்ற உள்வீட்டு முணுமுணுப்பு இப்போது காற்றில் கலந்து ‘ஸ்பின்’ வேகத்தில் சுழன்றடிக்கிறது.

தற்போதைய உலகக் கிண்ண கிரிக்கெட் போட்டியில் இலங்கை அணி படுதோல்வியைச் சந்திக்க நேர்ந்ததால் மட்டும் இந்தப் பிரச்சனை எழுந்ததாகக் கூறமுடியாது. இன்றைய சூழ்நிலையில் ஐசிசி எனப்படும் சர்வதேச கிரிக்கெட் சபை, இலங்கை கிரிக்கெட் சபைக்கு விதித்துள்ள இடைக்காலத்தடை எதிர்பாராதது என்கின்றனர் இதனுடன் நெருக்கமான உறவு கொண்டவர்கள்.

ஊழல், நிதிக்கையாடல், வீரர்கள் தெரிவில் பாரபட்சம், அரசியல் ஆதிக்கம் என்ற குறிப்பிடக்கூடிய காரணிகளால் பல வருடங்களாக இலங்கை கிரிக்கெட் சபை பொதுவெளியில் விமர்சிக்கப்பட்டு வந்தது.

ஜே.ஆர்.ஜெயவர்த்தனவின் ஆட்சிக் காலத்தில் கல்வி அமைச்சராக தாம் இருந்தபோது (1980 - 1989) பாடசாலைகளில் கிரிக்கெட் விளையாட்டை ஊக்குவிக்குமாறு ஜனாதிபதியால் பணிக்கப்பட்டதாகவும், அதனைச் செவ்வனே நிறைவேற்றியதால் இலங்கையின் கிரிக்கெட் தரம் சர்வதேசத்துக்கு உயர்ந்தது என்றும் கூறும் ரணில், 45 ஆண்டுகளுக்கு முந்திய நிலாக்காலத்தை நினைவுகூர்ந்து மகிழ்கிறார்.



**கிரிக்கெட் இடைக்கால சபையின் தலைவராக விளையாட்டு அமைச்சரால் நியமிக்கப்பட்ட பிரபல கிரிக்கெட் ஜாம்பவான் அர்ஜுன ரணதுங்க, கிரிக்கெட்டிலிருந்து ஓய்வு பெற்ற பின்னர் சந்திரிகாவின் சுதந்திரக் கட்சி அரசில் அமைச்சராகவும், ஜனாதிபதித் தேர்தல்களில் சரத் பொன்சேகா, மைத்திரிபால சிறிசேனவையும் ஆதரித்தவர். அடுத்து ஐக்கிய தேசிய கட்சி தலைமையைக் கைப்பற்றி ரணிலை ‘அவுட்’ ஆக்க எத்தனித்தவர். இவரை எவ்வாறு இடைக்கால சபைத் தலைவராக ரணில் அனுமதிப்பார்?**

2020இல் கோட்டபாய ராஜபக்ஷவின் அமைச்சரவையில் மகிந்தவின் மகனான நாமல் ராஜபக்ஷ விளையாட்டுத்துறை அமைச்சராக நியமனமானதை அவரது கனாக்காலம் என்பர். ரக்பி விளையாட்டு வீரரான நாமலிடம் அகப்பட்ட விளையாட்டுத்துறை அமைச்சு சொல்லொணாப் பிரச்சனை களுக்கு உள்ளானது. இவரின் செயற் பாடுகளையும் ஊழல்களையும் பகிரங்க மாக விளாசித் தள்ளியவர் கிரிக்கெட்



ஜாம்பவான் அர்ஜுன ரணதுங்க.

1996ல் உலகக் கிண்ண சம்பியனாக இலங்கை அணி வென்றபோது இதன் தலைவராக அமைந்தவர் அர்ஜுன ரணதுங்க. உலகக் கிண்ணத்தை சுவீகரிப்பதற்கு இவர் அடித்த கடைசி பவுன்டரி (நான்கு ரன்கள்) கிரிக்கெட் வரலாற்றில் என்றும் பொன்னெழுத்தில் இருக்கும்.

கிரிக்கெட்டிலிருந்து ஓய்வு பெற்ற பின்னர் சந்திரிக குமாரதுங்கவின் தலைமையிலான சிறீலங்கா சுதந்திரக் கட்சியில் இணைந்து தேர்தலில் வெற்றி பெற்ற இவர் அமைச்சரானார். 2010ம் ஆண்டில் சரத் பொன்சேகா ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிட்டபோது அவரை ஆதரித்தவர், 2015இல் மைத்திரிபால சிறீசேன போட்டியிட்டபோது அவரின் ஆதரவாளரானார். அதனையடுத்து ஐக்கிய தேசிய கட்சிக்குள் பிளவு ஏற்பட்ட போது ரணில் விக்கிரமசிங்கவை எதிர்த்து தலைமைப் பதவியை கைப்பற்றுவதற்கும் முனைந்தவர் அர்ஜுன ரணதுங்க.

2021ம் ஆண்டு நவம்பர் மாதம் 30ஆம் திகதி ஐக்கிய தேசிய கட்சியிலிருந்து வெளியேறிய அர்ஜுன, கடந்த வாரம் கிரிக்கெட் இடைக்கால சபையின் தலைவராக விளையாட்டுத்துறை அமைச்சர் றொசான் ரணசிங்கவினால் நியமனமானதையடுத்தே புதிய பிரச்சனை பூதாகரமாகக் கிளம்பியது.

ஐக்கிய தேசிய கட்சியின் ஆயுட்கால தலைவராக தம்மை ஆக்கியுள்ள ரணில் விக்கிரமசிங்கவின் தலைமைப் பதவிக்கு ஆப்பு வைக்கப் புறப்பட்ட அர்ஜுன ரணதுங்கவை கிரிக்கெட் இடைக் கால சபையின் தலைவராக செயற் பட எவ்வாறு அனுமதிக்க முடி யும். அதுவும் ஜனாதிபதியின் ஆலோசனை இன்றியே இந்த நியமனம் இடம்பெற்றது என்பது இன்னொரு விடயம். அர்ஜுனவின் இளைய சகோதரரும் பொதுஜன பெரமுனவின் உறுப்பினருமான பிரசன்ன ரணதுங்க ரணிலின் தலைமையில் நகர அபிவிருத்தி வீடமைப்பு அமைச்சராக இப்போது பதவி வகிப்ப தால் அர்ஜுனவை அரவணைக்க ரணில் தயாராக இல்லை.

மறுபுறத்தில் கிரிக்கெட் உயர்நிலை அதிகார சபையை பதவி நீக்கும் தீர்மானமொன்று நாடாளுமன்றத்தில் கடந்த வாரம் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டது. எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச இதனை முன்மொழிய, அரச தரப்பில் அமைச்சர் நிமால் சிறிபால டி சில்வா வழிமொழிந்ததால், சபாநாயகரின் முடிவுக்கிணங்க வாக்கெடுப்பின்றி தீர்மானம் நிறைவேறியது.

நாடாளுமன்றத் தீர்மானம் தங்களைக் கட்டுப்படுத்தாது என்று கூறும் அதிகார சபையினர் பதவி விலக முடியாதென அறிவித்துள்ளனர். நாடாளுமன்றத்தில் ஏகமனதாக எடுக்கப்பட்ட தீர்மானம் செல்லுபடியாகாதெனவும், இத்தீர்மானத்துக்கு கிரிக்கெட் சபை இணங்காது எனவும் பிரதி சபாநாயகர் அஜித் ராஜபக்ச அறிவித்து குட்டையை மேலும் குழப்பியுள்ளார்.

நாடாளுமன்றத் தீர்மான முடிவு பொருத்தமற்றது என்று சுட்டியுள்ள இவர், இதனுடன் தொடர்புடைய சட்டங்களின்படி கிரிக்கெட் சபை விவகாரம் கையாளப்பட வேண்டுமென்று கூறியுள்ளார். இந்தப் பிரச்சனைக்குள் முக்கியமானவராகச் சிக்குண்டுள்ளவர் விளையாட்டுத்துறை அமைச்சின் செயலாளர் கணபதி மகேசன். இந்த வருடம் ஜனவரி மாதம் இப்பதவியை ஏற்ற மகேசன் முன்னர் யாழ். மாவட்ட அரசாங்க அதிபராக இருந்தவர். உருவாகியுள்ள புதிய பிரச்சனை சம்பந்தமாக சட்டமா அதிபருடன் கலந்தாலோசிக்க வேண்டுமென்றும் அவரின் கருத்தின் அடிப்படையில் தமது அமைச்சு நடவடிக்கை எடுக்குமென்றும் கூறியுள்ளார்.

இப்போது பல கேள்விகளுக்கு விடைகாணவேண்டிய நிலைமையை கிரிக்கெட் விளையாட்டு உருவாக்கியுள்ளது.

தமக்குத் தெரிவிக்காது இடைக்கால சபையை விளையாட்டுத்துறை அமைச்சர் உருவாக்கினார் என்பது ஜனாதிபதியின் வாதம். கிரிக்கெட் சபையின் உயர் நிர்வாகத்தை பதவி விலகுமாறு நாடாளுமன்றம் ஏகமனதாக தீர்மானம் நிறைவேற்றியுள்ளது என்பது சபாநாயகரின் அறிவிப்பு.

ஆனால், இத்தீர்மானம் செல்லுபடியாகாது என்பது பிரதிச் சபாநாயகரின் கருத்து. அதேசமயம் தீர்மானத்தை ஏற்று பதவி விலக மேற்படி சபை மறுத்துள்ளது. இடைக்கால சபை நியமித்தல் தொடர்பாக விளையாட்டுத்துறை அமைச்சர் வெளியிட்ட வர்த்தமானியை மேன்முறையீட்டு நீதிமன்றம் இரண்டு வார காலத்துக்கு நிறுத்தியது.

மறுபுறத்தில் 18 பேர் கொண்ட இயக்குநர் சபையை தாமதமின்றி நியமிக்க ரணில் தரப்பு நடவடிக்கை எடுத்துள்ளது. இதற்கிடையில் சர்வதச கிரிக்கெட் சபை இலங்கை கிரிக்கெட் சபையை இடைநிறுத்தம் செய்துள்ளதாக அறிவித்துள்ளது.

பார்க்கப் போனால் பொழுது போக்குக்காக ஆரம்பிக்கப்பட்ட ஒரு விளையாட்டு இலங்கையில் அரசியலாக்கப்பட்டு அல்லாடுகிறது. எல்.பி.டபிள்யு, விக்கெட் கவிழ்ப்பு, பந்து பிடித் தல் (காச்), ஓட்டத் தின்போது அவுட் (ரன் அவுட்) என்று பலவகை ஆட்ட இழப்புகள் கிரிக்கெட் டில் உண்டு.

இலங்கையின் தற்போதைய நவீன கிரிக்கெட் விளையாட்டில் ‘அவுட்’ ஆகப்போவது யார்? எவ்வாறு ‘அவுட்’ ஆக்கப்படுவார்?

# உலகெங்கும் பல்வேறு மதத்தினரால் கொண்டாடப்படும் தீபாவளி!

- வி. என். ராகவன்

தீபாவளி, ஓர் அகில இந்துக்களின் கொண்டாட்டம் என்றாலும், பல வெளிநாடுகளிலும்கூட கொண்டாடப்படுகிறது.

நேபாளத்தில் தீபாவளி வெகு சிறப்பான ஆரவாரத்தோடு கொண்டாடப்படுகிறது. அங்கு தீபாவளி கொண்டாட்டம் ஐந்து நாள்கள் நடைபெறுகிறது. ஆனால், கொண்டாடப்படும் விதத்தில் தான் வேறுபாடுகள்.

அந்நாட்டில் முதல் நாள் காகங்களும், இரண்டாம் நாள் நாய்களும் சிறப்பாக பூஜிக்கப்படுகின்றன. எமனுடைய கோபத்திலிருந்து தப்புவதற்காக இப்படிச் செய்கின்றனர். இந்தியாவில் உள்ளதைப் போன்றே மூன்றாம் நாள் முக்கியப் பண்டிகை தினம். அன்றைய நாளில் அதிகாலையில் கோ பூஜையும், மாலையில் சந்தியா காலத்தில் சிறிலட்சுமி பூஜையும் செய்யப்படுகின்றன. இந்தியாவில் போன்றே மத்தாப்புக் கொளுத்திப் பட்டாசுகள் வெடிக்கப்படுகின்றன. நான்காவது நாள் கோவர்த்தன பூஜை நடைபெறுகிறது. அப்போது சிறி கிருஷ்ணனுக்கு 54 வகை தின்பண்டங்கள் கொண்ட 'சப்பன் போக்' என்ற போஜனம் படைக்கப்படுகிறது. விளக்குகள் ஏற்றப்படுகின்றன. ஐந்தாம் நாள் அங்கும் இந்திய வட மாநிலங்களைப் போலவே, பையா தூஜ் என்னும் சகோதர, சகோதரிகள் நலன் நாடும் நிகழ்ச்சி நடத்தப்படுகிறது. சகோதரி வீட்டில் சகோதரர்களுக்கு விருந்தளிக்கப்படுகிறது.

இலங்கையில் தீபாவளியன்று பலவகை உணவுகளோடு விருந்தும், இரவு வீடுகளில் தீபலங்காரமும், வாண வேடிக்கைகளும் நடத்தப்படுகின்றனிறி

மொரீஷியசில் நெய் தீபம் ஏற்றுவர். குறிப்பாக புதிய தம்பதி மற்றும் திருமணத்துக்குக் காத்திருப்போரால் ஏற்றப்படும். லக்ஷ்மி பூஜையோடு சிறிராமன் பூஜையும் சிறப்புப் பெற்றது.

பிஜித்தீவில் ஏறத்தாழ இந்திய பாணிக் கொண்டாட்டங்கள். குறிப்பாக ராம் லீலா நிகழ்ச்சி நடைபெறும்.

சீனாவில் தீபாவளி 'நயி மஹீவா' என அழைக்கப்படுகிறது. இந்தியாவைப் போன்றே வீடுகளில் அலங்காரம் செய்கின்றனர். வாயிலின் இருபுறமும் சீன மொழியில் சுபம், லாபம் என்றெழுதி மனித உருவங்களை வரைந்து வைப்பர். அந்த உருவங்களை மேன்-ஷைன் என அழைக்கின்றனர். அவை வெற்றியின் அடையாளங்கள். அன்று கலாசாரப் போட்டிகள் நடத்தப்படும். தலைநகர் பீஜிங்கில் 100 அடி உயர சக்கரம் அமைத்து தீபங்களை ஏற்றி வைத்து அலங்கரிப்பர்.

தாய்லாந்தில் தீபாவளி "கிரான்சோங்" எனப்படுகிறது. அன்றைய நாளில் வாழைக் கிண்ணங்கள் (அதாவது நமது





தொன்னை போன்றது) செய்து அதனுள் மெழுகுவர்த்தி ஏற்றி வைத்து நதியில் மிதக்க விடுவர்.

ஜப்பானில் தீபாவளி மூன்று நாள் கொண்டாடப்படுகிறது. மூன்றாம் நாளை சுக - சம்ருத்தி என்று அழைக்கின்றனர். அதாவது சுகமும் நிறைவும் தரும் பண்டிகை என்று பொருள். அந்த மூன்று நாளும் வீட்டை சுத்தம் செய்ய துடைப்பம் பயன்படுத்துவதில்லை. மாறாக நீர் தெளித்துக் கையால் துணி கொண்டு துடைப்பர்.

மலேசியாவில் தீபாவளி ஒரு அரசு விழா. அன்று பொது விடுமுறை. தீப அலங்காரம் மற்றும் வாண வேடிக்கை உண்டு. பெரிய அளவில் ராம்லீலா நிகழ்ச்சி நடத்தப்படும். இலங்கை வெற்றிக்குப் பிறகு ராமன் ஊர் திரும்பிய நிகழ்ச்சிதான் அங்கு தீபாவளி. லட்சுமி தேவி வெளிப்பட்ட நிகழ்ச்சியை அவர்கள் தீபாவளியுடன் சம்பந்தப்படுத்துவதில்லை. அந்நாட்டுக்கென "ஹிகாயத் சிறிராம்" என்ற தனி ராமாயணம் உண்டு.

இஸ்லாமிய நாடான பாகிஸ்தானில் கூட சில இடங்களில் தீபாவளியை மக்கள் கொண்டாடுகின்றனர். ஆஸ்திரேலியா, தென் ஆப்பிரிக்க நாடுகளிலும் தீபாவளி கொண்டாடப்படுகிறது. தென் ஆப்பிரிக்காவில் உள்ள ஜோகனஸ் பெர்க்கில் தீபாவளி கொண்டாடத்துக்காகக் கலை நிகழ்ச்சிகள் நடத்தப்படுகின்றன.

தவிர, மியான்மர், லாவோஸ், வியட்நாம், இந்தோனேஷியா, மாலத்தீவு மற்றும் சிங்கப்பூரிலும் தீபாவளிப் பண்டிகை ராம்லீலா நிகழ்ச்சியுடன் சிறப்பாக நடைபெறுவதுடன், அங்கும் தீபோற்ஸவ நிகழ்ச்சியும் நடத்தப் படுகிறது.

தீபாவளி நாளை நேபாளம், இலங்கை, மியான்மர், மொரிசியஸ், மலேசியா, சிங்கப்பூர், கயானா, டிரினிடாட் - டொபாகோ, சுரிநாம், பிஜி ஆகிய நாடுகளில் விடுமுறை தினமாக அறிவிக்கப்படுகிறது. அமெரிக்கா, கனடா, ஆஸ்திரேலியா, இங்கிலாந்து ஆகிய நாடுகளில் வாழும் தெற்காசிய மக்கள் பலரும் தீபாவளியை தங்களுடைய வழக்கங்களுக்கு ஏற்றவாறு கொண்டாடுகின்றனர்.




பண்டைய காலங்களில் இந்தியாவுக்கு பல நாடுகளுடன் வணிகத் தொடர்பு இருந்ததால், தீபாவளி பண்டிகை கொண்டாடும் வழக்கம் ஏற்பட்டிருக்கலாம் என வரலாற்று ஆய்வாளர்கள் கருதுகின்றனர்.

**பல்வேறு மதத்தினரும் கொண் டாடும் தீபாவளி**

தீபாவளி பண்டிகையைக் கொண்டாடுவது இந்துக்கள் மட்டுமல்ல. சமணர்கள், சீக்கியர்களாலும் கூடக் கொண்டாடப்படுகிறது. ஆனால், காரணங்கள் வெவ்வேறு.

தீபாவளி என்பது கார்த்திகை மாதத்தின் முதல் மறைமதி (அமாவாசை) நாள்களில் பதின்மூன்றாம் நாள் தொடங்கி முழுமதி (பௌர்ணமி) இரண்டாம் நாள் வரை ஐந்து நாள்கள் கொண்டாடப்படும் பண்டிகையாக இருந்தது.

தொடக்கத்தில் இந்த பண்டிகை வைணவர்களால் முழுமையாகக் கொண்டாடப்பட்டது. பிற்காலங்களில் தீபாவளியை சைவ சமயத்தினரும் கொண்டாடத் தொடங்கினர். இப்போது, இந்த பண்டிகையை பரவலாக எல்லோரும் கொண்டாடி வருகின்றனர்.

சமணர்களும் இதனை கொண்டாடுகின்றனர். சமணர்களின் கடைசி தீர்த்தங்கரரான மகாவீரர் முக்தி அடைந்த நாளையே தீபாவளியாக சமணர்கள் கொண்டாடி வருகின்றனர். அதாவது, மகாவீரர் என்ற தீப ஒளி மறைந்துவிட்டதால், விளக்கு ஏற்றி வைப்போம் என காசி, கோசல மக்களும், பதினாறு கண அரச மக்களும் தங்களது வீட்டின் முன் ஏற்று வைத்ததாகக் கூறப்படுகிறது. அது, இன்றும் தொடர்கிறது.

சீக்கிய மக்கள் தீபாவளியை முக்கிய நாளாகக் கொண்டாடுகின்றனர். சீக்கியர்களின் ஆறாவது குருவான குரு அர்கோபிந்த் சிங் என்பவர் சிறையில் இருந்து விடுதலையான நாளாக சீக்கிய மக்களிடையே தீபாவளி கருதப்படுகிறது.

பௌத்த மதத்துக்கும் தீபாவளிக்கும் முக்கியமான தொடர்புகள் எதுவும் காணப்படவில்லை என்றாலும், தெற்காசியாவில் பௌத்தர்கள் சிலராலும் தீபாவளி கொண்டாடப்படுகிறது. நேபாளத்தில் வாழும் பழங்குடி நெவார் சமூகத்தினர் தீபாவளியைக் கொண்டாடுகின்றனர். அசோக மாமன்னர் பௌத்த மதத்துக்கு மதம் மாறிய நாளாகக் கொண்டாடும் இந்த பண்டிகையை அசோக விஜயதசமி எனவும் அழைக்கின்றனர்.

வங்கதேசம், இலங்கையில் வாழும் பௌத்தர்கள் சிலரும் இந்த நாளை கொண்டாடி வருகின்றனர். ஆனால் மகாயானம், திபெத் பௌத்த பிரிவுகளிலும், தெற்காசியாவுக்கு வெளியே உள்ள பௌத்தர்களிடமும் தீபாவளி காணப்படவில்லை.

ஆனால், பண்டைய தமிழகத்தில் தீபாவளி கொண்டாடப்பட்டதற்கான சான்றுகள் ஏதும் இல்லை என்பதால், இந்தத் திருவிழா வட இந்தியாவிலிருந்து வந்திருக்கலாம் என்ற கருத்தும் நிலவுகிறது.

பண்டைய காலங்களில் பட்டாசு வெடித்து கொண்டாடியதற்கான ஆதாரங்கள் இல்லை. வெடி வெடிக்கும் பழக்கம், மகிழ்ச்சியைக் குறிப்பதற்காக ஆரம்பித்திருக்கலாம் என நம்பப்படுகிறது.

இந்தப் பட்டாசுகள் தயாரிப்பதற்கான மூலப் பொருளான வெடி மருந்துகள் தமிழ்நாட்டுக்குப் 15 ஆம் நூற்றாண்டுக்குப் பிறகுதான் அறிமுகமானது. தொடக்கத்தில் இலைகளில் வெடி மருந்து வைத்து பட்டாசு தயாரிக்கப்பட்டுள்ளது. காலப்போக்கில் இந்த பட்டாசுகளில் பல மாற்றங்கள் பெற்று இப்போது விதவிதமான வெடிகள், மத்தாப்புகளாக மாறியுள்ளன.

எனவே, இப்போது, துணி, எண்ணெய், மாவு, பட்டாசு போன்ற பெருந்தொழில்களின் பொருளாதாரம் சார்ந்ததாகவும் இந்தத் திருவிழா மாறி விட்டது.

ஆனால், கிராமப்புறங்களில் தைத்திருநாளான பொங்கல் பண்டிகைக்கு இணையாக தீபாவளி கொண்டாடப்படுவதில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

ஈழநாடு



# வடக்கில் வல்லரசுகளின் போட்டியும் தமிழ் மக்களின் நிலைப்பாடும்!

கந்தையா அருந்தவபாலன்





> **இந்திய சீன வல்லரசுகளின் போட்டிக்களத்தில் தமிழ்மக்கள் ஒருபக்கம் நின்று வழமை போல் எதுவும் பெறாமல் போவது நல்லதா அல்லது சிங்களத்தின் விலாங்குமீன் அணுமுறையைக் கையாண்டு ஏதாவது பெறமுடியுமா என்று சிந்திப்பது நல்லதா? இக்கேள்விகளுக்கு தமிழ் மக்களும் அவர்களின் தலைவர்களுமே விடை காணவேண்டும்.**

மலையக தமிழ் மக்களின் இலங்கை வருகையின் இருநூறாவது ஆண்டு நிறைவு விழாவைமையப்படுத்தி வருகை தந்திருந்த இந்திய ஒன்றிய அரசின் நிதியமைச்சர் நிர்மலா சீதாராமனின் தலைவர்களுடனான சந்திப்புக்களுக்கு அப்பால் பௌத்த மகாநாயக்கர்கள் சந்திப்பு, மதத்தலங்களைத் தரிசித்தல், வங்கிக் கிளைகளைத் தொடக்கி வைத்தல் எனப் பல நிகழ்வுகளை நிறைவுசெய்து கொண்டு பலாலி வழியாக தனது நாட்டுக்குத் திரும்பிய செய்திகள் மறையமுன் இலங்கைக்கான சீனத் தூதுவரின் வட பகுதிக்கான பயணமும் அவர் கலந்து கொண்ட நிகழ்வுகளும் ஊடகங்களில் முக்கியம் பெற்றிருந்தன. முன்னரும் இது போன்றதொரு நிகழ்வு இலங்கை வந்திருந்த இந்தியப்பிரதமரின் வடபகுதிக்கான வருகையின் பின் இடம்பெற்றிருந்ததுடன், அவ்வருகையின்போது சீனத்தூதுவர் பருத்தித்துறை முனையிலிருந்தும் மன்னார்- இராமேஸ்வர மணற்றிட்டுகளில் இருந்தும்கூறிய வார்த்தைகள் அதிக கவனத்தைப் பெற்றிருந்தன. சீனத்தூதுவரின் தற்போதைய வருகையின்போது அந்நாட்டின் உதவித்திட்டத்தின் முதற்கட்டமாக தேர்ந்தெடுக்கப்பட்ட சில நூறு குடும்பங்களுக்கு வவுனியா,யாழ்ப்பாணம், மன்னார் போன்ற இடங்களில் உதவிப்பொருட்களையும் வழங்கியுள்ளார். அத்துடன் வடக்கில் அதிக முதலீடுகளை மேற்கொள்வதற்கான சீனாவின் விருப்பத்தை வெளிப்படுத்தியதுடன் அதனை தமிழ் மக்கள் வரவேற்பார்கள் என்ற நம்பிக்கையையும் வெளிப்படுத்தியிருந்தார். ஏற்கனவே மீனவர்களுக்கு எரிபொருள் மற்றும் உணவுப் பொருட்கள் போன்றனவும் சீன அரசினால் வழங்கப்பட்டுள்ளன. இவற்றிற்கு மேலாக வடக்கில் பலசெயற்றிட்டங்களில் சீன நிறுவனங்கள் நேரடியாகவும் மறைமுகமுகமாவும் ஈடுபட்டும் வருகின்றன. சீனாவின் இத்தகைய முன்னெடுப்புகள் வெளித்தோற்றத்தில் வெறும் நிகழ்வுகளாவும் கோரிக்கையாகவும் இந்தியாவுக்கு வெறுப்பேற்றும் காரியமாகவும் காணப்பட்டாலும் அடிப்படையில் அவை அதன் பூகோள அரசியல் மூலோபாயத் திட்டத்துடன் இணைந்த செயற்பாடுகளாகும். குறிப்பாக அத்திட்டத்தின் ஒரு பகுதியான இந்தியாவைச் சூழவுள்ள நாடுகளை தனது செல்வாக்கின் கீழ்கொண்டுவரும் உபாயத்துடன் நெருங்கிய தொடர்பு கொண்டுள்ளது.

இந்தியாவுக்கும் குறிப்பாகத் தமிழ் நாட்டுக்கும் இலங்கைத் தமிழர்களுக்கும் இடையிலான வரலாற்று ரீதியலமைந்த அரசியல், பண்பாட்டு உறவுகள் மற்றும் அமைவிடம் காரணமாக தமிழர்கள், குறிப்பாக வடக்கிலுள்ள தமிழ்மக்கள் இந்தியாவுக்குச் சார்பான நிலைப்பாட்டிலேயே எப்போதும் இருந்து வருகிறார்கள். அத்துடன் பெரும்பாலான தமிழ் அரசியல் தலைவர்களும் எப்போதும் இந்தியாவின் விசுவாசிகளாவே இருந்து வருகின்றனர். மேலும் யாழ்ப்பாணத்தில் இந்தியத் துணைத் தூதரகம் அமைக்கப்பட்ட பின்னர் வடக்கில் படிப்படியாக இந்தியாவின் செல்வாக்கும் தலையீடுகளும் அதிகரித்த வண்ணமே உள்ளது. ஆயினும் விடுதலைப் புலிகளை அழிப்பதில் இலங்கை அரசுக்கு உதவியமை, மனித உரிமைப் பேரவை போன்ற சர்வதேச அரங்கில் இலங்கை அரசுக்கு முட்டுக் கொடுத்து வருவது, தமிழ் மக்களுக்கான நியாயமான அரசியல் தீர்வு விடயத்தில் இலங்கை அரசுக்குப் போதிய அழுத்தம் கொடுக்காமை போன்ற பல காரணங்களால் தமிழ் மக்களிடையே இந்தியா தொடர்பான அதிருப்தி நிலவுவதுடன் இந்தியா தங்களைப் பகடைக்காயாக வைத்து தனது பொருளாதார, அரசியல் நலன்களை இலங்கையில் பரவலாக்கி வருகிறது என்ற எண்ணமும் தமிழ் மக்களிடையே நாளுக்கு நாள் அதிகரித்து வருவதையும் அவதானிக்க முடிகிறது. இவ்வாறான ஒரு நிலையிலேயே வடக்கில் சீனா தனது காலை உறுதியாகப் பதிக்கும் முயற்சிகளில் இறங்கியுள்ளதைக் காண முடிகிறது. இதனால் வடக்கில் இந்தியாவுக்கும் சீனாவுக்கும் இடையில் போட்டியான சூழ்நிலை ஒன்று விருத்தியடைவதற்கான அறிகுறிகள் தென்படுகின்றன. மோசமான அரசியல், பொருளாதார நெருக்கடிகளுக்கு முகம் கொடுத்துவரும் இலங்கை, வெளிநாடுகளிடம் கையேந்தி நிற்பதால் அந்நாடுகளின் தலையீடுகளை நிராகரிக்க முடியாத ஒரு கையறு நிலைக்கு இன்று தள்ளப்பட்டுள்ளது. இதனை விளங்கிக் கொள்வதற்கு ஆழமாக ஆராய வேண்டிய தேவை எதுவுமில்லை. சீன ஆய்வுக் கப்பல்களின் இலங்கைத் துறைமுக வருகை தொடர்பான இழுபறி ஒன்றே போதும். இந்நிலையில் வடக்கில் இந்தியாவோ அல்லது சீனாவோ தாம் நினைத்தவாறு எதிர்காலத்தில் செயற்படுவதைத் தடுப்பதற்கான வல்லமை இலங்கை அரசிடம் மிகக் குறைவாகவே இருக்கும். அதிலும் தொழில்சார் முதலீட்டுத் திட்டங்கள் மற்றும் சமூக நலன் புரி உதவிகளை வெறுமனே இந்தியா விரும்பவில்லை என்ற ஒரு காரணத்தை மட்டும் வைத்து நிராகரிக்க முடியாதிருக்கும். ஏலவே தீவுப்பகுதியில் சீனாவால் முன்னெடுக்கப்பட்ட மின்சார உற்பத்திச் செயற்றிட்டம் இந்தியாவின் ஆட்சேபனையை அடுத்துக் கைவிட்டது போல வருங்காலத்திலும் சீனா நடந்து கொள்ளுமா என்பது கேள்விக்குறியாகும். இந்நிலையில் இந்தியா, சீனா தொடர்பாக எதிர்காலத்தில் தமிழ்மக்களின் அணுகுமுறை எவ்வாறு அமைய வேண்டும்? இதுவரை இருந்து வருவதுபோல இந்தியாவுக்கு ஆதரவும் சீனாவுக்கு எதிர்ப்பும் என்ற நிலைப்பாடு தொடர வேண்டுமா? அல்லதுஅந்நிலைப்பாட்டிலிருந்து மாறவேண்டுமா? மாறுவதாயின் எவ்வாறான அணுகுமுறைக்கு மாறுவது? இவ்விரு நாடுகள் தொடர்பாக இலங்கை பின்பற்றிவரும் அணுகுமுறையை இவ்விடயத்தில் தமிழ்மக்களும் பின்பற்றலாமா? போன்ற கேள்விகளுக்கு விடைகாணவேண்டிய கட்டத்தில் தமிழ் மக்கள் இருப்பது போலத் தெரிகிறது.

இது தொடர்பாகத் தமிழ்த்தலைவர்களின் நிலைப்பாடு தெளிவானது. அவர்கள் வழமை போல தமிழ்மக்களுக்கான அரசியல் தீர்வை இந்தியா பெற்றுத் தரும் என்று நம்புவதாலும், தமது இந்திய விசுவாசத்தைக் காட்டுவதற்காகவும் சீனாவின் செயற்பாடுகளை எதிர்த்து அறிக்கைகளை வெளியிடுவர். அண்மையில் இலங்கைத் தமிழரசுக் கட்சியின் பேச்சாளர் சுமந்திரன் தாம் இந்தியாவைக் கைவிட்டு சீனாவை ஒருபோதும் ஆதரிக்கப் போவதில்லை என்பதை உறுதியாக வெளிப்படுத்தியிருந்தார். அதேபோல நேற்று முன்தினம் தான் நடத்திய ஊடகச் சந்திப்பொன்றில் ரெலோ கட்சியின் தலைவர்செல்வம் அடைக்கலநாதன் சீனா அபிவிருத்தி என்ற போர்வையில் மேற்கொள்ளும் ஆக்கிரமைப்பை தமிழ்மக்கள் எதிர்க்க வேண்டும் என்று கேட்டிருந்தார். அதே வேளை இவர்கள் சீனாவுடன் இணைந்து வன்னியில் பாரிய கரும்புத் தோட்டமொன்றை உருவாக்க முனைந்ததையும் அதனை ரணில் விக்ரமசிங்க மடுவில் வைத்து உறுதிப்படுத்தியதையும் தமிழ் மக்கள் நன்கறிவர். முன்னாள் போராளிக் குழுக்கள் அனைத்தும் இவ்வாறான ஒரு நிலைப்பாட்டையே தொடர்ந்து வெளிப்படுத்துவர் என்பதில் மாற்றுக்கருத்து இருக்காது. ஆனால் அதே நிலைப்பாட்டில் தமிழ் மக்கள் தொடர்ந்து இருப்பார்களா அல்லது அதே நிலைப்பாட்டில் அவர்களை வைத்திருக்க அரசியல் தலைவர்களால் முடியுமா என்பது கேள்விக்குரியது. ஏனெனில் தமிழ்மக்கள் முன்னரைப் போல இந்தியாவை முழுமையாக நம்பும் நிலைப்பாட்டில் இப்போது இல்லை. இந்தியா தம்மை ஏமாற்றி வருகிறது என்ற உணர்வு அவர்களிடம் மேலோங்கி வருவதை அவதானிக்க முடியும். இதன் வெளிப்பாடாகவே யாழ்ப்பாணத்தில் இருந்து வெளிவரும் நாளிதழ் ஒன்றின் ஆசிரியர் தனது தலைப்பில் தமிழ்மக்கள் தொடர்ந்து இந்தியாவை நம்புவதில் பயனில்லை என்பதைக் குறிப்பிட்டு மாற்று யோசனை அவசியமா என்றும் கேள்வி எழுப்பியிருந்தார். இதற்கு மேலாக இன்று தமிழ் மக்களைப் பொறுத்தமட்டில் அவர்களின் அதிகரித்த பொருளாதாரப் பிரச்சினைகள் அரசியல் பிரச்சினைகளைப் பின்தள்ளி வருவதையும் காணமுடிகிறது. பசி வந்தால் பத்தும் பறந்திடும் என்பது பட்டறிவால் வந்த கருத்துத்தானே.

இவ்விரு நாடுகள் தொடர்பாக இலங்கை அரசின் அணுகுமுறை என்ன? அந்த அணுகுமுறை எவ்வாறு இலங்கையின் தனித்துவத்தை இதுவரை காப்பாற்றி வந்துள்ளது? இலங்கையை முழுமையாக தனது ஆதிக்கத்தின் வைத்திருப்பதற்கான சாதக நிலைமைகள் இந்தியாவுக்கு இருந்து வந்துள்ள போதும் சிங்களத் தலைவர்களின் புத்திசாதுரியமான விலாங்கு மீன் அணுகுமுறையினால் இலங்கை தனது தனித்துவத்தை இதுவரை காப்பாற்றி வந்துள்ளது. அதாவது இந்தியாவுக்கும் மேற்குலகுக்கும் தலையையும் சீனாவுக்கு வாலையும் காட்டுவதன் மூலம் தான் இருதரப்புக்கும் நண்பன் என்ற தோற்றத்தைக் காட்டி எவர் பிடிக்குள்ளும் முழுமையாக அமிழ்ந்து விடாமல் இருந்து வருகிறது. இயல்பாகவே சிங்களத் தலைவர்களும் மக்களும் இந்தியா மீதான ஐயத்தையும் வெறுப்பையும் அடிமனதில் கொண்டிருந்தாலும் அதனை வெளிப்படுத்தாது நடிக்கின்றனர் என்பதுதான் உண்மை. மறுபுறத்தில் சீனா மீது உள்ளார்ந்த ஆதரவு எப்போதும் சிங்களத்தரப்பிடம் இருந்தே வருகிறது. இவ்வணுகுமுறை மூலம் இருதரப்பு உதவிகளையும் அதனால் தாராளமாகப் பெறமுடிவதுடன் அதன் தனித்துவத்தையும் பேண முடிகிறது. இன்னொரு வகையில் 'எனக்கு நீ உதவாவிட்டால் நான் அவனிடம்போவது தவிர்க்க முடியாதது' என்ற உத்தியைப் பிரயோகப்பதன் மூலம் இருதரப்பையும் சமதூரத்தில் வைத்திருக்க இலங்கை முனைகிறது. இலங்கையின் இன்றைய இக்கட்டான பொருளாதார நிலையில் இந்தியாவும் மேற்குலகும் அனுதாபம் காட்டுவதும் அள்ளி வழங்குவதும் உண்மையில் இலங்கை அரசின் மீதும் அதன் மக்கள் மீதும் கொண்ட கரிசனையாலன்றி இலங்கை முழுமையாகச் சீனாவின் பக்கம் சென்று விடாமல் தடுப்பதற்காகவே என்பது வெளிப்படையானது. இதுவே இந்நாடுகளை தமிழ்மக்களின் நியாயமான பிரச்சினைகள், கோரிக்கைகள் தொடர்பாக ஆழமாக இறங்காது வெறும் அறிக்கைகளுடன் கடந்து செல்லவும் வைக்கிறது.

ஆனால் இலங்கைத் தமிழர்கள் சிங்களத்தரப்புப் போல விலாங்கு மீனாக இல்லை. அவர்கள் தலை தொடங்கி வால் வரையும் இந்தியாவிற்கு மட்டுமே நண்பர்கள் என்ற ஒரே வடிவத்தையே தொடர்ந்து காட்டி வருகிறார்கள். இருந்தும் உண்மையான நண்பனை விட விலாங்கு மீனாக நடிப்பவன் பக்கமே இந்தியா தொடரந்தும் இருந்து வருகிறது என்பது தமிழ்மக்களைப் பொறுத்து கசப்பான பட்டறிவு உண்மையாகும். இவ்வணுகுமுறை இதுவரை தமிழ்மக்களின் நியாயமான கோரிக்கைகள் எதனையும் பெறுவதற்கு உதவவில்லை. எனவே இலங்கை அரசைப் போல தமிழ்மக்களும் விலாங்கு மீன் உத்தியை பின்பற்றுவதன் மூலம் தமது இலக்கை அடைவதற்கான வாய்ப்புகள் உண்டா? குறிப்பாக பொருளாதார நலன்களைப் பெறுவதற்கேனும் தமிழ்மக்கள் சீனாவை ஆதரிக்கலாமா? உலகில் இன்று மிக வேகமாக வளர்ச்சியடைந்து வரும் ஒரே நாடு சீனா. சீனாவின் விரிவாக்கத்தை எதிர்க்கும்

(14ஆம் பக்கம் பார்க்க)

# கனடா 'கிராமத்து வதனம்' முன்னெடுத்த நவராத்திரி விழா

**குரு அரவிந்தன்**

கடந்த ஞாயிற்றுக்கிழமை 05-11-2023 கனடா எத்தோபிக்கோ நகரத்தில் இயங்கும் 'கிராமத்து வதனம் ஒன்ராறியோ தமிழ் பெண்கள் பண்பாட்டு மையம்' என்ற தமிழ் குடும்ப அமைப்பினரால் அல்பியன் வீதியில் உள்ள திஸ்ரில் நகர மண்டபத்தில் நவராத்திரி விழா மிகவும் சிறப்பாகக் கொண்டாடப்பட





டது. இலங்கையில் இருந்து புலம்பெயர்ந்து வந்து இப்பகுதியில் வசிக்கும் தமிழ் பெற்றோர்களும், கனடாவில் பிறந்து வளர்ந்த அவர்களின் பிள்ளைகளும், பேரப்பிள்ளைகளும் ஒன்று சேர்ந்து இந்த விழாவில் மிகவும் ஆர்வத்தோடு பங்கு பற்றியிருந்தார்கள்.

மங்கள விளக்கேற்றலுடன் சுமார் 4:00 மணியளவில் விழா நிகழ்ச்சிகள் ஆரம்பமாகின. அதைத் தொடர்ந்து அர்ச்சயா மோகன்குமார், அப்சரா சயந்தன் ஆகியோரால் சகலகலாவல்லி மாலை பாடப்பெற்று, நவராத்திரி பூசை சிறப்பாக இடம் பெற்றது. தொடர்ந்து அர்ச்சயா மோகன்குமார், அக்சிதா பிரபாகரன், அதிஸா பிரபாகரன், அஸ்மிதா மாலரவன் ஆகியோரால் கனடா தேசியப்பண், தமிழ்தாய் வாழ்த்து இசைக்கப்பெற்றது.

அகவணக்கத்தை அடுத்து வரவேற்புரை சிந்துஜா சங்கர் அவர்களால் நிகழ்த்தப்பெற்றது. வரவேற்பு நடனத்தைத் தொடர்ந்து தலைவரும் ஒருங்கமைப்பாளருமான திருமதி கமலவதனா சுந்தரலிங்கம் அவர்களின் உரை இடம் பெற்றது. பிரதம விருந்தினராகக் கலந்து கொண்ட ரொறன்ரோ கல்விச்சபை ஆசிரியரும் பிரபல எழுத்தாளருமான குரு அரவிந்தன் 'பிள்ளைகளின் வளர்ப்பில் பெற்றோரின் முக்கிய கடமைகள்' என்ற தலைப்பில் சிறப்புரையாற்றினார்.

எங்களுடைய தமிழ் மொழியை மட்டுமல்ல, எமது பாரம்பரியம், பண்பாடு கலாச்சாரம் போன்றவற்றையும் இளைய தலைமுறையினர் புரிந்து கொள்ளத் தக்க வகையில் நிகழ்ச்சிகள் இடம் பெற்றிருந்தன. உதயன் பத்திரிகை பிரதம ஆசிரியர் ஆர். என், லோகேந்திரலிங்கம் அவர்களின் சிறப்புரையைத் தொடர்ந்து தமிழில் மெல்லிசைப் பாடல்கள், கதம்ப நிகழ்ச்சி, காவடியாட்டம், பட்டிமன்றம், வயலின் இசை, கிற்றார் இசை, சிறுமிகள் நடனம், சிறுவர்களுக்கான பேச்சு, மாணவர் உரை, தேவாரம், சுலோகம், சக்தி நடனம் போன்ற பல பயனுள்ள நிகழ்வுகள் சிறுவர், சிறுமிகளின் பங்களிப்போடு இடம் பெற்றன. நிகழ்வுகளில் பங்கு பற்றிய மாணவர்கள் சான்றிதழ்கள் வழங்கி மதிப்பளிக் கப்பட்டனர்.

றிச்மன் பிள்ளையார் கோயில் முகாமையாளர் திரு நவரட்ணம் கருணரட்ணராசா, திருமதி சுமதி சிவா, திருமதி வேல்விழி அருள்மாறன், திருமதி ராஜி உதய சந்திரதாஸ், திருமதி சுகந்தினி கரன், திருமதி யோக நாயகி நித்தியானந்தமூர்த்தி, நவநீதா முருகண்டி ஆகி யோரும் இந்த நிகழ்வில் கலந்து சிறப்பித்து உரையாற்றினார்கள்.







திருமதி சன்ரா பாலேஸ்வரன், திருமதி விமலாதேவி புஸ்பநாதன் ஆகியோர் நிகழ்ச்சியின் அறிவிப்பாளர்களா கப் பணியாற்றினார்கள். வருகை தந்த எல்லோருக்கும் தேனீர், பிரசாதம், சிற்றுண்டி வழங்கப் பெற்றது. இறுதியாக திருமதி கௌசல்யா பார்த்தீபன் அவர்களின் நன்றியுரையுடன் விழா சிறப்பாக முடிவுற்றது.

எமதுமொழி, பண்பாடு, கலாச்சாரம், பாரம்பரியம் போன்றவற்றை அடுத்த தலைமுறையினருக்கு எடுத்துச் செல்லும் இது போன்ற நிகழ்வுகள் தொடர்ந்தும் கனடிய மண்ணில் இடம் பெறவேண்டும் என நிகழ்ச்சி அமைப்பாளர்களைப் பாராட்டி வாழ்த்துகின்றோம்.

# வியுக்தியார் பதில்கள்



**உங்கள் கேள்விகளை அனுப்பவேண்டிய முகவரி**

**வியுக்தியார் பதில்கள்**
**ஈழநாடு, 707 ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.**
viyukthiyar@gmail.com

**செல்வா கேசவன், சங்கிலியன் வீதி, நல்லூர்.**

**கேள்வி:** யாழ்.பல்கலைக்கழக மாணவர்களின் போராட்டத்தை அடுத்து யாழ்.பல்கலை ஆசிரியர் சங்கம் சட்டத்தரணி சுவஸ்திகாவிற்கு சார்பாக வெளியிட்ட அறிக்கையை திரும்ப பெறுவதாக அறிவித்துள்ளதே. அப்படி திரும்பப்பெறுவது என்பது அவர்கள் தெரிவித்த கருத்துக்களையே திரும்பப்பெறுவ தென்பதா? அல்லது கருத்துக்கள் அப்படியேதான் இருக்கின்றன ஆனால், அறிக்கையை திரும்பப் பெறுவதா?

**வியுக்தியார்:** இது என்ன குழப்பமான கேள்வி. ஒரு கருத்தைச் சொன்னால் அதுதான் அவர்களின் கருத்து. ஆனால் அறிக்கையை திரும்பப்பெறுவது என்பது, மாணவர்களின் நெருக்கடியால் திரும்பப்பெறுவது. அதாவது அப்படியொரு நெருக்கடி மாணவர்கள் மத்தியிலிருந்து வந்திருக்காவிட்டால் அதுதான் எங்கள் கருத்து என்கிறார்கள். என்ன குழப்பமாக இருக்கின்றதா? எனக்கும் தான். யாழ். பல்கலைக்கழகத்தில் ஆசிரியர்கள் மாணவர்களுக்காக இருக்கிறார்களா? மாணவர்கள் ஆசிரியர்களுக்காக இருக்கிறார்களா என்பதுதான் தெரியவில்லை.

**க. தில்லைநாதன், மட்டுவில், சாவகச்சேரி**

**கேள்வி:** இலங்கை கிரிக்கெட் சபையின் குழப்பத்தின் பின்னணியில் இந்தியாவின் ஆதிக்கம் உள்ளது என தேசிய சுதந்திர முன்னணியின் தலைவரும் சுயாதீன எதிரணியின் உறுப்பினருமான விமல் வீரவன்ஸ தெரிவித்திருக்கிறாரே அது உண்மையாக இருக்கும் என்று நினைக்கின்றீர்களா?

**வியுக்தியார்:** அவர் இரணைமடுவில் அடைமழை பெய்தாலும் அதற்குப் பின்னாலும் இந்தியாதான் இருக்கின்றது என்றுதான் சொல்லுவார். அவர் சொல்வது தான் உண்மை என்றாலும் "உங்கள் நாட்டின் கிரிக்கெட் துறைக்குள்ளும் நாங்கள் புகுந்து விளையாடுவோம்" என்று இந்தியா சொல்வதாக எடுத்துக்கொள்வோம். அதுகூட இலங்கையின் பலவீனம் என்பதைத்தான் அவர் ஒப்புக்கொள்கிறார்.

**எம். கௌதம், அமிர்தகழி, மட்டக்களப்பு**

**கேள்வி:** சட்டத்தின் அடிப்படையில் நாட்டில் தற்போது பொலிஸ்மா அதிபர் கிடையாது. ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க பொலிஸ் மா அதிபர் நியமனம் விவகாரத்தில் அரசியலமைப்பை மீறியுள்ளார். ஆகவே அவருக்கு எதிராக குற்றப்பிரேரணை கொண்டு வர முடியும் என பாராளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் தெரிவித்திருக்கிறாரே?.

**வியுக்தியார்:** அவர் ஒரு சட்டத்தரணி. அவர் எப்போதும் எந்த எந்த விடயத்திற்கு வழக்கு தாக்கல்செய்யலாம் என்று சொல்லிக்கொண்டுதானே இருப்பார். அப்போதுதான் அவருக்கு (சட்டத்தரணிகளுக்கு) வழக்குகள் கிடைக்கும். அதற்காக அவர் இப்போது சொல்வது வழக்கு சம்பந்தப்பட்டதல்ல. பாராளுமன்றில் குற்றப்பிரேரணை கொண்டுவருவது சம்பந்தமானது. கொண்டுவரலாம் என்று ஏன் சொல்கிறார் என்பது தெரியவில்லை. அவரே அதற்கான முயற்சியை எடுக்கலாம் தானே. தனி ஆளாக நின்று நல்லாட்சி காலத்தில் புதிய அரசியலமைப்பையே கொண்டுவரலாம் என்று நம்பியவர் அவர்.

**ரி. ஜீவன்குமார் வெள்ளவத்தை, கொழும்பு.**

**கேள்வி:** சமஷ்டி முறையிலான அதிகாரப் பகிர்வு கிடைக்கப்பெறும் பட்சத்திலேயே வடக்கு, கிழக்கு தமிழ் மக்கள் நிம்மதியாகவும், சுயமாகவும் தமக்கான அடையாளத்துடன் வாழ முடியும் என வடக்கு, கிழக்கு ஒருங்கிணைப்புக் குழு வெளியிட்டுள்ள ஊடக அறிக்கையில் தெரிவித்துள்ளதே.?

**வியுக்தியார்:** இப்படியொரு குழு கடந்த சில நாட்களாக வடக்கு கிழக்கு எங்கும் ஒருசிலருடன் போராட்டங்களை நடத்திவந்ததை கண்டோம். இப்போது சமஷ்டி முறையிலான தீர்வுதான் தேவை என்றிருக்கிறார்கள். அதுதான் எனக்குப் புரியவில்லை, ஏன் தனி நாடு கிடைத்தால்தான் நமக்கான அடையாளத்துடன் வாழலாம் என்றே அவர்கள் சொல்லியிருக்கலாமே. சமஷ்டிதான் தீர்வு என்று எழுபத்திஐந்து வருடங்களாக தமிழரசுக்கட்சியும் சொல்லிக்கொண்டுதானே இருக்கின்றது. இதில் என்ன புதுச இருக்கிறது என்பதுதான் தெரியவில்லை. அண்மையில் சங்கிலியன் பூங்காவில் நடைபெற்ற அவர்களது வைபவம் ஒன்றைப் பார்த்த போது புலம்பெயர் நாடுகளிலிருந்து அவர்களுக்கு உதவிகள் கிடைப்பது அவர்களின் தலைப்பட்டிகளிலிருந்தே தெரிந்தது.

**இரா. இராஜேஸ்கரன், ஸ்ரேசன் வீதி, வவுனியா.**

**கேள்வி:** அடுத்த ஜனாதிபதி தேர்தலில் வடக்கு மக்களின் ஆதரவைபெறக்கூடிய ஆளுமை எதிர்க்கட்சி தலைவர் சஜித் பிரேமதாஸவுக்கு உள்ளது என்று ஐக்கிய மக்கள் சக்தியின் நிறைவேற்று பணிப்பாளரான முன்னாள் இராஜாங்க அமைச்சர் அஜித் பி. பெரேரா தெரிவித்துள்ளாரே. அப்படி அவருக்குத்தான் ஆதரவு வழங்குவார்கள் என்பது இவருக்கு எப்படித் தெரியும்?

வியுக்தியார்: சஜித் பிரேமதாசாவும் அப்படித்தான் நம்பிக்கொண்டிருக்கிறார் என்பது அஜித் பெரேராவின் மூலம் தெரியவந்திருக்கின்றது. அதாவது சஜித்துக்கும் அவருடன் இருக்கும் நம்மவர்கள் தான் அப்படியொரு நம்பிக்கையைச் சொல்லியிருப்பார்கள். அவர்களுக்கு தமிழ் பொதுவேட்பாளர் ஒருவர் போட்டியிடவிருக்கின்ற சங்கதி தெரியாது என்று நினைக்கின்றேன். தேர்தல் நெருங்கும்போது எல்லோரும் ஓடித்திரியப்போகின்றார்கள் பாருங்கள்.

# புட்டினுக்கு பின்னர் ரஷ்யாவின் தலைமை? 2036வரை அதிபராக புட்டின் தொடர்வாரா?

ரஷ்யாவுக்குள் நிலவும் தற்போதைய அரசியல் பிரச்சினைகளை மையப்படுத்தி, வலிமைமிக்க விளாடிமிர் புட்டினின் ஆட்சி ஆதிக்கம் விரைவில் முடிவுக்கு கொண்டு வர மேற்குலகும் - அமெரிக்காவும் திடமாக முயல்கின்றனர். அதிபர் புட்டினின் நீண்ட ஆட்சி நிரந்தரமாக இருக்க முடியாது என்பது உண்மையே.

அண்மையில் ரஷ்யாவின் வலிமைமிக்க விளாடிமிர் புட்டின் அதிகாரத்தை உலுக்கிய வாக்னர் படைகளின் தலைவர் எவ்கெனி ப்ரிகோஜின் கிளர்ச்சியினால் புட்டின் சந்திக்கவிருந்த சவால்கள் சில நாட்களில் பிசுபிசுத்துப் போனது.

கடந்த ஆண்டு பிப்ரவரி மாதம் புட்டின் உக்ரேன் மீது முழு அளவிலான போரைத் தொடங்கிய நிலையில், இப்போது அவருக்கான முடிவு காலம் தொடங்கிவிட்டது என அப்போதே மேற்குலக ஊடகங்கள் ஊகம் தெரிவித்தன. அத்துடன் உக்ரேன் மீதான ரஷ்யாவின்



போரால் அவரது நாட்கள் எண்ணப்படுவதாக உக்ரேன் அதிபர் ஜெலன்ஸ்கியும் நம்புகின்றார் என மேற்குலக ஊடகங்கள் தெரிவிக்கின்றன.

### புட்டின் பதவி 2024இல் நிறைவு?

71 வயதாகும் ரஷ்யாவின் தலைவர் விளாடிமிர் புட்டின் முதன்முதலில் பொறிஸ் யெல்ட்சினுக்கு பின்னர் 2000ஆம் ஆண்டு அதிபர் பதவியை ஏற்றார். அவரது பதவிகாலம் வரும் 2024இல் நிறைவடைகிறது.

ரஷ்யா நாட்டு சட்டப்படி ஒருவர் தொடர்ந்து இரண்டு முறைக்கு மேல் அதிபர் பதவியில் இருக்க முடியாது.

ரஷ்யாவில் இரண்டு முறைக்கு மேல் தொடர்ச்சியாக அதிபராக இருக்க முடியாது என்பதால் 2008இல் தனது நம்பிக்கைக்குரிய டிமிட்ரி மெட்வெடேவ் என்பவரை அதிபராக்கினார். அதன் பின்னர் 2012ஆம் ஆண்டு மீண்டும் புட்டின் ரஷ்ய அதிபராகப் பதவியேற்றார்.

இதன் பின் அதிபரின் பதவிக்காலம் நான்கு ஆண்டுகளில் இருந்து ஆறு ஆண்டுகளாக நீட்டிக்கப்பட்டது.

ஆறு ஆண்டுகள் அதிபர் பதவியில் இருந்த புட்டின், மீண்டும் 2018இல் அதிபராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார்.

ஆயினும் அந்த தேர்தலில் முறைகேடுகள் நடந்ததாகவும் எதிர்க்கட்சியினரின் வேட்புமனுக்கள் நிராகரிக்கப்பட்டதாகவும் புகார் எழுந்தன. இருப்பினும், அந்தத் தேர்தலில் புட்டின் வென்றதாக அறிவிக்கப்பட்டது. இதன் பின் மீண்டும் அரசியல் சட்டத்தை மாற்றி, ஒருவர் நான்கு முறை வரை தொடர்ந்து அதிபர் பதவியில் இருக்கும் சட்டத்தை புதிதாக புட்டின் முன்மொழிந்துள்ளார்.

### 2036 வரை அதிபர் பதவியில் ?

அதாவது, எதிர் வரும் 2036ஆம் ஆண்டு வரை ரஷ்யா அதிபர் பதவியில் தொடரும் வகையில் புதிய உத்தரவை விளாடிமிர் புட்டின் பிறப்பித்துள்ளதாக சில ஊடகங்கள் தெரிவித்துள்ளன.

இதன் மூலம் அடுத்த இரண்டு தேர்தல்களில் அவரால் போட்டியிட முடியும்.

ரஷ்ய மக்களிடையே நடத்தப்பட்ட வாக்கெடுப்பிலும் பெரும்பாலான மக்கள் இதற்கு ஆதரவாகவே வாக்களித்தனர். இதையடுத்து இந்தச் சட்டத்திற்கு புட்டின் ஒப்புதல் வழங்கினார்.

### புட்டினுக்கு பின்னர் ரஷ்யாவின் தலைமை?

புதிய சட்டத்தின் மூலம் அடுத்த இரண்டு தேர்தல்களில் புதினால் தேர்தலில் போட்டியிட முடியும். அதாவது 2036ஆம் ஆண்டு வரை அதிபராக அவரால் இருக்க முடியும். உயிருடன் இருக்கும் வரை அதிபர் பதவியில் தொடரவே புட்டின் இச்சட்டத்தைக் கொண்டு வந்துள்ளதாக எதிர்க்கட்சிகள் விமர்சித்துள்ளன.

இந்நிலையில் 2036ஆம் ஆண்டு வரை தொடர்ந்து அதிபர் பதவியில் தொடர தேவையான சட்டத்திற்கு புட்டின் தற்போது ஒப்புதல் அளித்துள்ளார்.

தற்போது ரஷ்யாவின் வலிமைமிக்க தலைவரான விளாடிமிர் புட்டின் ஆட்சி அதிகாரத்தின் பின்னர், ரஷ்ய கூட்டமைப்பின் அடுத்த தலைவராக, புட்டினுக்கு பதிலாக யார் முன்னணியில் உள்ள தலைவர்களின் விபரங்களை உலகம் உற்று நோக்கிப் பார்க்கின்றது.

### முன்னாள் அதிபர் டிமிட்ரி மெடிதேவ்

லெனின்கிராட்டை பூர்வீகமாக கொண்ட முன்னாள் சட்டப் பேராசிரியரும், புட்டின் நீண்டகால கூட்டாளியாக டிமிட்ரி மெடிதேவ் (Dmitry Medyedev) 2008 முதல் 2012 வரை ரஷ்யாவின் அதிபராக நான்கு ஆண்டுகள் பணியாற்றியவர். பின்னர் மெடிதேவ் 2012 முதல் 2020 வரை பிரதம மந்திரி பதவி வகித்தார்.

இப்போது ரஷ்யாவின் பாதுகாப்பு கவுன்சிலின் துணைத் தலைவரான மெடிதேவ், உக்ரைனிய போரைப் பற்றி ஒரு போர்க்குணமிக்க தொனியில் தாக்கியுள்ளார். இந்த உக்ரைனிய மோதல் மிக நீண்ட காலத்திற்கு நீடிக்கும். பல தசாப்தங்களாக, அநேகமாக நீடிக்கும் எனக் கூறியுள்ளார்.

நீண்ட காலமாக புட்டினுக்கு அடிபணிந்து வந்த ஒருவரான மெடிதேவ், அடுத்த ஆட்சியைப் பிடிக்க முடியுமா என்பது பற்றிய பல கேள்விகளும் ஐயங்களும் உள்ளன.

### தாராளவாத சீர்திருத்தவாதி செர்ஜி கிரியென்கோ:

2022 இல் உக்ரைனிலிருந்து ரஷ்யா கைப்பற்றிய பகுதிகளில் பொது வாக்கெடுப்பை நிர்வகிக்கும் பணி 60 வயதான செர்ஜி கிரியென்கோ வழங்கப்பட்டது.

1990களில், செர்ஜி கிரியென்கோ என்று அறியப்பட்ட ஒரு தாராளவாத சீர்திருத்தவாதி, அப்போதைய ஜனாதிபதி போரிஸ் யெல்ட்சின் அவரை 1998 இல் நாட்டின் இளைய பிரதமராக ஆக்கினார்.

கிரியென்கோவின் பதவிக்காலம் சோவியத்துக்கு பிந்தைய நாட்டின் மிக மோசமான நிதி நெருக்கடியுடன் அவர் நான்கு மாதங்களுக்குப் பிறகு பதவி விலக வேண்டிய கட்டாயமும் ஏற்பட்டது. செர்ஜி கிரியென்கோ பதவியின் போது, KGB இன் வாரிசு நிறுவனமான FSB இன் தலைவராக புட்டினை நியமிப்பதற்கான



முடிவையும் அவரே எடுத்தார்.

### சிறப்பு படைத் தளபதி அலெக்ஸி டியூமின்

ரஷ்ய அரசிற்குள் பல்வேறு பாத்திரங்களை வகித்த 50 வயதான அலெக்ஸி டியூமின் (Alexei Dyumin) இராணுவ உளவுத்துறை பணியகமான புசுரு இன் துணை இயக்குநரும் இப்போது துலா பிராந்திய ஆளுநரும் ஆவார்.

2014 இல் கிவ்வில் ஜனநாயக சார்பு எழுச்சிக்குப் பிறகு ரஷ்ய சார்பு உக்ரேனிய ஜனாதிபதி விக்டர் யானுகோவிச்சை நாட்டை விட்டு வெளியேற்றுவதில் டியூமின் முக்கிய பங்கு வகித்தார். பின்னர் உக்ரைனில் இருந்து கிரிமியாவைக் கைப்பற்றுவதற்கான வெற்றிகரமான நடவடிக்கையில் சிறப்புப் படைத் தளபதியாக பணியாற்றினார்.

பாதுகாப்பு மந்திரி செர்ஜி ஷோய்குவின் துணையாளராக இருந்த டியூமின், அந்த இடத்தைப் பிடிக்க முயன்றார் என்று சமீபத்திய நாட்களில் வதந்திகளுக்கும் உட்பட்டார்.

– Mikhail Mishustin



– Dmitry Medvedev



– Nikolai Patrushev



– Alexei Dyumin



– Dmitry Patrushev



ஐங்கரன் விக்கினேஸ்வரா

### உக்ரைன் போரின் மூலோபாயவாதி நிகோலாய் பெட்ருஷேவ்

ரஷ்யாவின் பாதுகாப்பு கவுன்சிலின் செயலாளர் நிகோலாய் பெட்ருஷேவ் (Nikolai Petrushev) ரஷ்ய கூட்டமைப்பை பலவீனப்படுத்த அல்லது உடைக்க மேற்கத்திய சதி உள்ளது என்ற கருத்தை என்றும் குற்றச்சாட்டாக முன்வைப்பவர்.

புட்டினுடன் கேஜிபியில் ஒன்றாகப் பணியாற்றியதிலிருந்து அவரை அறிந்திருக்கிறார்.

மேலும் 2014, 2022 உக்ரைன் படையெடுப்புகளில் முக்கிய மூலோபாயவாதியாக இருந்தார்.

அவரது கருத்துக்கள் புட்டின் எடுக்கும் முடிவுகளின் அடித்தளமாக அமைகின்றன. புட்டினின் நம்பிக்கைக்

– Mikhail Khodorkovsky



– Alexei Navalny



குரிய சில நபர்களில் இவரும் ஒருவர்.

மார்ச் 2023 இல் (Rossiskaya Gazetta) ரஷ்ய பத்திரிகைக்கு அளித்த பேட்டியில், பெட்ருஷேவ், வாஷிங்டனும் லண்டனும் மீண்டும் நாசிசம் மற்றும் பாசிசத்துடன் ஒத்துழைக்கின்றன. உக்ரைனைப் பயன்படுத்தி ஐரோப்பாவையோ அல்லது முழு உலகத்தையோ தீப்பிடித்து எரிக்க முயல்கின்றன. எதிலிருந்தும் தப்பிக்க முடியும் என்ற நம்பிக்கையில் அவர்களுக்கு எந்தக் கவலையும் அமைதியின் மீது இல்லை.

பெட்ருஷேவ் ரஷ்யாவின் புவியியல் இராஜதந்திர நிலைப்பாட்டை உயர்த்துவதற்காக பரவலாகப் உலகப் பயணம் செய்பவர். மேலும் சீனாவுடனான கூட்டணியை நிர்வகிப்பதில் முக்கிய பங்கு வகித்துள்ளார். அதேவேளை பெட்ருஷேவின் 45 வயதான மகன் டிமிட்ரி, தற்போது விவசாய அமைச்சராக உள்ளார், மேலும் அவரே புட்டினின் எதிர்கால வாரிசு என்ற வதந்தியும் பரவலாக பரவியுள்ளது.

### 2020 இல் பிரதமரான மிகைல் மிஹுஸ்டின் :

57 வயதான பொருளாதார நிபுணரான மிகைல் மிஸ்ஹூடின; (Mikhail Mishustin)2020 இல் பிரதமராக நியமிக்கப்படுவதற்கு முன்பு நாட்டின் வரிப் பணியகத்தின் தலைவராக ஒரு தசாப்தம் பணியாற்றினார். உக்ரைன் போர் ஆரம்பித்து 2022 பிப்ரவரியில் இருந்து ரஷ்யா மீது போடப்பட்ட மேற்கத்திய பொருளாதாரத் தடைகளின் வீழ்ச்சியைக் கட்டுப்படுத்துவதில் மிக கவனம் செலுத்தினார்.

ஆயினும் 2022 போர் தொடங்கிய வேளை புட்டினின் படையெடுப்பு முடிவை அவர் எதிர்த்ததாகவும் கூறப்படுகிறது. புட்டினை எதிர்கொள்வதற்குத் தயாராக இருப்பதைக் காட்டிலும் ஒரு மூலோபாய பின்வாங்கலாக, குறைவான சாதகமான நிபந்தனைகளில் ரஷ்ய ஆட்சியின் அடிப்படைக் கட்டமைப்புகளை அப்படியே வைத்திருப்பதன் மேலப் அவரை நன்கு நிலைநிறுத்தக் கூடும்.

சிறையில் உள்ள அலெக்ஸி நவல்னிக்கு சாத்தியமா?

சிறையில் அடைக்கப்பட்ட எதிர்க்கட்சித் தலைவர் அலெக்ஸி நவல்னி (Alexei Navalny), புட்டினுக்குப் பிந்தைய ரஷ்யாவை வழிநடத்த விரும்பும் மிக முக்கியமான அரசியல்வாதியாக இருப்பதாக மேற்கத்திய ஊடகங்கள் பாரிய பிரச்சாரங்களை வெளியிட்டன.

முன்னைய ரஷ்யாவின் எதிர்கட்சித் தலைவர் அலெக்ஸி நவல்னிக்கு மோசடி மற்றும் நீதிமன்ற அவமதிப்புக்காக 9 ஆண்டுகள் கடுகாவல் தண்டனை விதித்து அந்நாட்டு நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது. ரஷ்ய அரசியலில் புட்டினுக்கு சவாலாக கருதப்பட்ட அலெக்ஸி நவல்னிக்கு அடுத்தடுத்து வழங்கப்பட்டுள்ள சிறை தண்டனைகள் அவரது ஆதரவாளர்களிடத்தில் அதிர்ச்சியை ஏற்படுத்தியது.

ரஷ்ய அதிபர் புட்டினையும், அவரது அரசின் ஊழலையும் கடுமையாக விமர்சித்து வந்தவர் எதிர்க்கட்சித் தலைவர் அலெக்ஸி நவல்னி. அதிபர் தேர்தலின்போதும் தொடர் பிரச்சாரங்களில் ஈடுபட்ட அலெக்ஸி நவால்னிக்கு இளைஞர்கள் மத்தியில் பரவலான வரவேற்பு இருந்தது.

ஊழலுக்கு எதிரான தனது அறக்கட்டளை மூலமாக பணத்தை முறைகேடாகக் கையாடல் செய்ததாகக் கூறி 2013ஆம் ஆண்டு அலெக்ஸி மீது வழக்குத் தொடரப்பட்டது.

(14ஆம் பக்கம் பார்க்க)

# யாழில் 18 பொதிகளில் கேரள கஞ்சா மீட்பு

யாழ்ப்பாணம், நவ. 12

யாழ்ப்பாணம் - அனலைதீவில் 27 மில்லியன் ரூபா பெறுமதியான கேரள கஞ்சா மீட்கப்பட்டுள்ளதாக கடற்படை தெரிவித்துள்ளது.

நேற்று முன் தினம் வெள்ளிக்கிழமை அனலைதீவு கரையோர பகுதியில் கைவிடப்பட்ட 18 பொதிகளில் இருந்து குறித்த கஞ்சா மீட்கப்பட்டுள்ளது.

69 கிலோகிராம் நிறையுடைய கேரள கஞ்சா இதன்போது கைப்பற்றப்பட்டது. (அ)



# புட்டினுக்கு பின்னர்....

(13ஆம் பக்கத் தொடர்ச்சி)

இந்த வழக்கில் மாஸ்கோ நீதிமன்றம் கடந்த வருடம் அவருக்கு மூன்று ஆண்டுகள் சிறைத் தண்டனை விதித்தது.

புட்டினை எதிர்த்த போரிஸ் நெம்ட்சோவ் போன்ற பிற எதிர்க்கட்சித் தலைவர்கள் படுகொலை செய்யப்பட்டுள்ளனர். பெப்ரவரி 2015 இல் கிரெம்ளினுக்கு அருகிலுள்ள போல்ஷோய் மோஸ்க்வொரெட்ஸ்கி பாலத்தில் தனது காதலியுடன் நடந்து சென்ற போது போரிஸ் நெம்ட்சோவ் சுட்டுக் கொல்லப்பட்டார். சந்தேகத்திற்கு இடமின்றி அவர் ரஷ்யாவின் மிக முக்கியமான எதிர்க் கட்சி அரசியல்வாதிகளில் ஒருவராக விளங்கியவர்.

அத்துடன் புட்டினை அரசியல் ரீதியாக எதிர்த்த ஆனால் மிகைல் கோடர்கோவ்ஸ்கி போன்றவர்களும் நாடுகடத்தப்பட்டுள்ளனர்.

**பாதுகாப்பு அமைச்சர் செர்ஜி ஷோய்கு**

உக்ரைன் போரை வழிநடத்தும் செர்ஜி ஷோய்கு (Sergei Shoigu) ரஷ்யாவின் அடுத்த சாத்தியமற்றவராகவே தென்படுகிறார். ரஷ்யாவின் பாதுகாப்பு அமைச்சர் செர்ஜி ஷோய்கு ஜனாதிபதி தற்போது புட்டினால் ஓரங் கட்டப்பட்டுள்ளார். 67 வயதான ஷோய்கு, 1991 முதல் 2012 வரை அவசர கால சூழ்நிலைகள் அமைச்சகத்திற்கு தலைமை தாங்கினார்.

அதன்பிறகு 2014 இல் ரஷ்யாவுடன் கிரிமியாவை இணைப்பதற்கு ஷோய்கு தலைமை தாங்கினார் என்பது குறிப்பிடத்தக்கது. உக்ரைனில் ரஷ்ய படைகளின் வெற்றி தாமதமடைந்து வருவதைய டுத்து ரஷ்யாவின் பாதுகாப்பு அமைச்சர் செர்ஜி ஷோய்கு ஜனாதிபதி புடினால் ஓரங்கட்டப்பட்டு வருவதாக அறிக்கைகள் வெளியாகி வருகின்றன.

உக்ரைனில் ரஷ்யாவின் இராணுவ நடவடிக்கை யானது தலைநகர் கீவ்வை கைப்பற்ற தவறி தற்போது போர் நடவடிக்கையானது நீண்டு வருகிறது.

அரசியலில் நுழைவதற்கு முன்பு கட்டுமானத் துறையில் பல ஆண்டுகளாக பணியாற்றிய ஷோய்கு, கணிசமான இராணுவ அனுபவம் இல்லாதவர்.

பிரித்தானிய உளவுத்துறையின் தகவலின்படி, உக்ரைன் போரில் விரைவான மற்றும் தீர்க்கமான வெற்றியை வழங்கத் தவறியதால் ரஷ்ய பாதுகாப்பு அமைச்சர் செர்ஜி ஷோய்கு ஜனாதிபதி புட்டினால் பதவி இறக்கத்தை எதிர் கொண்டுள்ளார் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

ரஷ்ய அதிபர் புட்டினின் நீண்ட ஆட்சி நிரந்தரமாக இருக்க முடியாது என்பது உண்மையே. எத்தகைய சவால்களை எதிர் கொண்டு, 2036ஆம் ஆண்டு வரை ரஷ்யா அதிபர் பதவியில் தொடர்வாரா அல்லது அடுத்த தலைமைக்கோ அல்லது அடுத்த தலை முறைக்கோ ஆட்சி அதிகாரத்தை கையளிப்பாரா என்ப து எவருக்கும் புரியாத புதிராகும்.

# சம்பந்தனின் அரசியல்...

(08ஆம் பக்கத் தொடர்ச்சி)

செயற்பாடுகளேயாகும் என்பதில் சந்தேகமில்லை.

போருக்கு பின்னரான கால கட்டத்தில் உள்நாட்டு மற்றும் சர்வதேச நிலைவரங்கள் வேண்டி நிற்பதற்கு ஏற்றமுறையில் தமிழர்களின் அரசியல் உரிமைப் போராட்டத்தை தொடர்ந்து முன்னெடுப்பதற்கான மார்க்கத்தை வகுப்பதில் வரலாற்று முக்கியத்துவ பாத்திரம் சம்பந்தனுக்கு உரியதாக இருந்தது. அந்த பாத்திரத்தை இதுவரையில் எவ்வாறு கையாண்டு வந்தார் என்பது குறித்த மதிப்பீடே தமிழர் அரசியலில் இது வரையிலான அவரின் தகுநிலை பற்றிய கேள்விக்கு விடையளிக்கும்.

போரின் முடிவுக்கு பிறகு உடனடியாக வடக்கு, கிழக்கு தமிழர்கள் மத்தியில் கட்டுறுதியான ஓர் அரசியல் சமுதாயம் இருக்கவில்லை. போர்காலத்தில் உருவாக்கப்பட்ட தமிழ் தேசிய கூட்டமைப்பு போருக்கு பின்னர் அந்த இடைவெளியை நிரப்பும் பாரிய பொறுப்பைக் கொண்டிருந்தது. தமிழ் மக்கள் தேர்தல்களில் கூட்டமைப்புக்கு வாக்களிப்பதை தவிர வேறு வழி இல்லை என்ற நிலை கணிசமான காலகட்டத்துக்கு நீடித்தது.

ஆனால், அந்த பொறுப்பை நிறைவேற்றக்கூடியதாக கூட்டமைப்பை வழிநடத்துவதில் சம்பந்தன் தனது பழுத்த அனுபவத்தின் அடிப்படையில் தொலைநோக்குடனும் விவேகத்துடனும் நடந்து கொண்டிருந்தால், தமிழ் அரசியல் சமுதாயம் இன்று காணப்படுவதைப் போன்று சிதறுண்டதாக இருந்திருக்காது என்று தமிழ் மக்கள் மத்தியில் கடுமையான அபிப்பிராயம் இருக்கிறது.

பிரச்சினைகள் வரும்போது உடனடியாக அவற்றைக் கையாளாமல் அமைதியாக இருக்கும் சம்பந்தனின் அணுகுமுறை இந்த நிலைமை ஏற்படுவதற்கு பெரிதும் காரணமாக இருந்தது எனலாம்.

இன்று வடக்கு, கிழக்கில் தமிழர்கள் மத்தியில் பெருவாரியான கட்சிகள். அவை ஒவ்வொன்றும் தங்கள் சொந்தத்தில் கூட்டணிகளை அமைத்துருப்பதாக கூறுகின்றன. சில கூட்டணிகள் ஒரு ஹை ஏஸ் வானில் ஏற்றுவதற்கு போதுமான எண்ணிக்கையில் உறுப்பினர்களை கொண்டவையாகக் கூட இல்லை என்றும் கூறலாம்.

எந்த தமிழ்க் கட்சியிலும் ஒழுங்கு கட்டுப்பாடு என்பது இல்லை. ஒரு காலத்தில் தலைவர்களுக்கு கட்சி உறுப்பினர்கள், தொண்டர்கள் மற்றும் பொதுமக்கள் மத்தியில் இருந்த மதிப்பையும் மரியாதையையும் இன்று காணமுடியவில்லை. சம்பந்தனின் தமிழரசு கட்சியில் கூட்டாக தீர்மானம் எடுத்து பொதுவெளியில் பேசும் கலாசாரமே இன்று கிடையாது. ஒவ்வொரு பாராளுமன்ற உறுப்பினரும் தங்களது எண்ணத்தின் படி அறிக்கைகளை வெளியிடுகிறார்கள், உரைகளை நிகழ்த்துகிறார்கள். அவர்களின் கட்சிகளின் உண்மையான நிலைப்பாடுகளை மக்கள் உறுதியாக தெரிந்துகொள்ள முடியாத அளவுக்கு குழப்பநிலை காணப்படுகிறது.

தமிழ் தேசிய அரசியலின் படிப்படியான இந்த சீரழிவு தனது கண் முன்னால் நடந்து கொண்டிருக்கிறது என்பது குறித்து சம்பந்தன் அவர்கள் நிச்சயம் வருந்தவேண்டும்.

உடல்நிலை குன்றிய நிலையில் அவரின் மனதைப் புண்படுத்துவது எமது நோக்கம் அல்ல. அவர் பூரண சுகத்துடன் வாழவேண்டும். ஆனால் தமிழர் அரசியலின் இன்றைய நிலைமை அவருக்கு கூறாமல் இருக்க முடியவில்லை.

வடமாகாண முதலமைச்சர் பதவிக்கு சம்பந்தன் தேடிப் பிடித்துக் கொண்டுவந்தவர் தான் முன்னாள் உயர்நீதிமன்ற நீதியரசர் சி.வி. விக்னேஸ்வரன். அவர் தமிழ் தேசிய கூட்டமைப்பின் சார்பிலான முதலமைச்சராக பதவி வகித்தபோதிலும், சம்பந்தனின் தலைமைத்துவத்தையோ அல்லது கட்சியின் கட்டுப்பாட்டையோ மதித்துச் செயற்படவில்லை. ஆனால், இன்று சுமந்திரன் கூறிய கருத்துக்கு பிறகு சம்பந்தனே தமிழ் மக்களின் அடையாளம் என்றும் அவரது சேவை தேவை என்றும் நீதியரசர் ஊடகங்களுக்கு அறிக்கை வெளியிடுவதை காணக்கூடியதாக இருக்கிறது. இன்று தனக்கு ஆதரவாக விக்னேஸ்வரன் குரல் கொடுப்பது குறித்து சம்பந்தன் ஐயா என்ன நினைக்கிறாரோ?

# வடக்கில் வல்லரசுகளின்....

(11ஆம் பக்கத் தொடர்ச்சி)

அத்தனை நாடுகளும் அதன் முதலீட்டையும் வர்த்தகத்தையும் தமது நாடுகளில் ஊக்குவிக்கின்றன. இங்கு வடக்கில் இந்தியாவுக்காக நாம் சீனாவை எதிர்க்கிறோம். ஆனால் அதே இந்தியாவின் பிரதான முதலீட்டு, வர்த்தகப் பங்காளியாக சீனா இருந்து வருகிறது என்பது தான் யதார்த்தம். யாழில் தேர்ந்தெடுக்கப்பட்ட புத்திசீவிகள் சிலருடனான சந்திப்பின் போது சீனத்தூதுவர் உள்நாட்டு அரசியல் விவகாரங்களில் தாம் தலையிடுவதில்லை என்று கூறியதும் பொருளாதார சமூக நலன்கள் மீதே தாம் அதிக கரிசனை உடையவர்களாக இருக்கிறோம் என்று கூறுவதும் எந்தளவுக்கு உண்மை இல்லையோ அதே போல இந்தியாவும் மேற்குலக நாடுகளுங்கூட உள்நோக்கம் எதுவுமின்றிச் செயற்படவில்லை என்பதுவும் அதேயளவு உண்மையில்லை. இவ்விடத்தில் மாறிவரும் உலக ஒழுங்கை தமிழ்மக்கள் கவனத்தில்கொள்ள வேண்டும். உலக நாடுகள் இன்று ஏனைய எல்லா நலன்களையும் விட பொருளாதார வாய்ப்புகளுக்கே முக்கியத்துவம் கொடுக்கின்றன என்ற யதார்த்தத்தையும் புரிந்து கொள்ளவேண்டும். நாங்கள் எவ்வளவுதான் எதிர்ப்புகளைக் காட்டினாலும் வடக்கில் சீனாவின் காலுன்றலை தடுக்கும் வாய்ப்புகள் இலங்கையின் இன்றைய அரசியல் பொருளாதார நிலையில் அரிதாகவே உள்ளன. எனவே இந்திய சீன வல்லரசுகளின் போட்டிக் களத்தில் தமிழ்மக்கள் ஒரு பக்கம் நின்று வழமை போல் எதுவும் பெறாமல் போவது நல்லதா அல்லது சிங்களத்தின் விலாங்குமீன் அணுமுறையைக் கையாண்டு ஏதாவது பெறமுடியுமா என்று சிந்திப்பது நல்லதா? இக்கேள்விகளுக்கு தமிழ் மக்களும் அவர்களின் தலைவர்களுமே விடைகாணவேண்டும்.

# மரண அறிவித்தல்



## திருமதி வைஷ்ணவி இளங்கோ

யாழ்ப்பாணம், அல்வாய், வட்டுவத்தையை பிறப்பிடமாகவும், கொழும்பை வாழ்விடமாகவும், ஐக்கிய இராச்சியம் Birmingham இல் வசித்தவருமான திருமதி வைஷ்ணவி இளங்கோ கடந்த (26.10.2023) வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற ஆனந்தகுமார் (Bond Master) மற்றும் குகாம்பிகை தம்பதியரின் கனிஷ்ட புத்திரியும், இளங்கோவின் அன்பு மனைவியும், வைதேகி (Oman), புருஷோத் (UK) ஆகியோரின் பாசமிகு சகோதரியும், காலஞ்சென்ற பரமலிங்கம் மற்றும் ஈவா தம்பதிகளின் மருமகளும், சிவகணேசன் - சந்திராதேவி (Sri Lanka) , சிவசங்கரன்-ஜெயராணி (Sri Lanka), சிதம்பரநாதன் - அமிர்தகௌரி (Sri Lanka ), சுப்ரமணியம், குணநேசன், குணநேசம், விமலா, குணரதனி ஆகியோரின் மருமகளும், முத்துமயில்வாகனம் - அம்பிகை (Germany) , தனபாலசிங்கம் - ராதாம்பிகை (Canada), ஸ்ரீநந்தலோஜன்-நவாம்பிகை (Denmark), ஸ்ரீஜெயராமச்சந்திரன் (Canada), நகுலானந்தன் - ஞானாம்பிகை (UK) ஆகியோரின் பெறாமகளும், சிவராகுலன், ராகவி,ரமணீதரன், கேசினி, ஜங்கரன், சிவகணேசன், கோபாலராஜன், அஜந், ஆஷா, நிரோஷன், விவித்தா, சசிகரன், தேவசுவோஜினி ஆகியோரின் மைத்துனியும், மகிந்தன், அபிராமி, ரிஷபி, ரிஷிகர், ஷ்வாபி, பிரதிக்கா, மதுஷன், நிருஷன், விஷ்ணுபிரியா, வேல்முருகா, பிரபா-ரன்ஜன், வினித்தா-டோமினிக், ஜனேஷ், கமலன்-சாரு, அனுசிகா, பிரணவன், ஆகியோரின் சகோதரியும், அமீஷா, அமாயா, சாய்னா ஆகியோரின் மாமியும், கோபிஷா,யாதவ், ஆருஷ், அனுஸ்ரீ ஆகியோரின் சித்தியும், ரோஷேய்ன் துருவனின் பெரியம்மாவும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் எதிர்வரும் 19-11-2023 ஞாயிற்றுகிழமை காலை 9.00 - 11.00 மணியளவில் லண்டனில் உள்ள Hendon Cemetery & Crematorium, Holders (Hill Rd, London NW7 1NB) நடைபெற்று, பூதவுடல் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
**சிவகணேசன் (மாமன்)**
**+94768046362**

தொடர்புகளுக்கு:
**இளங்கோ (கணவன்)** - +447399604792
**புருஷோத் (சகோதரன்)**- +447960641315

### தலைவர்....

இடையில் கலந்துரையாடல் இடம் பெற்றதாக கிடைத்த செய்திகளின்படி கூறப்பட்டது.

கட்சித் தலைவர் போன்ற பதவி கிடைத்தால் நல்லது எபன திருமதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரண துங்கவினால் பிரேரணை ஒன்று முன் வைக்கப்பட்டுள்ளதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

எனினும் இது தொடர்பான உட்கட்சி கலந்துரையாடல்கள் எதுவும் இதுவரை அதிகாரபூர்வமாக தொடங் கப்படவில்லை என தெரிவிக்கப்படு கின்றது.

கட்சித் தலைமையையும் தலைவர் பதவியையும் பிரித்தால் சரியாக இருக்கும். இவ்வாறான பிரேரணை களும் கிடைக்கப்பெற்றுள்ள போதிலும், இறுதித் தீர்மானம் மைத்திரிபால சிறிசேனவினால் எடுக்கப்படும் என தெரிவிக்கப்படுகின்றது என்று அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ)

### 2024....

தேர்தலுக்கு முன்னர் பொதுத்தேர்தலை நடத்தும் நிலைப்பாட்டில் ஜனாதிபதி இருப்பதால் பாராளுமன்றம் முன்கூட்டியே கலைக்கப்படும் எனவும் அந்த வட்டாரங்கள் தெரிவித்தன.

நாட்டின் தற்போதைய அரசியல் சூழ்நிலை, முதலில் ஜனாதிபதி தேர்தலை நடத்தினால் ஏற்படும் அரசியல் ரீதியி லான தாக்கங்கள் உள்ளிட்ட காரணிக ளைக் கருத்திற்கொண்டே, அவசர பொதுத்தேர்தல் நடத்தப்படலாம் என தெரியவருகின்றது. (அ)

### இலங்கையில்....

உள்ளதாக மத்திய நிலையம் கூறுகிறது.

பயன்படுத்தப்படும் மது வகைகளில், அரக்கு மதுபான வகை முதலிடத்திலும், அதற்கு அடுத்தபடியாக பியர் வகையும் உள்ளது. கசிப்பு பயன்படுத்தவோரின் எண்ணிக்கை 10 சதவீதத்திற்கு மேல் இல்லையென்றும் தெரிவித்துள்ளது.

ஏழைக் குடும்பங்கள் தங்களது வருமானத்தில் மூன்றில் ஒரு பங்கை மது, பியர் மற்றும் சட்டவிரோத மது வுக்காகச் செலவிடுவதாக இலங்கை மது மற்றும் போதைப்பொருள் தகவல் மையம் கூறியது.

நாட்டின் வருமானத்தை அதிகரிக்க வேண்டுமானால், மதுபானத்தின் மீதான வரியை அதிகரிக்க வேண்டும் எனவும், அதன் மூலம் மக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்த முடியும் எனவும் அந்த மையம் தெரிவித்துள்ளது.

மதுபானங்களின் விலையை குறைத்து விற்பனை நிலையங்களை அதிகரிப்பதற் கும், கள்ளச்சாராயம் அதிகரிப்பதால் வரியை பெற்றுக்கொள்ள முடியாது என்றும் கூறும் விஞ்ஞானப்பூர்வமற்ற வாதங்களுக்கு அரசாங்கம் ஏமாற வேண்டாம் எனவும் மத்திய நிலையம் மேலும் தெரிவித்துள்ளது. (அ)

### சொகுசு....

பயணித்த வாகனமும் மோதியதில் குறித்த விபத்து ஏற்பட்டுள்ளது.

கூலர் வாகனச் சாரதி படுகாயம டைந்துள்ள நிலையில் ஏனையவர்கள் சிறிய காயங்களுடன் உயிர் தப்பினர்.

### எனக்கு....

செயலகத்துக்குச் சென்று தண்ணீர் கூட அருந்த மாட்டேன். காரணம் அதில் நஞ்சையும் கலக்கக் கூடும். அந்தளவுக்கு எனக்கு உயிர் அச்சுறுத்தல் காணப்படு கிறது என்றும் குறிப்பிட்டார்.

இலங்கை கிரிக்கட் நிறுவனத்தின் தலைவரின் கோரிக்கைக்கு அமையவே சர்வதேச கிரிக்கெட் பேரவை உறுப்புரி மையை இடைநிறுத்தியுள்ளதாக ஈ.எஸ். பி.என் கிரிக் இன்போ இணையத்தளம் தெரிவித்துள்ளதாகவும் அமைச்சர் ரொஷான் ரணசிங்க மேலும் தெரிவித் தார். (அ)

# இருள் அகன்று ஒளி பிறக்கட்டும்!

## ஜனாதிபதி ரணில் தீபாவளி வாழ்த்து



கொழும்பு, நவ. 12

உலகெங்கும் உள்ள இந்து மக்களி னால் கொண்டாடப்படும் தீபாவளி பண்டி கையில் எமது மனத்துள்ளே இருக்கும் தீய எண்ணங்கள் நீக்கி ஒளியை உதயமாக்கும் என ஜனாதிபதி ரணில் விக்கரமசிங்க தெரிவித்துள்ளார்.

தீபாவளி பண்டிகையை முன்னிட்டு ஜனாதிபதி விடுத்துள்ள வாழ்த்து செய்தி யிலேயே அவர் இதனைத் தெரிவித் துள்ளார்.

விஷ்ணு பகவானினால் நரகாசுரன் தோற்கடிக்கப்பட்டதை நினைவுகூறும் வகையில் இந்துக்கள் தீபாவளி பண்டி கையை கொண்டாடுவதோடு, தனக்கு ஞான ஒளி கிட்டியது போல உலகின் அனைத்து ஜீவராசிகளுக்கும் ஒளிகிட்ட வேண்டுமென நரகாசுரன் விஷ்ணு பகவா னிடத்தில் வேண்டியதாக கூறப்படுகிறது.

அதனை நினைவுகூறும் வகையில், அனைவரது மனங்களிலும் ஒளி பிறக்க வேண்டும் என்ற பிரார்த்தனையுட னேயே இந்து பக்தர்கள் விளக்கேற்றி சமய வழிபாடுகளில் ஈடுபடுகின்றனர்.

நாடு என்ற வகையில் நாம் கடந்த இரு வருடங்களில் எதிர்கொண்டிருந்த இருளான யுகத்திலிருந்து மீண்டு, ஒளி நிறைந்த பாதையில் இலங்கை தனது பயணத்தை ஆரம்பித்துள்ள இந்தத் தருணத்தில் நாட்டிற்காகவும் சுபீட்சமாக நாடு மேம்பட வேண்டும் எனவும் பிரார்த்தனையில் ஈடுபடுங்கள என்றும் தெரிவித்துள்ளார்.

அத்துடன் நாட்டில் சுபீட்சத்தின் தீபங்களை ஏற்றி, இலங்கையை வெற்றிப் பாதைக்கு கொண்டு செல்வதற்கும், பல்லின மக்களுக்கு மத்தியில் சமாதா னம், சகவாழ்வு, நித்திய நல்லிணக்கத்து டன் கூடிய ஆன்மீக வளர்ச்சியை ஏற்ப டுத்தவும் இந்த தீபாவளி பண்டிகை வரப்பிரசாதமாக அமைய வேண்டும் என நான் பிரார்த்திப்பதோடு அனைவர் வாழ்விலும், இன்பமும் நலமும் உண்டாக பிரார்த்திக்கிறேன்.

இலங்கை உட்பட உலகம் முழுவதும் உள்ள அனைத்து இந்து பக்தர்களுக்கும் இருளை அகற்றி ஒளி பிறக்க தித்திக்கும் தீபாவளி வாழ்த்துக்கள் என ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார். (அ)

# சீனாவின் கோரிக்கையை நிராகரித்தார் ஜனாதிபதி!

கொழும்பு, நவ. 12

இலங்கைக்கு அடுத்த வருடம் எந்தவொரு வெளிநாட்டுக் கப்பலும் ஆராய்ச்சி மற்றும் ஏனைய நடவடிக்கைகளுக்காக வருவதற்கு இடமளிக்க வேண்டாம் என ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க வெளிவிவகார அமைச்சுக்கு உத்தரவிட்டுள்ளார்.

அடுத்த ஆண்டு தேர்தல் நடைபெறவுள்ளதால், பிராந்திய ஒத்துழைப்புக்கு பிரச்னையான கப்பல்கள் நாட்டுக்கு வருவதை நிறுத்துவதற்கு இந்த முடிவு எடுக்கப்பட்டுள்ளதாக அரசாங்கத்தின் மூத்த பேச்சாளர் ஒருவர் தெரிவித்தார்.

ஜனாதிபதியின் இந்த உத்தரவின் பிரகாரம், வெளிநாட்டுக் கப்பல்கள் அடுத்த வருடம் இலங்கைப் பெருங்கடல் பகுதியில் ஆராய்ச்சிக்காக உள்நாட்டு நிறுவனங்களுடன் ஒப்பந்தம் செய்து கொண்டால் அவை இரத்து செய்யப்படும் என்றும் அவர் கூறினார்.

எதிர்வரும் பெப்ரவரியில் மற்றுமொரு ஆய்வுக் கப்பலை அனுப்புவதற்கு சீனா அனுமதி கோரியுள்ள நிலையில் அரசாங்கம் இந்த முடிவை எடுத்துள்ளது.

முன்னதாக இரண்டு சீனக் கப்பல்கள் வந்ததைப் போலவே இந்தக் கப்பலின் வருகை குறித்தும் இந்தியாவின் ஆட்சேபனைகள் எழுப்பப்பட்டதாக இராஜதந்திர மட்ட கருத்துக்கள் தெரி விக்கின்றன. (அ)

### துயிலும்....

இல்லக் காணியில் பாரிய பிரதேசத்தை இலங்கை இராணுவத்தினர் கையகப் படுத்தியுள்ளனர்.

இந்நிலையில் மாவீரர் நாள் நினை வேந்தல் நிகழ்வுகள் செய்வதற்கு இட வசதி இன்றியும் தமது உறவுகளை புதைத்த இடத்தில் அஞ்சலி செலுத்த முடியாத நிலை உறவுகளுக்கு ஏற்பட் டுள்ளதாகவும் மாவீரர் துயிலும் இல்லக் காணியில் இருந்து இராணுவத்தை வெளியேறுமாறு பல தடவைகள் அழுத்தம் கொடுத்தும் இதுவரை பயன் கிட்டவில்லை எனவும் தெரிவித்து குறித்த காணியில் உள்ள இராணுவத்தை வெளியேறுமாறு கோரியே போராட் டம் முன்னெடுக்கப்பட்டது.

போராட்டத்தில் ஈடுபட்டவர்கள் பார்க்க விடு பார்க்க விடு கல்லறையில் அப்பாக்களை பார்க்க விடு, கல்லறைகளை வழிபட வழிவிடு, கல்ல றைகள் மேலிருந்து இராணுவமே வெளி யேறு, மிதிக்காதே மிதிக்காதே புனிதர்களை மிதிக்காதே, அழ விடு அழ விடு அம்மாக்களை அழ விடு, விளக் கேற்றுவோம் விளக்கேற்றுவோம் பிள்ளைகளுக்கு விளக்கேற்றுவோம், கல்லறைகளை அழிப்பதும் புத்தனின் போதனையா? போன்ற பல்வேறு வாச கங்களையுடைய பதாதைகளை தாங்கிய வாறு போராட்டத்தில் ஈடுபட்டனர்,

குறித்த போராட்டத்தின்போது பாராளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரன், முன்னாள் கரைச்சி பிரதேச சபையின் தவிசாளர் வேழமாலிகிதன், முன்னாள் கரைச்சி மற்றும் புதுக்குடி யிருப்பு பிரதேச சபை உறுப்பினர்கள், சமூக செயற்பாட்டாளர்கள், பொது மக்கள் என நூற்றுக்கு மேற்பட்டவர்கள் கலந்து கொண்டனர். (அ)

### மண்மேடு....

ஆதார வைத்தியசாலைக்கு சிகிச்சைக் காக அனுமதிக்கப்பட்ட நிலையில் இருவர் சிகிச்சை பலனின்றி உயிரிழந் துள்ளனர்.

மண்மேடு சரிந்து வீழ்ந்ததில் நான்கு வீடுகள் சேதமடைந்துள்ளதாக பொலிஸ ார் தெரிவித்தனர்.

காயமடைந்த மேலும் இருவரின் நிலை கவலைக்கிடமாக இல்லை என வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவித் தன. (அ)

### பெற்றோல்....

அதிகரிக்க முன்மொழியப்பட்டுள்ளது. தற்போது 15 வீதமாக இருக்கும் வற் வரி 18 வீதமாக அதிகரிக்கப்பட உள்ளது.

இந்த வரி உயர்வால் பெற்றோல், டீசல் விலை மேலும் 10 வீதம் அதிகரிக்கப்படலாம் என அரச நிதிக்குழுவில் விவாதிக்கப்பட்டுள்ளது.

சர்வதேச நாணய நிதியம் எதிர்பார்க்கும் அரச வருமானத்தை பூர்த்தி செய்ய முடியாத காரணத்தினால் இந்த வரிகளை விதிக்க அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

2024ஆம் ஆண்டுக்கான வரவு - செல வுத் திட்டம் எதிர்வரும் 13ஆம் திகதி ஜனாதிபதி ரணில் விக்கிரம சிங்கவால் பாராளுமன்றத்தில் தாக்கல் செய்யப்பட உள்ளமை குறிப்பிடத்தக்கது. (அ)

# ஒக்ரோபரில் 131 சிறுமிகள் வல்லுறவு



கொழும்பு, நவ. 12

நாடு முழுவதும் ஒக்ரோபர் மாதத்தில் சிறார் பலாத்கார வழக்குகளின் அதிர்ச்சியூட்டும் அளவில் அதிகரித் துள்ளது.

அறிக்கையின்படி, இந்த காலகட் டத்தில் 16 வயதுக்குட்பட்ட மொத்தம் 131 சிறுமிகள் பாலியல் வன்கொடு மைக்கு ஆளாகியுள்ளனர்.

ஊடகவியலாளர் மாநாட்டின் போது, பொலிஸ் சிறுவர் மற்றும் பெண்கள் பணியகத்தின் பிரதிப் பொலிஸ் மா அதிபர் ரேணுகா ஜயசுந்தர இந்த விடயம் தொடர்பான மேலதிக விபரங்களை தெரிவித்தார்.

பதிவாகிய 131 வழக்குகள் குறித்து அவர் ஆழ்ந்த கவலையை வெளிப்படுத்தினார், மேலும் பாதிக்கப் பட்டவர்களில் 10 பேர் தற்போது கர்ப்பமாக உள்ளனர் என்பதை வெளிப் படுத்தினார்.

செப்டம்பரில் மட்டும் 16 வயதுக் குட்பட்ட 168 சிறுமிகள் பாலியல் துஷ்பிரயோகத்திற்கு ஆளாகியுள்ளத ா கவும், இவற்றில் 22 குழந்தைகள் கர்ப்பம் தரித்துள்ளதாகவும் பெண்கள் மற்றும் குழந்தைகள் விவகார இராஜாங்க அமைச்சர் கீதா குமாரசிங்க தெரிவித் திருந்தார். (அ)

### ஜனாதிபதி....

பிரச்னைகளுக்கு தீர்வு காணும் வகை யில் இந்தக் கலந்துரையாடல் இடம் பெற்றது.

இந்தக் கலந்துரையாடலைத் தொடர்ந்து கருத்துரைக்கையிலே அரச வைத்திய அதிகாரிகள் சங்கத்தின் செயலாளர் வைத்தியர் ஹரித அலுத்கே இந்த விடயத்தை தெரிவித்துள்ளார்.

நியாயமற்ற வரிக் கொள்கை, நாட் டில் இருந்து வெளியேறும் வைத்தி யர்கள், மருத்துவ கொடுப்பனவுகள் மற்றும் சம்பள பிரச்னைகள் உள்ளிட்ட சுகாதாரத் துறையினர் எதிர்கொண் டுள்ள பல்வேறு பிரச்னைகளுக்கு உரிய தீர்வுகளை கோரி அரச வைத்திய அதிகாரிகள் சங்கம் அண்மைக்காலமாக தொழிற்சங்க நடவடிக்கைகளை முன்னெடுத்து வந்தது.

இதற்கமைய, அரச வைத்திய அதி காரிகள் சங்கத்தால் மாகாண ரீதியில் வேலை நிறுத்த போராட்டங்கள் முன்னெடுக்கப்பட்டன.

தொடர்ந்து, அரச அதிகாரிகளி டமிருந்து கிடைக்கப்பெற்ற சாதகமான பதிலை கருத்திற்கொண்டு வேலைநிறுத் தப் போராட்டத்தை தற்காலிகமாக இடைநிறுத்தப்பட்டமை குறிப்பிடத்தக் கது. (அ)

ஈழநாடு
Eelanadu

# அனைத்து மனிதரும் சமன் என்ற அறம் வெல்லவும் அநீதி தோற்கவும் அடையாளத் திருநாள் தீபாவளி

## அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தீபாவளி வாழ்த்து

யாழ்ப்பாணம்,நவ. 12

அறம் வென்று, அநீதி தோற்ற தீபாவளித் திருநாளை நம்பிக்கையுடன் வரவேற்போம்!

இன்பங்கள் நிலைத்து, துன்பங்கள் நீங்கி, எல்லா மனிதரும் சமன் என்ற அறம் வெல்லவும் அநீதி தோற்கவும் ஓர் அடையாளத் திருநாளாகத் திகழும் தீபாவளித் திருநாளை நம்பிக்கையுடன் வரவேற்போம் என ஈழ மக்கள் ஜனநாயக கட்சியின் செயலாளர் நாயகமும் நாயகமும் அமைச்சருமான

டக்ளஸ் தேவானந்தா தனது தீபாவளி வாழ்த்துச்செய்தியில் தெரிவித்துள்ளார்.

மேலும் அந்த வாழ்த்துச் செய்தியில் அவர் கூறியவை வருமாறு: -

மனித குலத்தின் மகத்தான வாழ்வின் வெற்றி என்பது புதிய உலகு நோக்கி நிமிர்ந்தெழும் காலத்தைப் படைப்பதே ஆகும்.

யாமார்க்கும் அடிமையல்லோம்,யமனை அஞ்சோம் என்ற எமது மக்களின் நம்பிக்கைகள் வெல்லவும் -

முயல்வோம்.., வெல்வோம்.., நிமிர்வோம்.., உளம் சோரோம் என்ற எமது இலட்சியப் பயணம் எண்ணிய இலக்கை எட்டவும் - நாம் இடையறாது உழைப்போம்!

எம் தமிழ் தேசம் தலை நிமிரவும், அரசியல், பொருளாதார, சமூக சமத்துவ நீதி ஓங்கவும், பாமர மக்களின் வாழ்வுயரவும், உழைக்கும் மக்களின் உரிமைகள் வெல்லவும், அழிவாயுதங்கள் அன்றி அறிவாயுதம் ஒன்றே

மாற்று வழியென நாம் பாதையை மாற்றினோம். பயணத்தை நிறுத்தவில்லை.

தீபாவளித் திருநாள் என்பது வெறுமனே புத்தாடை அணியவும், பொது விழாக்களை நடத்தவும், பட்டாசு கொழுத்திக் கொண்டாடி மகிழவும் உண்டாகிய நாள் மட்டுமல்ல, மாறாக, மாற்றமொன்று எங்கள் மண்ணில் மலர்ந்ததை கொண்டாடும் பெருநாளாக அது மலர வேண்டும்.

அழிவு யுத்தத்தின் அநீதிகளைக் கடந்து வந்த எமது மக்கள் நிம்மதிப் பெருமூச்சை இன்று விடுகின்றனர்.

அந்த நிம்மதிப் பெருமூச்சு சுதந்திரக்காற்றாக எமது மண்ணில் நீடித்து வீச வேண்டும்.

மாற்றமொன்றே எமக்கு தேவை. மாற்றங்களை எமது மண்ணில் உருவாக்கி காட்டுவதற்கு மாறாக, நாளாந்தம்,வாராந்தம், மாதாந்தம் எனப் புதிய புதிய பிரச்சினைகளை உருவாக்கி வருகின்றனர்.

அவற்றை ஊதிப. பெரும்பித்து, மக்களை உசுப்பேற்றி, கூச்சலிட்டும் வருகின்றனர்.

அதன் மூலம் அடுத்த தேர்தல் போட்டிக்கான அத்திவாரங்களே இங்கு நடந்தேறி வருகின்றன.

தேர்தலுக்காக அன்றி எம் தமிழ் தேசத்திற்காக தியாகங்களை ஏற்று நடக்கும் எமது யதார்த்த வழிமுறை மீது யாரும் சேற்றை வாரித்தூற்றுவோர் முடிந்தளவு தூற்றட்டும்.

நாம் நேசிக்கும் மக்களுக்கான நிரந்தர விடியலை எட்டும் எமது இலட்சிய பயணத்தை அரசியல் காழ்ப்புணர்ச்சியின் காரணமாக அவதூறு பொழிவோரை எதிர்கொண்டு நாம் பயணிப்பதே இன்று நாம் ஆற்றும் தியாகங்கள்.

கூச்சல்களாலும், கொக்கரிப்புகளாலும் எந்தக் கோட்டையின் கதவுகளும் திறக்காது.

அழகார்ந்த உரிமை வாழ்வை சகல மக்களும் அனுபவித்து நிமிர வேண்டும்.

இல்லங்கள் தோறும் துயரங்கள் அற்ற மகிழ் வாழ்வு மலர வேண்டும்.

தீபாவளித் திருநாளின் அர்த்தங்கள் தேசமெங்கும் தீப ஒளியாகத் துலங்க வேண்டும்.

அறம் வெல்லும்,அநீதி தோற்கும்!!

- இவ்வாறு தனது தீபாவளி வாழ்த்துச் செய்தியில் தெரிவித்துள்ளார். (அ)

# கிரிக்கெட் சபையிடம் நிதியை பெற்ற 15 பாராளுமன்ற உறுப்பினர்கள் யார்?

## பெயர் விவரத்தை பகிரங்கப்படுத்தவேண்டும் என்கிறார் தயாசிறி

கொழும்பு, நவ. 12

கிரிக்கெட் சபையின் இடைக்காலக் குழு நியமனம் தொடர்பில் வெளியிடப்பட்ட வர்த்தமானியில் பல குறைபாடுகள் காணப்படுகின்றன.இவ்வாறான பின்னணியில் தான் நீதிமன்றம் இடைக் கால தடையுத்தரவு பிறப்பித்துள்ளது. 15 பாராளுமன்ற உறுப்பினர்கள் கிரிக்கெட் சபையிடம் நிதி பெற்றதாக அமைச்சர் குறிப்பிட்டார். ஆகவே அந்த 15 உறுப்பினர்கள் யார் என்பதையும் அவர் பகிரங் கப்படுத்த வேண்டும் என பாராளுமன்ற உறுப்பினர் தயாசிறி ஜயசேகர தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

கிரிக்கெட் சபையின் தலைவர் சம்மி சில்வா மக்கள் விடுதலை முன்னணிக்கு நிதி வழங்கியதாக ஆளும் தரப்பின் பிரதம கொறடாவான பிரசன்ன ரணதுங்க குறிப்பிட்டார்.

ஆனால் இன்று அந்த குற்றச்சாட்டை உறுதிப்படுத்த முடியாது என்று குறிப்பிடுகிறார்.

கிரிக்கெட் சபையின் வைப்பில் இருந்து 2 மில்லியன் டொலரை மீளப் பெறுவதற்கு கிரிக்கெட் சபையின் மோச டியாளர்கள் முயற்சிப்பதாக விளையாட்டுத் துறை அமைச்சர் ரொஷான் ரணசிங்க குறிப்பிட்டார். ஒப்பந்தகாரர் களுக்கு நிலுவை தொகை செலுத்துவதற்கான இந்த தொகையை மீளப்பெற நடவடிக்கை எடுத்ததாக சிறிலங்கா கிரிக்கெட் அறிக்கை வெளியிட்டுள்ளது.

கிரிக்கெட் சபை தொடர்பில் தொடர்ந்து பல குற்றச்சாட்டுகள் முன்வைக்கப்படுகின்றன. ஆனால் உரிய விசாரணைகள் முன்னெடுக்கப்படவில்லை. இது முற்றிலும் தவறானது.

கிரிக்கெட் சபையிடமிருந்து 15 பாராளுமன்ற உறுப்பினர்கள் நிதி பெற்றதாக அமைச்சர் ரொஷான் ரண சிங்க குறிப்பிட்டார்.யார் அந்த 15 பேர் என்பதை அவர் பாராளுமன்றத்துக்கு அறிவிக்க வேண்டும்.இந்த கருத்து ஒட்டுமொத்த பாராளுமன்ற உறுப்பினர்களுக்கும் தாக்கம் செலுத்தும்.

கிரிக்கெட் சபையின் வீழ்ச்சிக்கு முன்னாள் விளையாட்டுத்துறை அமைச்சர்கள் அனைவரும் பொறுப்புக் கூற வேண்டும் என்று குறிப்பிடுவதை ஏற்றுக் கொள்ள முடியாது.நான் விளையாட்டுத்துறை அமைச்சராக பதவி வகித்தபோது பல முக்கிய தீர்மானங்களை முரண்பாடற்ற வகையில் எடுத்தேன். கிரிக்கெட் சபையுடன் பேச்சுவார்த்தையில் ஈடுபட்டு சுமுகமான தீர்மானங்களை எடுத்தேன்.

சம்மி சில்வா தலைமையிலான நிறைவேற்று சபையை கலைத்து இடைக்கால குழுவை விளையாட்டுத்துறை அமைச்சர் நியமித்தார்.அது தற்போது பாரிய நெருக்கடிக்குள்ளாக்கப்பட்டுள்ளது.இந்த இடைக்கால குழு நியமனம் தொடர்பில் அமைச்சரால் வெளியிடப்பட்ட வர்த் தமானியில் பல குறைபாடுகள் காணப்படுகின்றன.

இவ்வாறான பின்னணியில் தான் நீதிமன்றம் இடைக்கால தடையுத்தரவு பிறப்பித்துள்ளது.

பாராளுமன்ற நிலையியல் கட்ட ளையில் 83 ஆவது பிரிவில் நீதிமன்றத்தில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டுள்ள விடயம்,நீதிபதிகள் மற்றும் நீதிமன்ற கட்டமைப்பை விமர்சிக்கும் வகையில் கருத்து தெரிவிப்பது தவிர்க்கப்பட வேண்டும் என குறிப்பிடப்பட்டுள்ளது.

ஆனால் கிரிக்கெட் தொடர்பான விவாதத்தில் மேன்முறையீட்டு நீதிமன் றத்தின் நீதியரசர் மீது பாரதூரமான குற்றச்சாட்டுகள் முன்வைக்கப்பட்டன.

இந்த குற்றச்சாட்டு தொடர்பில் இலங்கை சட்டத்தரணிகள் சங்கம் அறிக்கை வெளியிட்டுள்ளது.முன்வைக்கப்பட்ட குற்றச்சாட்டுகள் தொடர்பில் விசாரணைகளை மேற்கொள்ள வேண்டும்.நீதியரசர் குற்றமிழைத்திருந்தால் அவருக்கு தண்டனை வழங்க வேண்டும். இல்லாவிடின் குற்றச்சாட்டை முன்வைத்த அமைச்சருக்கு தண்டனை வழங்க வேண்டும் என குறிப்பிடப்பட்டுள்ளது.

ஆகவே இவ்விடயம் எதிர்மறையான முரண்பாட்டை தோற்றுவித்துள்ளது.

கிரிக்கெட் சபையை பலப்படுத்துவதாக குறிப்பிட்டுக் கொண்டு பலவீனப் படுத்தும் செயற்பாட்டை முன்னெடுப்பதை அமைச்சர் தவிர்த்துக் கொள்ள வேண்டும். கிரிக்கெட் சபையுடன் கலந்துரையாடி ஒரு தீர்மானத்தை எடுக்க வேண்டும் - என்றார்.

(அ)

# 19 வயது உலகக்கிண்ண போட்டியை இழக்கநேரிடும்

## இலங்கை கிரிக்கெட் பதில் செயலாளர்



கொழும்பு, நவ. 12

இலங்கை கிரிக்கெட் நிறுவனம் மீது அபத்தமான குற்றச்சாட்டுக்களை சுமத்தாமல், தற்போதுள்ள சட்டத்தின் பிரகாரம் பொலிஸில் முறைப்பாடு செய்யலாம் என இலங்கை கிரிக்கெட்டின் பதில் செயலாளர் கிரிஷாந்த கபுவத்த தெரிவித்துள்ளார்.

பாராளுமன்ற சிறப்புரிமைகள் என்ற போர்வையில் விளையாட்டுத்துறை அமைச்சர் தனது நிறுவனத்தை குற்றஞ்சாட்டி வருவதாக நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் அவர் தெரிவித்தார்.

மக்களை தவறாக வழிநடத்தும் இவ்வாறான கருத்துக்களால் நாட்டுக்கு எந்தப் பயனும் இல்லை எனவும், கிரிக்கட்டை மீட்பதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்பட வேண்டுமெனவும் பதில் செயலாளர் தெரிவித்துள்ளார்.

குறுகிய அரசியல் நோக்கங்களை முன்வைத்து பல்வேறு குற்றச்சாட்டுக்களை முன்வைக்காமல் தவறுகள் இருப்பின் பொலிஸில் முறைப்பாடு செய்யுமாறும், இது தொடர்பில் தேவையான சகல உதவிகளையும் வழங்குமாறும் கிரிஷாந்த கபுவத்த தெரிவித்தார்.

கிரிக்கெட் நிறுவனத்தின் அதிகாரிகளுக்கு எந்தவித அரசியல் தொடர்புகளும் இல்லை, குறுகிய அரசியல் பார்வைகளும் இல்லை எனவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

போட்டியில் வெற்றி பெறும்போது ஒளிந்து கொள்பவர்கள் அனைவரும் போட்டியில் தோற்றால் குற்றம் சுமத்த முன்வருகின்றனர் என கிரிக்கெட் நிறுவனத்தின் பதில் செயலாளர் தெரிவித்துள்ளார்.

மீண்டும் கிரிக்கெட்டை கட்டியெழுப்ப நேற்றைய செயற்குழு கூட்டத்தில் ஏகமனதாக தீர்மானம் எடுக்கப்பட்டதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

அதற்காக விளையாட்டுத்துறை அமைச்சரையும் அழைக்கவுள்ளதாக கிரிக்கெட் நிறுவனத்தின் பதில் செயலாளர் தெரிவித்துள்ளார்.

அடுத்த வாரம் அதற்கான கலந்துரையாடலில் தலைவர் கலந்து கொள்வார் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இந்தத் தடை காரணமாக இலங்கை அணி 19 வயதுக் குட்பட்டோருக்கான ஆசியக் கிண்ணப் போட்டிகளுக்குச் செல்ல முடியாது எனவும், எதிர்வரும் ஜனவரி மாதம் இலங்கையில் நடைபெறவுள்ள 19 வயதுக்குட்பட்டோருக்கான உலகக் கிண்ணத்தை அவர்கள் இழக்க நேரிடும் எனவும் கிரிஷாந்த கபுவத்த தெரிவித்துள்ளார்.

# இறை தீர்ப்பு ஒன்று உண்டு என்ற நம்பிக்கையோடு நாம் வாழ்வோம்

## தீபாவளிச் செய்தியில் செஞ்சொற் செல்வர் ஆறுதிருமுருகன்



யாழ்ப்பாணம், நவ. 12

இவ்வுலகம் இறைவனின் படைப்பு. எல்லோரும் இன்புற்று வாழ்வதற்கு இறைவன் நல்ல இயற்கையைப் படைத் தான். மண்ணில் வாழும் மனி தர்கள் பிறவியின் மகிமையை உணர்ந்து நல்லவண்ணம் வாழவேண்டும். அதாமத்தின் வழியில் நின்றவர்கள் அழிந்து போவார்கள். அதனை உணர்த்துகின்ற திருநாளே தீபாவளி என தெல்லிப்பளை துர்க்காதேவி தேவஸ்தானத்தின் தலை வரும் அகில இலங்கை இந்து மாமன்றத்தின் உபதலைவருமான செஞ் சொற் செல்வர் ஆறு திருமுருகன் தெரிவித்துள்ளார்.

அவர் தனது வாழ்த்து செய்தியில்-


நரகாசுரன் என்ற அசுரன் பலரை வருத்தினான். அருள் கொடுத்த இறைவன் அறத்தின் பால் நின்று அவனை அழித்தான். வாழும் மனிதர்கள் ஒவ்வொருவரும் கடவுள் தந்த வாய்ப்புக்களைக் கருத்தில் கொண்டு நன்றியோடு வாழ வேண்டும். பிறர்க்கு உதவவேண்டும். ஆணவத்தால் பிறரை வருத்தக்கூடாது. அகந்தை என்னும் இருளில் இருந்து நாம் வெளியே வரவேண்டும். ஒளியேற்றிக் கொண்டாடும் தீபாவளி உயர்ந்த கருத்தை விளக்கி நிற்கிறது.

உலகில் உயர்ந்த தர்மம் நிலைக்க வேண்டும். அநியாயமாகப் போர்களின் வலுவால் ஒன்றுமறியா அப்பாவிக் குழந்தைகள் அல்லலுறுவதைக் காண்கிறோம். எங்கள் மண்ணில் நீதி, நியாயத்துக்கு ஆபத்து வந்துவிட்டது. இறை தீர்ப்பு ஒன்று உண்டு என்ற நம்பிக்கையோடு நாம் வாழ்கிறோம். எப்பவோ ஒருநாள் தர்மம் நிலைக்கும். அதனை அனைவரும் எதிர்பார்ப்போம்.

தீபத்திருநாளில்“ அனைவரும் திருக்கோவில்களுக்குச் சென்று பிரார்த்திப்போம். நீதி நிலைத்து நிம்மதியாக அனைவரும் வாழத் தெய்வங்களை மன்றாடுவோம். உற்றார், உறவினர் நண்பர்களுக்கு நல்வாழ்த்துக்களைத் தெரிவித்து அவர்களின் நல்லாதரவைப் பெறுவோம். ஆனந்தமாக அனைவரும் வாழ எனது இதயபூர்வமான ஆசிகளையும் நல்வாழ்த்துக்களையும் தெரிவித்து அமைகிறேன்-என்று கூறியுள்ளார். (அ)

இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 12.11.2023 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

# நாம் அதிகம் கவனிக்காத புற்றுநோயின் 10 அறிகுறிகள் என்னென்ன?




புற்றுநோய் என்ற வார்த்தையைக் கேட்டால், அனைவருக்கும் அபாயகரமான விளைவுடன் கூடிய ஒரு ஆபத்தான நோய்தான் நினைவுக்கு வரும்.

ஆனால் 1970 களில் இருந்து, புற்றுநோயிலிருந்து பிழைத்து உயிர்வாழும் விகிதம் மூன்று மடங்கு அதிகரித்துள்ளது. இதற்குக் காரணம் ஆரம்பக் கால நோயறிதல்.

உண்மையில், பெரும்பாலான புற்றுநோய்கள் அதிகமாக வளர்ச்சியடைவதற்கு முன்பே கண்டறியப்பட்டால், சிகிச்சையளிக்கப் படக்கூடியவை.

பிரச்னை என்னவென்றால், பல சமயங்களில், மருத்துவரைத் தொந்தரவு செய்ய விரும்பாததாலும், அதற்கு போதுமான முக்கியத்துவம் கொடுக்காததாலும், நாம் ஆரம்பகால நோயறிதலுக்கு முக்கியமான சில அறிகுறிகளை புறக்கணிக்கிறோம்.

கான்சர் ரிசேர்ச் யுகே என்ற அமைப்பு நடத்திய ஆய்வின்படி, இங்கிலாந்தில் பாதிக்கும் மேற்பட்டவர்கள் சில சமயங்களில் புற்றுநோயின் இருப்பைக் குறிக்கும் அறிகுறிகளில் ஒன்றை அனுபவித்திருக்கிறார்கள். ஆனால் இவர்களில் 2 வீதம் பேர் மட்டுமே தாம் இந்த நோயால் பாதிக்கப்படுவோம் என்று நினைத்தார்கள். மேலும் மூன்றில் ஒரு



பகுதியினர் இந்தச் சமிக்ஞைகளை முற்றிலும் புறக்கணித்துவிட்டனர்.

இந்த ஆராய்ச்சியை மேற்கொண்ட லண்டனில் இருக்கும் யுனிவர்சிட்டி காலேஜைச் சேர்ந்த ஆராய்ச்சியாளர் கத்ரீனா விட்டேக்கர், மக்கள் தங்கள் உடல்நிலையைப் பற்றிக் காரணமில்லாமல் கவலைப்படக் கூடாது என்கிறார். "ஆனால் நிறைய மக்கள் மருத்துவரிடம் செல்ல வெட்கப்படுகிறார்கள். அவர்கள் நேரத்தை வீணடிக்கப் போகிறோம் என்றோ, சுகாதார அமைப்பின் வளங்களை வீணடிக்கப் போகிறோம் என்றோ நினைக்கிறார்கள்," என்கிறார்.

மேலும் பேசிய அவர், "உங்களுக்கு மறைந்து போகாத அறிகுறிகள் இருந்



தால், குறிப்பாக புற்றுநோய்க்கான அறிகுறிகளாகக் கருதப்படுபவை இருந்தால், நீங்கள் அவற்றைப் புறக்கணிக்கக் கூடாது, மருத்துவரிடம் சென்று உதவி பெற வேண்டும்," என்று அவர் கூறுகிறார்.

அமெரிக்க புற்றுநோய் சங்கத்தின் அறிவுரைப்படி, புற்றுநோயின் இந்த 10 அறிகுறிகளை நீங்கள் புறக்கணிக்கக் கூடாது.

**1. காரணமில்லாத உடல் எடை இழப்பு**

புற்றுநோயால் பாதிக்கப்பட்ட பெரும்பாலான மக்கள் ஒரு கட்டத்தில் உடல் எடையை இழக்கின்றனர்.

எந்தக் காரணமும் இல்லாமல் உடல் எடை 5 கிலோ அல்லது அதற்கு மேற்பட்டு குறைந்தால், அது புற்றுநோயின் முதல் அறிகுறியாக இருக்கலாம்.

கணையம், வயிறு, உணவுக்குழாய் அல்லது நுரையீரல் புற்றுநோய்களால் இது அடிக்கடி நிகழ்கிறது.

**2. அடிக்கடி காய்ச்சல்**

புற்றுநோயால் பாதிக்கப்பட்ட நோயாளிகளுக்கு காய்ச்சல் வருவது மிகவும் பொதுவானது. புற்றுநோய் தொடங்கிய இடத்திலிருந்து பரவ ஆரம்பித்தப் பிறகு இது அடிக்கடி நிகழ்கிறது.

புற்றுநோயால் பாதிக்கப்பட்ட ஒவ்வொருவரும் ஒரு கட்டத்தில் காய்ச்சலை அனுபவிப்பார்கள். புற்றுநோய் அல்லது அதன் சிகிச்சைகள் நோயெதிர்ப்பு மண்டலத்தை பாதிப்பதால் இது நிகழ்கிறது.

பொதுவாக, காய்ச்சல், ரத்தப் புற்றுநோய் அல்லது நிணநீர்க்குழியப் புற்றுநோய் போன்ற புற்றுநோய்களில் ஆரம்ப அறிகுறியாக இருக்கலாம்.

**3. தீவிரமான உடல் சோர்வு**

ஓய்வெடுத்தாலும் தீராத தீவிரமான உடல் சோர்வும் ஒரு அறிகுறி.

புற்றுநோய் பரவும்போது இது ஒரு முக்கியமான அறிகுறியாக இருக்கலாம். லுகேமியா போன்ற சில புற்றுநோய்களில், முதலில் சோர்வு ஏற்படலாம்.

சில பெருங்குடல் அல்லது வயிற்றுப் புற்றுநோய்கள் வெளிப்படையாகத் தெரியாத இரத்த இழப்பை ஏற்படுத்தும். அதனாலும் உடல் சோர்வு ஏற்படலாம்.

**4. தோலில் ஏற்படும் மாற்றங்கள்**

தோல் புற்றுநோய்களுடன், வேறு சில புற்றுநோய்களும் வெளிப்படையாகத் தெரியும் தோல் மாற்றங்களை ஏற்படுத்தும்.

இதற்கான அறிகுறிகள்:

சருமம் கருமையாகுதல், தோல் மற்றும் கண்கள் மஞ்சள் நிறமாக மாறுதல், தோல் சிவத்தல், அரிப்பு, அதிகப்படியான முடி வளர்ச்சி.

**5. மலம் அல்லது சிறுநீர் கழிக்கும் பழக்கத்தில் மாற்றங்கள்**

மலச்சிக்கல், வயிற்றுப்போக்கு அல்லது உங்கள் மலத்தின் அளவு நீண்டகாலமாக மாறுவது பெருங்குடல் புற்றுநோயின் அறிகுறியாக இருக்கலாம்.

மறுபுறம், சிறுநீர் கழிக்கும் போது வலி, சிறுநீரில் இரத்தம் அல்லது சிறுநீர்ப்பை செயல்பாட்டில் ஏற்படும் மாற்றங்கள் (அதிகமாகவோ அல்லது குறைவாகவோ சிறுநீர் கழிப்பது போன்றவை) சிறுநீர்ப்பை அல்லது புரோஸ்டேட் புற்று நோய்களுடன் தொடர்புடையதாக இருக்கலாம்.

**6. ஆறாத காயங்கள்**

மச்சங்கள் - குறிப்பாக வளரும், வலி ஏற்படுத்தும், அல்லது இரத்தம் கசியும் மச்சங்கள் புற்றுநோயின் அறிகுறிகளாக இருக்கலாம் என்பது பலருக்கும் தெரியும்.

ஆனால் நான்கு வாரங்களுக்கு மேல் குணமடையாத சிறிய காயங்கள் குறித்தும் நாம் கவனமாக இருக்க வேண்டும்.

ஆறாத வாய்ப் புண் வாய்ப் புற்றுநோயின் அறிகுறியாக இருக்கலாம்.

நீண்ட காலமாக ஆறாத வாயில் ஏற்படும் எந்த மாற்றமும் உடனடியாக ஒரு மருத்துவர் அல்லது பல் மருத்துவரால் பரிசோதிக்கப்பட வேண்டும்.

ஆண்குறி அல்லது பெண்ணுறுப்பில் ஏற்படும் புண்கள், தொற்று அல்லது ஆரம்ப நிலை புற்றுநோயின் அறிகுறியாக இருக்கலாம். இவையும் ஒரு மருத்துவரால் பரிசோதிக்கப்பட வேண்டும்.

**7. இரத்தப்போக்கு**

புற்றுநோயுடன் ஆரம்ப அல்லது மேம்பட்ட நிலைகளில் அசாதாரண இரத்தப்போக்கு ஏற்படலாம்.

இருமும் போது இரத்தம் வருவது நுரையீரல் புற்றுநோயின் அறிகுறியாக இருக்கலாம்.

மறுபுறம், மலத்தில் இரத்தம் தோன்றினால் (இது மிகவும் கருமையான நிறத்தில் இருக்கலாம்) அது பெருங்குடல் புற்றுநோய் அல்லது மலக்குடல் புற்றுநோயின் அறிகுறியாக இருக்கலாம்.

கர்ப்பப்பையின் உட்பரப்பின் புற்றுநோயால், கருப்பையிலிருந்து அசாதாரண ரத்தப்போக்கு ஏற்படலாம்.



மேலும், சிறுநீரில் இரத்தம் வருவது சிறுநீர்ப்பை அல்லது சிறுநீரகப் புற்றுநோயின் அறிகுறியாக இருக்கலாம்.

முலைக் காம்பிலிருந்து இரத்தம் தோய்ந்த கசிவு வெளிவருவது மார்பகப் புற்றுநோயின் அறிகுறியாக இருக்கலாம்.

**8. உடலில் தடிப்பு அல்லது கட்டிகள்**

பல புற்றுநோய்களை தோலில் ஏற்படும் மாற்றங்கள் மூலம் உணர முடியும்.

இந்தப் புற்றுநோய்கள் முக்கியமாக மார்பகங்கள், விரை, நிணநீர் கணுக்கள் (சுரப்பிகள்) மற்றும் உடலின் மென்மையான திசுக்களில் ஏற்படுகின்றன.

தடிப்பு அல்லது கடினமாக்குதல் புற்றுநோயின் ஆரம்ப அல்லது மேம்பட்ட நிலையின் அறிகுறியாக இருக்கலாம்.

**9. விழுங்குவதில் சிரமம்**

தொடர்ந்து அஜீரணம் அல்லது விழுங்குவதில் சிரமம் இருந்தால் அது உணவுக்குழாய், வயிறு அல்லது குரல்வளை (தொண்டை) புற்றுநோயின் அறிகுறிகளாக இருக்கலாம்.

இருப்பினும், இந்தப் பட்டியலில் உள்ள பெரும்பாலான அறிகுறிகளைப் போலவே, அவை பெரும்பாலும் புற்றுநோயைத் தவிர வேறு காரணங்களாலும் ஏற்படுகின்றன.

**10. தொடர் இருமல் அல்லது தொண்டை கரகரப்பு**

தொடர் இருமல் நுரையீரல் புற்றுநோயின் அறிகுறியாக இருக்கலாம்.

மூன்று வாரங்களுக்கு மேல் இருமலால் பாதிக்கப்பட்டிருந்தால், மருத்துவரை அணுகுவது நல்லது.

தொண்டை கரகரப்பு குரல்வளை அல்லது தைராய்டு சுரப்பிப் புற்றுநோயின் அறிகுறியாக இருக்கலாம்.